25.00

பக்கம் 08 பக்கம் 10 பக்கம் 12 பக்கம் 19

பக்கங்கள் : 30

www.onlineuthayan.com

# உதயன்

சுடர் 27
கதிர் 235

வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 03 புதன்கிழமை (18/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

### ஆஸிக்கான இலங்கை தூதுவர் சமரசிங்க வெளியேற வேண்டும்

கான்பரா,ஜூலை 18
போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இலங்கைத் தூதுவர் அட்மிரல் திசார சமரசிங்கவை ஆஸ்திரேலியாவை விட்டு 04

## அரச தரப்பு வேட்பாளர்கள் பட்டியலில் பெரும் குழப்பம்

மட்டக்களப்பு, ஜூலை 18
கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளை நண்பகலுடன் நிறைவடையவுள்ள சூழ்நிலையில், அரச தரப்பின் வேட்பாளர் பட்டியல் பெரும் குழப்பநிலைக்கு முகங்கொடுத்துள்ளது.

ஐ.ம.சு.மு. அரசின் பங்காளிக் கட்சிகளான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் மற்றும் சு.க. என்பன வேட்புமனுப் பத்திரத்தில் கையெழுத்திட்ட நிலையிலும் ஏனைய மூன்று முஸ்லிம் பங்காளிக் கட்சிகளினாலேயே இந்தக் குழப்ப 04

# கிழக்கில் உள்ள காணிகளை இரகசியமாக விற்கும் அரசு

## அம்பலப்படுத்துகிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 18
கிழக்கில் உள்ள அரச காணிகள் எவருக்கும் தெரியாமல் கிழக்குக்கு வெளியே உள்ளவர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் எரிபொருள்களை வழங்குவது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-
லஞ்ச, ஊழல் ஆணைக் குழுவை 04

### தமிழகத்தில் ஈழச்சிறுமி படுகொலை

சென்னை, ஜூலை 18
தமிழகத்தில் ஈழத்தமிழர் முகாமில் காணாமல்போயிருந்த சிறுமி, கொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம் மேட்டுப்பட்டியிலுள்ள ஈழத் தமிழர் மறுவாழ்வு முகாமில் ஸ்ரீநிதி என்ற 6 வயது சிறுமி கடந்த ஞாயிற்றுக்கிழமை காணாமல் போயிருந்தார்.

இந்த நிலையில் திருச்சி நெடுஞ்சாலையில் உள்ள ஒரு பாலத்தின் கீழ் சிறுமி கழுத்து அறுபட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக அதே முகாமைச் சேர்ந்த கண்ணன் (வயது - 27) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். பாலியல் பலாத்காரம் செய்து சிறுமியைக் கொன்றதாக குறித்த நபர் ஒப்புக்கொண்டுள்ளார்.

# நெல்லியடி ஆர்ப்பாட்டத்துக்கு தடைவிதிக்க நீதிமன்று மறுப்பு

## பொலிஸ் பாதுகாப்புடன் இன்று பெருமெடுப்பில் நடக்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை18
வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதியான நிமலரூபனின் கொலை மற்றும் வடக்கில் நில ஆக்கிரமிப்பு ஆகியவற்றைக் கண்டித்து நெல்லியடியில் இன்று நடக்கும் கவனஈர்ப்புப் போராட்டத்துக்கு தடை விதிக்க பருத்தித்துறை நீதிவான் மன்று மறுத்து விட்டது. அதேநேரம் போராட்டத்துக்குப் போதிய பாதுகாப்பு வழங்குமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு அறிவுறுத்தியது.

பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் நாட்டின் புகழுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையிலும் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகக் கூறி பருத்தித்துறை நீதிமன்றத்தில் நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி மனு ஒன்றை நேற்றுத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு சட்ட முறைப்படி செய்யப்பட்டதல்ல என்று நிராகரித்த பருத்தித்துறை நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன், அதனடிப்படையில் உத்தரவு எதனையும் பிறப்பிக்க சட்ட ஏற்பாடுகள் இல்லை என்று தெரிவித்துவிட்டார்.

அதேநேரம் பொலிஸார் மன்றுக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையில் கவனவீர்ப்புப் போராட்டத்தைக் குழப்ப தீய சக்திகள் எவையும் முயலலாம் என்ற நியாயமான சந் 04

## பஸில், கோத்தபாய, லலித் வீரதுங்க அடுத்த வாரம் புதுடில்லி பயணம்

கொழும்பு, ஜூலை 18
இலங்கையின் உயர்மட்டக் குழு இந்த வாரத்தில் புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ளக் கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரைக் கொண்ட குழுவே புதுடில்லிக்குப் பயணம் மேற்கொள்ள வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவருகிறது.
எதிர்வரும் நவம் 04

## இலங்கை இராணுவ அதிகாரிகள் தமிழகத்தின் எதிர்ப்பினால் 'அவுட்'

சென்னை, ஜூலை 18
தமிழகக் கட்சிகளின் எதிர்ப்பை அடுத்து குன்னூர் வெலிங்டன் இராணுவக் கல்லூரியில் நடைபெறும் கருத்தரங்கில் பங்கேற்றிருந்த இலங்கை இராணுவத்தினர் நேற்றுக்காலை கருத்தரங்கிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இலங்கை அதிகாரிகள் நேற்று நாடு திரும்பினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விமானப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சியளிப்பதற்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையில், குன்னூர் கருத்தரங்கில் இலங்கைப் படையினர் பங் 04

### வலி.வடக்கின் சில பகுதிகளில் வெள்ளியன்று மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 18
தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீளக்குடியமராத மக்களில் ஒரு தொகுதியினரை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்குரிய நடவடிக்கை கள் மேற்கொள் ளப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, தந்தை செல்வாபுரம், வீமன்காமம் ஆகிய பகுதிகளிலேயே மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். 04

## தேர்தல் கால விலை குறைப்பு சமூகத்தின் மீதான ஊழல்

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 18
தேர்தல் காலத்தில் விலை குறைப்பு இடம்பெறுவது சமூகத்தின் மீதான இலஞ்ச ஊழலாகும் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், 2011ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் யாழ். மக்களுக்குப் பட்டுச் சேலைகள், வேஷ்டிகள் ஆகியன வழங்கப்பட்டதையும் சபை 04

## விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு ஹெல உறுமய அச்சுறுத்தல்

கொழும்பு, ஜூலை 18
பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதைத் தடைசெய்யவேண்டுமென வலியுறுத்தி தாம் சட்டமூலமொன்றைக் கொண்டுவந்துள்ளதால், ஜாதிகஹெல உறுமயவின் உறுப்பினர் உதய கம்மன்பில தனக்கு ஊடகங்கள் வாயிலாக அச்சுறுத்தல்களை விடுத்துவரு 04

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

## மட்டு. வேட்புமனு இன்று தாக்கல்

மட்டக்களப்பு, ஜூலை 18
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட வேட்புமனு இன்று புதன்கிழமை தாக்கல் செய்யப்படவுள்ளது. 04

# உரிமைகளை அடைவதற்கு போராட்டங்களே ஒரே வழி

### அனைவரும் அணிதிரள வேண்டும் என்கிறார் அருட்தந்தை ஜெயக்குமார்

யாழ்ப்பாணம், ஜூலை 18
எமது உரிமைகள் மறுக்கப்படும் சந்தர்ப்பங்களில் நாம் எவ்வாறு போராடாமல் இருக்க முடியும். போராடாமல் விட்டால் எமக்கான எந்த உரிமையும் கிடைக்காது. எனவே சாத்வீகப் போராட்டங்களிலாவது நாம் இறங்க வேண்டும் என கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் அருட்திரு சி.ஜி. ஜெயக்குமார் தெரிவித்தார். 04

ஒரு மணித்தியாலத்தில் கொழும்பில் !
• தினமும் கொழும்பிற்கான விமான சேவைகள்
• இணையத்தளத்தின் கூடாக பதிவு செய்யலாம்
• எக்ஸ்போ எயார் நிர்வகிக்கும் தங்குமிட வசதிகளுடன் கூடிய யாழ்ப்பாண சுற்றுலா ஒழுங்கமைப்பு
EXPOAIR
EXPO AVIATION (PVT) LTD.
No 141 F, Palaly Road, Thirunelvely, Jaffna.
Tel: +94 21 2223891/2223790
Fax: +94 21 2226297 - Mobile: 0773 788795
Email: jaffna@expoavi.com - Website: www.expoavi.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மீனவர்களை தொடர்ந்து அரசு புறக்கணிப்பு

## மீனவர் பிரச்சினைகளை ஆராயும் மாநாட்டில் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜூலை 18

வடக்கு - கிழக்கு மீனவர் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இலங்கை அரசு பாராமுகமாக இருக்கிறது. இதனால் மீனவர்கள் பல்வேறு வகையான தொழில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. மன்னாரில் மீனவர்களுக்குப் பாஸ் நடைமுறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு மீனவச் சங்கங்களை சுதந்திரமாக அமைக்க முடியாத நிலை எனப் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. வடக் கின் வசந்தம் என்பது வெறும் கட்டடங்களாக உள்ளதே யன்றி, அது மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்த வில்லை.

இவ்வாறு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் திட்ட இணைப்பாளரும், வடக்கு - கிழக்குக்கான இணைப்பாளருமான யேசுதாஸன் குற்றஞ்சாட்டினார்.

'இந்திய இழுவைப் படகுகளின் தாக்கமும் வடக்கு மீனவ சமூகம் தற்போது முகம்கொடுக்கும் பிரச்சினைகளும்' என்ற தொனிப் பொருளில் கலந்துரையாடல் ஒன்று நேற்று நல்லூரில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசின் நடவடிக்கைகள் போதாமல் உள்ளன. மேலும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் வடபகுதி மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. மேலும் மீனவர்களுக்குப் பாஸ் நடைமுறையைக் கடற்படையினர் கடைப்பிடிப்பதால் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மீனவ சமாசங்களை சுதந்திரமாக அமைக்க முடியாத நிலை காணப்படுகிறது. இவ்வாறு வடபகுதி மீனவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற போதும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு இலங்கை அரசுமுனையவில்லை-என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சி.தவரட்ணம்,

எமது வடபகுதி மீனவர்களின் வளங்கள் இவ்வாறு அத்துமீறி மீன்பிடி மேற்கொள்பவர்களால் இன்னும் 2 வருடங்களில் அழிந்து போகக் கூடும்.

இதற்காக நாங்கள் பல்வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைத்துப் பல போராட்டங்களை நடத்தியுள்ளோம்.

ஒரு சமூகத்தை முற்றுமுழுதாக இல்லாதொழிக்கும் - ஒடுக்கும் செயற்பாடுகளுக்கு எதிராக ஒன்றிணைந்து போராட வேண்டும். எம்மைப் போராட வேண்டிய நிலைக்கு இந்த அரசு தள்ளியுள்ளது.

இன்னமும் பாஸ் நடைமுறை எதற்காகப் பின்பற்றப்படுகிறது. முல்லைத்தீவில் தென்பகுதி மீனவர்கள் அத்துமீறி வந்து தொழிலில் ஈடுபடுகின்றனர். இதற்கு முல்லைத்தீவு சங்கத்தில் உள்ளவர்களும் ஒத்துழைக்கின்றனர்.

மேலும் அரச அதிகாரிகள் பாஸ் நடைமுறைக்கு லஞ்சம் வாங்குகின்றனர். இவ்வாறு எமது மீனவ சமுதாயம் பல்வேறுபட்ட பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளது. - என்றார். (த-5)

# கடுமையான நிதி நெருக்கடியில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## எரிபொருள் விநியோகம் சிக்கலில்

கொழும்பு, ஜூலை 18

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முகம் கொடுத்துள்ள தொடர் பிரச்சினைகள் காரணமாக எரிபொருள் விநியோகத்துக்குச் சிக்கல் ஏற்படும் நிலை உருவாகியுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

50 வீதத்தால் அதன் உற்பத்திகள் சரிந்துள்ளமை, தொடர்ச்சியான நட்டம், நிதி நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு வெளிநாட்டு வங்கிகள் கடன்களை வழங்க மறுத்துள்ளமை மற்றும் ஹெட்ஜிங் கொடுக்கல் வாங்கல் விவகாரம் என்பனவே இந்தச் சிக்கல் நிலைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எண்ணெய் சுத்திகரிப்பு இயந்திரங்கள் செயலிழந்து போயுள்ளமையால் இறக்குமதி செய்யப்படும் மசகு எண்ணெய் மூலமாக மேற்கொள்ளப்படும் பல்வேறு உற்பத்திச் செயற்பாடுகள் 50 வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கூட்டுத்தாபனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1965ஆம் ஆண்டில் பொருத்தப்பட்டுள்ள காலம் கடந்த உக்கிப்போன எண்ணெய்க் குழாய்கள் மற்றும் களஞ்சியத் தொகுதியை நவீனமயப்படுத்துவது குறித்து 3 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிநாட்டு வங்கிகளிடம் இருந்து 400 பில்லியன் டொலர்கள் கடன் கோரப்பட்டிருந்தது. ஆனால் பல்வேறு காரணிகளால் அந்தக் கடன்தொகை நிராகரிக்கப்பட்டுள்ளது.

'ஹெட்ஜிங்' ஒப்பந்தத்துக்கு அமைய வங்கிகளுக்குச் சேரவேண்டியுள்ள தொகைகள் செலுத்தப்படாமையால் நம்பகத்தன்மை இல்லாமல் போனதும் கூட்டுத்தாபனம் நீண்டகாலமாக எதிர்நோக்கும் நட்டம் என்பனவும் கடன்தொகை நிராகரிக்கப்படக் காரணம் என்று கூறப்படுகிறது.

கடந்த மூன்று மாத காலத்துள் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அடைந்துள்ள நட்டம் 20 பில்லியன் டொலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த நட்டம் 94 பில்லியன் டொலராகும்.

இவற்றைவிட கூட்டுத்தாபனத்தால் வெளிநாட்டு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியுள்ள கடன்களின் தொகை 113 பில்லியன் டொலர்களாகும்.

கடந்த 2008 ஆம் ஆண்டில் ஈரான் அரசுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய அரசால் கூட்டுத்தாபனத்துக்குப் புதிய எண்ணெய் சுத்திகரிப்புத் தொகுதி ஒன்றை நிறுவுவதற்கு 45 இலட்சம் ரூபா செலவு செய்யப்பட்டது. அதற்கெனப் பெரும் விழாவொன்றும் நடத்தப்பட்டது. ஆயினும் கடந்த ஆண்டு ஈரானினால் அந்தத் திட்டத்துக்கான கடன் மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைப்பாட்டின் காரணமாக நாட்டின் எரிபொருள் வர்த்தகத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பெரும் பகுதி இழக்கப்பட்டு இந்திய எண்ணெய் நிறுவனம் வர்த்தக சந்தையில் ஏகபோக ஆதிக்கம் செலுத்துவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் கூட்டுத்தாபன ஊழியர்கள் அபாய அறிவிப்புச் செய்துள்ளனர். (த-22)

# கடன் சுமையில் அரசு

கொழும்பு, ஜூலை 18

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனாகச் செலுத்தும் தொகை இந்த ஆண்டில் மட்டும் திடீரென 22 வீதத்தால் அதிகரித்துள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச காப்பீட்டுப் பத்திரங்கள் தொடர்பான வர்த்தக சந்தை வரி விகிதாசாரம் உயர்வடைதல், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைதல் போன்ற காரணிகளாலேயே மேற்படி கடன்களுக்காக அரசு வழமையாகச் செலுத்திவரும் தொகை வீக்கமடைந்துள்ளது. இதனால் கடன் சுமை அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-16-22)

# த.தே.ம.மு. உறுப்பினர்களின் வீடுகளுக்கு அதிகாலை கல்லெறி

## கழிவு ஒயிலும் வீசப்பட்டது

வடமராட்சி, ஜூலை 18

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு பிரமுகர்களின் வீடுகளுக்கு நேற்று அதிகாலை நேரம் கல்லெறியும், கழிவு ஒயில் வீச்சும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இனந்தெரியாதோர் இந்தச் செயல்களில் ஈடுபட்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகருமான ஆர்.இ.ஆனந்தராஜாவின் கொடிகாமம் வீதி, நெல்லியடியில் உள்ள வீட்டுக்கு இரவு நேரம் சுமார் 12 மணியளவில் இரு மோட்டார் சைக்கிள்களில் வந்தோர் இவரது வீட்டுக்கு முன் பக்கத்தில் உள்ள கடைத் தொகுதியின் மேல்மாடி ஜன்னல் கதவுகளை உடைத்து கழிவு ஒயிலையும் ஊற்றி விட்டுச் சென்றுள்ளனர்.

இதேபோல இந்த முன்னணியின் மற்றொரு பிரமுகரும் வடமராட்சி உழவு இயந்திர உரிமையாளர் சங்கத்தின் தலைவருமான காண்டீபன் என்பவரது வீட்டுக்கு நேற்று அதிகாலை 1.55 மணிக்கு மூன்று மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் வீட்டின் மீது 20இக்கும் மேற்பட்ட கற்களை வீசிவிட்டு, வீட்டுக் கேற்றுக்குக் கழிவு ஒயிலை ஊற்றியுள்ளனர்.

இந்தவேளை வீட்டில் உள்ளோர் எழுந்து சத்தம் இடவே அவர்கள் மோட்டார் சைக்கிள்களில் ஏறி ஓடி மறைந்துவிட்டனர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து ஆர்.இ.ஆனந்தராஜா நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திலும் காண்டீபன் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இன்று 18 ஆம் திகதி அரசின் நில அபகரிப்பைக் கண்டித்து நெல்லியடியில் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (த-8)

# மூன்று மாகாண சபைகளுக்கும் ஐ.தே.க. வேட்பாளர்கள் தயார்

## பட்டியல் இன்று வெளியாகும் என்கிறார் திஸ்ஸ

கொழும்பு, ஜூலை 18

சப்ரகமுவ, வடமத்தி, கிழக்கு ஆகிய மூன்று மாகாண சபைகளுக்குமான வேட்பாளர்களின் பட்டியல் தயாரிக்கப்பட்டுவிட்டன. அவை இன்று புதன்கிழமை உத்தியோகபூர்வமாகப் பகிரங்கப்படுத்தப்படும். வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னரே முதன்மை வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என்று ஐ.தே. கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் தமிழர், முஸ்லிம், சிங்களவர் என மூன்று இனத்தவர்களும் இடம்பெற்றுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் சசிதரன் தலைமையிலும் திருகோணமலையில் சின்னமாருக் தலைமையிலும் வேட்பாளர்கள் களம் இறங்குகின்றனர். முதல் முறையாக முஸ்லிம் பெண்மணி ஒருவர் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகளும் கருத்து வேற்றுமைகளும் ஏற்பட்டுள்ளன. சஜித் பிரேமதாச தனித்துச் செயற்படுவதாக ஆளும் கட்சியினர் பிரசாரம் செய்தனர். அதில் எந்த உண்மையும் இல்லை.

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் நடவடிக்கைகளை அவதானித்து அவ்வப்போது ஆலோசனை வழங்கவும் உயர் மட்ட மத்திய இணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதில் முக்கிய இடத்தை சஜித் பிரேமதாச வகிக்கிறார்.

தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிரேஷ்ட பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச உட்படப் பலர் கலந்து கொள்ளும் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் ஒரு மாவட்டத்துக்கு இரண்டு என்ற அடிப்படையில் நடத்தப்படும். பிரதான பிரசாரக் கூட்டங்கள் ஜூலை 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை தொடர்ச்சியாக நடைபெறும் - என்றார். (த-2)

# நேர்மையாகச் சேவையாற்ற முடியவில்லை; இதனாலேயே ஐ.தே.கவில் இணைந்தேன்

## எம்பிலிப்பிட்டிய பிரதேச சபைத் தலைவர் கூறுகிறார்

ஆளும் கட்சியின் பிரதேச சபைத் தலைவர் என்ற வகையில் எனக்குக் கிடைத்த அனைத்து வரப்பிரசாதங்களையும், வசதிகளையும், சலுகைகளையும் தூக்கி எறிந்து விட்டே நான் ஐ.தே.க.வில் இணைந்துள்ளேன். பிரதேச சபைத் தலைவராக இருக்கின்ற போதும் சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லை. எம்மை நம்பி வாக்களித்த மக்களுக்கு நேர்மையாகச் சேவைசெய்ய முடியவில்லை. இதனால் என்னைப் பிரதேச சபைத் தலைவராகத் தெரிவுசெய்த மக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர். மக்களின் ஏகோபித்த ஆதரவுடனேயே நான் ஐ.தே.க.வில் இணைந்துள்ளேன் எனக் குறிப்பிடுகிறார், ஆளும் கட்சியின் எம்பிலிப்பிட்டிய பிரதேசசபைத் தலைவராக இருந்து தற்போது ஐ.தே.க.வில் இணைந்து கொண்ட விஜய வித்தானகே.

ஐ.தே.க.வின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது, அவர் கூறியதாவது:

நான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ்வின் முழு ஆதரவுடன் கட்சியில் அகில இலங்கை இளைஞர் படையணியின் தலைவராகச் செயற்பட்டேன். அதன்மூலம் அரசியலில் காலூன்றி நான் அம்பாந்தோட்டை, மொனராகல மற்றும் எம்பிலிப்பிட்டிய மக்களின் நல் ஆதரவைப் பெற்றேன். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்று எம்பிலிப்பிட்டிய பிரதேச சபையின் தலைவரானேன்.

ஆனால் என்னால் சுதந்திரமாகச் செயற்பட முடியவில்லை. உயர் மட்டத்தின் தலையீடுகளும் அதிகாரத் [illegible] வரம் அடைந்துள்ளனர். சட்டம், ஒழுங்கு கேள்விக் குறியாகியுள்ளது. வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது. தனிப்பட்ட முறையில் எம்பிலிப்பிட்டிய பிரதேச சபையின் 31 லட்சம் ரூபா பணம், சபையின் அனுமதியின்றியே கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. தட்டிக்கேட்க முடியாது.

இதனால் எனது நண்பர்களுடனும் பிரதேசசபை சகாக்களுடனும் கலந்துரையாடிய பின்னரே நான் இந்த முடிவை எடுத்தேன். எனக் [illegible] ளி விட்டே இங்கு வந்துள்ளேன்- என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுப் பிரதான வீதிகளின் அகலிப்பை விரைவுபடுத்துங்கள்

## ஒப்பந்தகாரர்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பிரதான வீதிகளின் அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை விரைவுபடுத்துமாறு பணிகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். அலுவலகம் பணித்துள்ளது.

அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்கு முன்னர் முடிவுறுத்துமாறு ஒப்பந்தகாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

பல பிரதான வீதிகளின் அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. ஆயினும் அந்தப் பணிகளின் வேகம் குறைவாகவே உள்ளது. இதனையடுத்து இந்தப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்தகாரர்களுக்கு அவற்றைத் துரிதப்படுத்துமாறு பணித்துள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். குறிப்பாக யாழ். பருத்தித்துறை வீதி, ஏ-9 வீதி, கே.கே.எஸ். வீதி உட்பட பல பிரதான வீதிகளின் அகலிப்புப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அகலிப்புப் பணிகள் நடைபெறுகின்றமையால் இந்த வீதிகளூடான போக்குவரத்துக்களும் சிரமமாகவுள்ளன. வீதிகளில் உள்ள பாலங்கள், மதகுகள், வடிகால்கள் என்பனவும் உடைக்கப்பட்டு புதிதாக அமைக்கப்படுகின்றன. இந்தப் பணிகளின் காரணமாகவே அகலிப்புப் பணிகள் தாமதமடைவதாக ஒப்பந்தகாரர்கள் கூறுகின்றனர்.

ஆயினும் அகலிப்புப் பணிகளை துரிதப்படுத்தி அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள் பணிகளை முற்றாக முடிக்கக்கூடிய வகையில் செயற்படுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை ஒப்பந்தகாரர்களைக் கேட்டுள்ளது. அத்துடன் மழை காலமும் நெருங்குவதால் பணிகளை இப்போது இருந்தே துரிதப்படுத்துமாறும் கூறப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இந்த உத்தரவை அடுத்து பணிகளைத் துரிதப்படுத்துவதில் ஒப்பந்தகாரர்களும் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வீதி அகலிப்புக்கு வெட்டிய பள்ளத்தில் புதைந்தது லொறி



வலி.வடக்கு ஜூலை 18

சிமெந்து ஏற்றி வந்த லொறி எதிரே வந்த வாகனத்துக்கு இடமளிக்க முற்பட்ட வேளை பாதையை விட்டு விலகிப் புதையுண்டது. இந்தச் சம்பவம் மல்லாகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

காங்கேசன்துறையில் இருந்த சிமெந்து பைகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்த லொறி எதிரே வந்த வாகனத்துக்கு வழிவிட முற்பட்ட வேளை வீதி அகலிப்புப் பணிக்காக வெட்டப்பட்ட பள்ளத்தில் இறங்கியமையால் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வரையான பிரதான வீதி திருத்தும் பணிகள் இடம்பெறுகின்றன. திருத்தப்பட்ட பகுதிகளில் வீதியோரங்கள் பள்ளமாகக் காணப்படுகின்றன.

மழை பெய்தமையால் வீதியோரங்களில் காணப்படும் பள்ளங்களில் வாகனங்கள் புதையுண்டு விபத்துக்குள்ளாகின்றன. (த-86)

## இலங்கை சைவ மாநாடு 20ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வருடாந்தம் நடத்தும் அகில இலங்கை சைவ மாநாடு எதிர்வரும் 20ஆம், 21ஆம், 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சென்னையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் வை.இரத்தினசபாபதி தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டின் முதல் நாள் நிகழ்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். இந்த நிகழ்வில் வரவேற்புரையை சைவபரிபாலனசபை சமயப் பிரசார அமைச்சர் மு.திருஞானசம்பந்தபிள்ளையும், அருளுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும், அறிமுகவுரையை சைவபரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

மாநாட்டின் இரண்டாம் நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை அரங்கு காலை 9 மணிக்கு நடைபெறும். யாழ். பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் ''சம்பந்தர் பாடல்கள் காட்டும் தலைமைத்துவப் பண்புகள்'' எனும் தலைப்பில் முதுநிலை விரிவுரையாளர் திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன், ''சம்பந்தர் தேவாரப்பாடல்களில் தாய்மைப் பண்பு'' எனும் தலைப்பில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.ஜெயலக்சுமி, ''சம்பந்தர் பாடல்களில் பக்திரசம்'' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் தலைவர் பேராசிரியர் எ.என்.கிருஸ்ணவேணி, ''கவணியன் கட்டுரை'' எனும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் வை.இரத்தினசபாபதி ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

இரண்டாம் நாள் நிகழ்வின் மாலை அரங்கு மாலை 4 மணிக்கு சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் ''சம்பந்தர் பாடல்கள் புலப்படுத்தும் சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகள்'' எனும் தலைப்பில் உதவி விரிவுரையாளர் சின்னராசா ரமணராஜா, 'சம்பந்தர் பாடல்களில் அறிவாராய்ச்சி அடிப்படைகள்' எனும் தலைப்பில் உதவி விரிவுரையாளர் திருச்செல்வம் செல்வ மனோகரன், ''திருநெறிய தமிழ்'' எனும் தலைப்பில் சிவத்தமிழ்ச் செல்வர் ச.விநாயகமூர்த்தி, ''பெருமானம்'' எனும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் வை.இரத்தினசபாபதி ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அரங்கு முற்பகல் 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ணஐயர் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ''வினைப் போகமே ஒரு தேகம்'' எனும் தலைப்பில் கலாநிதி ஆறு.திருமுருகன், ''சிவனடியே சிந்திக்கும 'திருப்பெருகு சிவஞானம்'' எனும் தலைப்பில் சைவப்புலவர் சு.செல்லத்துரை, ''இளைத்தல்'' எனும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் வை.இரத்தினசபாபதி ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

அன்றைய தினம் மாலை அரங்கு மாலை 4 மணிக்கு சைவ பரிபாலன சபைத் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ''தமிழ் மந்திரம்'' எனும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், ''சைவ சித்தாந்தச் செம்பொருள்'' எனும் தலைப்பில் இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன், ''திருநெறி'' எனும் தலைப்பில் முனைவர் வை.இரத்தினசபாபதி ஆகியோர் உரை நிகழ்த்துவர். (த-14)

## வாடகைக்குப் பெறப்பட்டு கைமாற்றப்பட்ட வாகனம்

### மானிப்பாய் பொலிஸாரிடம் சிக்கியது

சங்கானை, ஜூலை 18

கொழும்பு கடவத்தையைச் சேர்ந்த திலீப் என்பவரிடமிருந்து வாடகையாகப் பெறப்பட்ட டொல்பின் வாகனம், யாழ். மாவட்டத்தில் மூன்று பேருக்கு கைமாற்றப்பட்டு பின்னர் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வாடகைக்கு பெறப்பட்ட வாகனத்தை திருப்பி ஒப்படைக்காத ஜெசிந்தன் என்பவருக்கு எதிராக வாகன உரிமையாளர் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸார் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சம்பந்தப்பட்ட வாகனம் ஆளரவமற்ற வளவில் பற்றைகளுக்கு மத்தியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த தகவலைப் பெற்றுக்கொண்ட மானிப்பாய் பொலிஸார், அதனை மீட்டு, உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் சாந்த, பொலிஸ் சார்ஜன்ட் சூரிய மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் அரிச்சந்திரா ஆகியோர் அடங்கிய குழுவே இந்த வாகனத்தை மீட்டுள்ளது. (த-29)

## தேர்த் திருவிழா நெரிசலில் பறிபோனது 8 பவுண் தாலி

வடமராட்சி, ஜூலை 18

அல்வாய் கிழக்கு மாலிச் சந்திப்பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழாவின்போது சனநெரிசலுக்கு மத்தியில் குடும்பப் பெண் ஒருவரின் 8 பவுண் தாலிக்கொடி அபகரிக்கப்பட்டுள்ளது.


உண்டுவத்தை, அல்வாய் தெற்கைச் சேர்ந்த திருமதி காமாட்சி சுப்பிரமணியம் என்பவரது தாலிக்கொடியே அபகரிக்கப்பட்டது.

சுவாமி தேருலா வந்து, தேர்முட்டியில் தேரில் இருந்த வேளை பெருந்தொகையானோர் குழுமி நின்று அர்ச்சனைகளைச் செய்து கொண்டிருந்தனர். இந்தப் பெண்மணியும் நெரிசலில் நின்றவாறு அர்ச்சனையைச் செய்து விட்டு வெளியே வந்து பார்த்தபோது தாலிக்கொடி கழுத்தில் இருந்து காணாமற்போயிருந்தது.

சனநெரிசலின் மத்தியில் அவர் அர்ச்சனைத் தட்டுடன் நின்ற வேளையிலேயே தாலிக்கொடி அபகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-8)

## தேரேறி வந்தான் மாவைக் கந்தன்



வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முற்பகல் 10 மணிக்கு பக்திபூர்வமாக நடைபெற்றது.

அதிகாலை முதல் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து முருகப் பெருமான் வள்ளி, தெய்வயானை சகிதம் சித்திரத் தேரில் பவனி வந்த அற்புதக் காட்சியைக் [illegible] இருந்தும் திரண்டு வந்திருந்த அடியார்கள் 'அரோஹரா, அரோஹரா' என்ற கோஷத்துடன் வடம் பிடித்து மகிழ்ந்தனர்.

படையினர், பொலிஸாருடன் சாரணர்கள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவினரும் கடமையில் ஈடுபட்டார்கள்.

ஆலய தெற்கு வீதி மண்டபத்தில் பத்துக்கும் மேற்பட்ட மேள வாத்தியக் குழுவினரின் கான மழையும் பொழிந்தது. தொடர்ந்து அன்னதானமும் இடம்பெற்றது. (ஒ-86)

நிகழ்வு

## இன்று

### விளையாட்டு நிகழ்வு

புலோலி வடமேற்கு அறிவகம் சனசமூக நிலையத்தின் 57 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நிலையமுன்றிலில் நடைபெறவுள்ளன.

நிலையத் தலைவர் த.அரவிந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக புலோலி வடமேற்கு கிராம சேவையாளர் அ.உமாசங்கர், ஜெகத்அபயகோன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப.யோகராஜா, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பிரதி அதிபர் அ.அரியரத்தினம், பருத்தித்துறை உடற்பயிற்சி ஆசிரியர் பொ.மகாதேவா, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவன் சி.ரஜனிகாந் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(த-78-237)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச தரப்பு...

நிலை தோன்றியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. மு.காவுக்கு கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் நேற்றுமுன்தினம் 12 வேட்பாளர்கள் ஒதுக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் நேற்றுக்காலை அதிரடியாக 11 ஆசனங்களாக அவை குறைக்கப்பட்டதனாலும், தே.காவுக்கு அம்பாறை மாவட்டத்தில் 2 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டதை அடுத்துமே இக்குழப்பகரமான சூழ்நிலையே தோன்றியுள்ளது.

மு.காவுக்குரிய அம்பாறை மாவட்ட வேட்பாளர் எண்ணிக்கையே குறைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 5 வேட்பாளர்கள் ஒதுக்கப்பட்டனர். இதனை மு.கா. வன்மையாக ஆட்சேபிக்க அமைச்சர் அதாவுல்லாவோ மேலும் ஓர் ஆசனத்தை தனது கட்சிக்கு அதிகரித்து மு.காவில் மேலும் ஓர் ஆசனத்தைக் குறைக்குமாறு அரசை வற்புறுத்தினார்.

இந்த இழுபறிநிலைக்கு மத்தியில் மு.கா., அ.இ.மு.கா. மற்றும் தே.கா. என்பன தத்தமது உயர்பீட கூட்டங்களை அவசர அவசரமாகக் கூட்டி ஆராய்ந்ததாகத் தெரியவருகின்றது.

## மட்டு. வேட்புமனு ...

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டமைப்பின் சார்பில் கி.துரைரெட்ணசிங்கம் தலைமையில் 14 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்கள் நேற்று கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட செயலகத்தில் வைத்து நியமனப் பத்திரத்தில் கையொப்பமிட்டனர். கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, பொன்.செல்வராஜா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். கூட்டமைப்பின் பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், ஞானமுத்து கிருஸ்ணமூர்த்தி ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். (த-30)

## இலங்கை இராணுவ ...

கேற்கக் கூடாது என தமிழகக் கட்சிகள் அங்கு கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி வழங்கக்கூடாது என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் மத்திய அரசைக் கடிதம் மூலம் கேட்டிருந்தார்.

இந்நிலையில் கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்த இலங்கை அதிகாரிகள் நேற்று இலங்கை திரும்பினர்.

தமிழகக் கட்சிகளான தி.மு.க. தலைவர் கருணாநிதி, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்டோர் இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்றக்கோரி தமது கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆஸிக்கான ...

வெளியேற்ற வேண்டும் என்று கிறீன் கட்சியின் செனட் சபை உறுப்பினர் லீ றியானொன் கோரிக்கை விடுத்துள்ளார். 2009இல் போர் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த போது, நாட்டை விட்டு வெளியேற முயன்ற அகதிகளை தடுத்த தாக அட்மிரல் திசார சமரசிங்க பெருமையாகப் பேசியுள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

அவரது தலைக்கு மேலே போர்க்குற்றச்சாட்டுகள் தொங்குவதாக செனட் உறுப்பினர் றியனொன் தெரிவித்துள்ளார்.

ஆனால், அட்மிரல் சமரசிங்கவுக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளை தாம் நான்கு மாதங்களுக்கு முன்னரே தள்ளுபடி செய்து விட்டதாக ஆஸ்திரேலிய சமஸ்டி பொலிஸ் உறுதி செய்துள்ளது. (த)

## உரிமைகளை...

'இந்திய இழு வைப் படகுகளின் தாக்கமும், வடக்கு மீனவர் சமூகம் தற்போது முகம் கொடுக்கும் பிரச்சினைகளும்' என்ற தொனிப்பொருளில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை நல்லூரில் இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இந்தப் பிரச்சினைகளுக்கு எமது வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக முகம் கொடுத்து வருகின்றனர். இந்த விடயத்தில் நாங்கள் மேற்கொண்ட பல நடவடிக்கைகளுக்குப் பயனில்லை.இந்த மீனவர் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ள இரு நாட்டு அரசுகளும் தான் இந்த விடயத்தில் முடிவு எடுக்க வேண்டும். ஆனால் இரண்டு அரசுகளும் இந்த விடயத்தில் ஆர்வமும் அக்கறையும் இல்லாது இருப்பது கவலைக்குரிய விடயமாகவுள்ளது. தமது மக்களின் துன்ப துயரங்களில் ஏன் இந்த அரசுகள் அமைதியாக உள்ளன. இதனை ஒரு போதும் ஏற்க முடியாது.

எனவே இரு நாட்டு அரசுகளின் கவனத்தையும் ஈர்க்க வேண்டுமானால் நாம் ஒன்று திரண்டு போராட வேண்டும். போராடாது இருந்தால் எதுவும் கிடைக்காது. இது உரிமையாக இருந்தாலும் சரி வாழ்வாதாரமாக இருந்தாலும் சரி.

முறியடிக்க தொடர்ச்சியான சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (த-5)

## கிழக்கிலுள்ள...

அமைப்பது தொடர்பான சட்டமூலம் 1994 இல் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வரப்பட்டபோது அதற்கு ஆதரவு வழங்கவேண்டு மென நான்தான் குரல் கொடுத்தேன்.

திருடர்களைப் பிடிப்பதற்காகத்தான் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. 1994 ஆம் ஆண்டிற்குப் பின்னர் உருவான திருடர்கள் பிடிக்கப்பட்டார்களா?

நாட்டில் ஊழல், மோசடிகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. இவை தொடர்பில் இந்த ஆணைக்குழு விசாரணை நடத்துகின்றதா?

கிழக்கில் அரச காணிகள் எவருக்கும் தெரியாமல் கிழக்கிற்கு வெளியே உள்ளவர்களுக்கு விற்கப்படுகின்றன. கிழக்கில் உள்ளவர்களுக்கு அல்ல. இப்போது புதையல் தோண்டும் புதிய ஊழல், மோசடி நாடெங்கிலும் இடம்பெற்று வருகின்றது. இதன்மூலம் பணம் சம்பாதிக்கப்படுகிறது.

ஊழல், மோசடி மிக்க நிறுவனங்கள் எத்தனையோ உள்ளன. அவற்றையெல்லாம் அழைத்து இந்த ஆணைக்குழுவால் விசாரிக்க முடியும்தானே? ஏன் அவ்வாறு செய்வதில்லை? - என்றார்.

## வலி.வடக்கின்...

மேற்படி பகுதிகள் இராணுவத்தினரால் கடந்த வருடம் மே மாதம் விடுவிக்கப்பட்டிருந்தன. இருப்பினும் இந்தப் பகுதி களில் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தினால் மக்கள் மீளக்குடியமர்வதற்குப் பின்னடித்து வந்தனர்.

இந்த நிலையில் எதிர்வரும் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்தியத் தூதர் அசோக் கே.காந்தா ஆகியோர் இந்த மீள்குடியமர்வு நடவடிக்கையை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

மீளக்குடியமரும் மக்களுக்கு 550 தற்காலிகக் கூடாரங்கள் வழங்கப்படவுள்ளன. மேலும் சில அடிப்படை வசதிகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-5)

## பஸில், கோத்தபாய...

பர் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மீளாய்வுக் கூட்டம் தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு குறித்து விளக்கமளிக்கவே இந்தக் குழு இந்தியா செல்லவுள்ளது.

இந்த மீளாய்வுக் கூட்டத்துக்கான இலங்கையின் பதில் அறிக்கை எதிர்வரும் 23ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

10,700 சொற்களைக் கொண்ட இந்த அறிக்கையை இலங்கையின் அமைச்சர் மகிந்த சமரசிங்க தயாரித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த அறிக்கை ஜனாதிபதியின் ஒப்புதலுக்காகக் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், இது ஐ.நா மனித உரிமைகள் சபையிடம் கையளிக்கப்படும்.

அதற்கு முன்னதாக, இந்த் உயர்மட்டக் குழு புதுடில்லி செல்லக் கூடும் என்று தெரிகிறது.

நவம்பரில் நடைபெறவுள்ள மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமைகள் நிலையை மீளாய்வு செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள மூன்று நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.

இந்தநிலையில், இந்தியாவை தன் கைக்குள் போட்டுக் கொள்ளவே இலங்கை அரசு மூவர் அணியை புதுடில்லிக்கு அனுப்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(த)

## விஜயதாஸ...

கின்றார் என்ற விடயத்தை நேற்று சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார் ஐக்கிய தேசிய கட்சியின் விஜயதாச ராஜபக்ஷ.

நாடாளுமன்றில் நேற்று சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை எழுப்பி கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

பௌத்த தேரர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடை செய்யவேண்டுமெனக் கோரி நான் சட்டமூல மொன்றைக் கொண்டு வந்துள்ள நிலையில், ஜாதிக ஹெல உறுமயவின் உறுப் பினர் உதயகம்மன்பில எனக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்கள் வாயிலாக அச்சுறுத்தல்களை விடுத்து வருகின்றார்.

ஊடகங்களில் அவர் பல வகையான கருத்துகளை வெளியிடுகின்றார். சட்ட விரோதமான கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன.விஜயதா என்ன புத்தபெருமானா என்றும் உதயகம்மன்பில ஊடகங்மொன்றுக்குக் கருத்து வெளியிட்டார்.

தர்மராஜ்யம் என்ற போர் வையில் இவர்கள் என்ன செய்கின்றனர் ? பௌத்த தர் மத்தைக் காக்கும் நோக்கில் தான் நான் இந்த சட்ட மூலத்தைக் கொண்டு வந் துள்ளேன்.

எனவே, ஊடகங்கள் வாயிலாக எனக்கு அச்சுறுத் தல் விடுக்கப்படும் விட யத்தை நான் உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன் சபாநாயகர் என்றார்.

## நெல்லியடி ஆர்ப்பாட்ட...

தேகம் மன்றுக்கு எழுந்திருப்பதால், அப்படி எதுவும் நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் போராட்டத்துக்குப் போதிய பாதுகாப்பை வழங்குமாறும் நீதிவான் பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

பருத்தித்துறை நீதிவான் மன்றில் மாலை 5 மணி முதல் சுமார் இரண்டு மணி நேரம் பொலிஸாரின் மனு தொடர்பிலான விசாரணை நடைபெற்றது.

நெல்லியடியில் தமிழ்த் தேசிய முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கவனயீர்ப்புப் போராட்டத்தை தடை செய்ய வேண்டும் என்று நேற்று மாலை பொலிஸார் திடீரென மனு ஒன்றை நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

இந்தப் போராட்டத்தால் அரச சொத்துக்களுக்கும் பொது மக்களின் சொத்துக்களுக்கும் சேதம் ஏற்படக்கூடும் என்றும் பொதுமக்களுக்கு இடையூறு விளையும் என்றும் பொலிஸார் தமது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்துடன், இன்றைய தினம் ஆடியமாவாசையை ஒட்டி நெல்லியடி வர்த்தகர்கள் தமது கடைகளை அடைப்பது வழமை என்றும் -

ஆனால், இதனையும் இந்தப் போராட்டத்தின் ஓர் அங்கமாகக் காட்டி தவறான தகவல்களைச் சர்வதேச ரீதியில் பரப்பி இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தமக்குப் புலானய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் - பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். இவற்றின் அடிப்படையில் போராட்டத்துக்குத் தடை விதிக்கும்படியும் கோரியிருந்தனர்.

தமிழ்த் தேசிய முன்னணியின் சார்பில் மன்றில் முற்பட்டிருந்த சட்டத்தரணிகளான யோ.சத்தியநாதன், சி.கந்தசாமி, வி.மணிவண்ணன் ஆகியோர் இதனை எதிர்த்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டம் ஒரு மணி நேரம் மட்டுமே நடக்கும் என்று தெரிவித்த அவர்கள், போராட்டத்தின் போது பொதுச் சொத்துக்களுக்கோ தனியார் சொத்துக்களுக்கோ பாதிப்பு ஏதும் ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் உறுதியளித்தனர்.

ஜனநாயக ரீதியில் அமைதியாகத் தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை இலங்கை நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் கொண்டிருக்கிறான் என்பதை அரசமைப்பின் உறுப்புரை 14 உறுதிப்படுத்துகின்றது என்பதை எடுத்துரைத்தனர்.

அதேநேரம், கொழும்பில் லிப்டன் சதுக்கம், கோட்டை ரயில் நிலையம், விகாரமா தேவி பூங்கா, ஹை பார்க் கோர்னர் ஆகிய இடங்களில் அடிக்கடி போராட்டங்கள் நடைபெறுகின்ற போது ஏன் யாழ்ப்பாணத்தில் மட்டும் ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்த முடியாது என்றும் அவர்கள் மன்றில் கேள்வி எழுப்பினர்.

''தெற்கில் ஒரு சட்டம் வடக்கில் ஒரு சட்டமா நடைமுறையில் உள்ளது?'' என்றும் கேள்வி எழுப்பினர்.

ஜனநாயக ரீதியாக நடக்கும் போராட்டங்களைத் தடுத்து நிறுத்துவதன் மூலமே நாட்டின் நற்பெயருக்குக் உலக அரங்கில் களங்கம் ஏற்படுத்தப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்கள்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன், பொலிஸார் சமர்ப்பித்த மனு சட்ட மதிப்பைக் கொண்டிராத காரணத்தால் அதன் மீது எந்த உத்தரவையும் இடமுடியாது என்று தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:-

பொலிஸார் ஒரு வழக்கை நீதிமன்றில் தாக்கல் செய்யும்போது, குற்றச் செயல்களுடன் தொடர்புடையதாக இருந்தால் 'பி' அறிக்கை தாக்கல் செய்வார்கள். இல்லையேல் 'ஏ' அறிக்கை மூலம் வழக்குகள் தாக்கல் செய்யப்படும். ஆனால், இவற்றில் எதுவுமில்லாமல் ஒரு வெள்ளைத் தாளில் இந்த முறைப்பாடு மன்றின் முன் வைக்கப்பட்டுள்ளது.

தண்டனைச் சட்டக்கோவையின் அடிப்படையிலோ அன்றி குற்றவியல் சட்டக்கோவையின் அடிப்படையிலோ இந்த மனு தாக்கல் செய்யப்படவில்லை. அசம்பாவிதங்கள் நிகழலாம் என்று தனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் பொறுப்பதிகாரி, போராட்டத்துக்குத் தடை விதிக்கக் கோரியிருக்கிறார்.

போராட்டத்தில் அசம்பாவிதம் நிகழலாம் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி நம்பினால் அவர் தனது சத்தியக் கடதாசியை இணைத்திருக்க வேண்டும். அதனையும் செய்யவில்லை. அசம்பாவிதம் நிகழக்கூடியதற்கான ஆதாரம் ஒன்றையாவது சமர்ப்பிக்கவும் இல்லை.

இந்த நிலையில், பொலிஸார் மன்றின் முன்வைத்துள்ள வெள்ளைத் தாள் முறைப்பாட்டின் அடிப்படையில் எந்தக் கட்டளையையும் இடுவதற்குச் சட்டத்தில் இடமில்லை என்பதால் பொலிஸார் கேட்டபடி போராட்டத்துக்கு என்னால் தடைவிதிக்க முடியாது.

இருப்பினும், எனது நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் எதுவித அசம்பாவிதங்களும் வன்முறைகளும் நடக்கக் கூடாது என்பதில் அதிக அக்கறை கொண்டவர் என்ற அடிப்படையில் பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்த தகவல்கள் குறித்து மன்று கவனத்தில் கொண்டுள்ளது.

பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த புலானாய்வுத் தகவல்களின் அடிப்படையில் ஏதோ ஒரு தீய சக்தி இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் அசம்பாவிதங்களை ஏற்படுத்தி, இலங்கை நாட்டில் உயரியதும் உன்னதமானதுமான அரசமைப்பு மக்களுக்கு வழங்கும் உரிமைகளைத் தடுப்பதற்கும் போராட்டம் நடக்காமல் செய்வதன் மூலம் நாட்டின் அரசமைப்புக்கு எதிராகச் செயற்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்ற நியாயமான அச்சம் இந்த மன்றுக்கு ஏற்படுகிறது.

எனவே நடக்க இருக்கும் கவனயீர்ப்புப் போராட்டத்தின்போது பொது மக்களின் சொத்துக்களுக்கும் அரச சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏதும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் விதத்திலும் அசம்பாவிதங்கள் ஏதும் நிகழாத வண்ணமும் பொலிஸார் போராட்டத்துக்குப் போதிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என்று இந்த மன்று அறிவுறுத்துகின்றது - என்று தெரிவித்தார். (உ-8)

## தேர்தல் கால...

யில் சுட்டிக்காட்டினார். சுயாதீன ஆணைக்குழுவின் முக்கியத்துவத்தை நல்லிணக்க ஆணைக்குழு தனது சிபார்சின் ஊடாக உணர்த்தியுள்ளது என்றும்அவர் குறிப்பிட்டார்.

லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு எரிபொருள்கள் வழங்குவது தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தலின்போது இலஞ்சம், கப்பம் போன்றன வழங்கப்படுவதுபோல எரிபொருள்களும் குறைக்கப்பட்டுள்ளன. தேர்தல் காலங்களில் விலை குறைப்பு இடம்பெறுவது சமூகத்தின் மீதான லஞ்ச ஊழலாகும். ஆனால், தேர்தல் முடிவடைந்த பின்னர் விலை குறைப்பு இடம்பெறுவதில்லை.

2011ஆம் ஆண்டு தேர்தல் நடந்தபோது யாழ்ப்பாணத்திலுள்ள மக்களுக்கு [illegible] போன்றன வழங்கப்பட[illegible] மாறு நாம் மக்களுக்குக் கூறினோம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் 57 ஆயிரம் பேர் இதுவரை குடியமர்த்தப்படவில்லை

## சபையில் ஆதாரங்களுடன் முன்வைத்தார் சரவணபவன் எம்.பி

வடக்கு - கிழக்கில் 57 ஆயிரம் தமிழர்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரங்கள் அனைத்தும் அரசாங்க அலுவலங்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையே. இது தொடர்பில் ஐ.நா. போன்ற சுயாதீன அமைப்புக்களின் அறிக்கை எதுவும் கடந்த சில மாதங்களில் வெளியாகவில்லை என்பதால் உண்மையான புள்ளிவிவரங்கள் இதைவிட அதிகமாக இருக்குமா என்ற நியாயமான சந்தேகம் இருக்கின்றது.

இவ்வாறு நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

மன்றில் அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் போரால் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் அனைவரும் மீளக்குடியமர்த்தப்படவில்லை. வடக்கில் செட்டிகுளம் முகாம்கள் இரண்டில் 1,081 குடும்பங்களைச் சேர்ந்த 6,031 தமிழர்கள் (கதிர்காமர் முகாமில் 769 குடும்பங்களைச் சேர்ந்த 2562 பேரும், ஆனந்தக் குமாரசாமி முகாமில் 2,827 குடும்பங்களைச் சேர்ந்த 9,235 பேரும்) இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். அதேபோன்று கிழக்கிலும் சம்பூரைச் சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். சம்பூர் அனல் மின் நிலையத்துக்கு எனச் சுவீகரிக்கப்பட்ட நிலப்பகுதியில் 4 ஆயிரம் தமிழர்கள் வசித்த 1,262 வீடுகள் அபகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கில் மட்டும் 26 ஆயிரம் தமிழர்கள் தமது சொந்த இடங்களைவிட்டு கடந்த 22 வருடங்களாக இடம்பெயர்ந்துள்ளார்கள். அவர்களும் இதுவரை மீளக்குடியமர்த்தப்படவில்லை.

இவர்கள் தவிர யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் மேலும் 22 ஆயிரம் தமிழர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மொத்தத்தில் 57 ஆயிரம் தமிழர்கள் வடக்கு - கிழக்கில் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்தப் புள்ளி விவரங்கள் அனைத்தும் அரசாங்க அலுவலங்களால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இருந்து பெறப்பட்டவையே. இது தொடர்பில் ஐ.நா. போன்ற சுயாதீன அமைப்புக்களின் அறிக்கை எதுவும் கடந்த சில மாதங்களில் வெளியாகவில்லை என்பதால் உண்மையான புள்ளிவிவரங்கள் இதைவிட அதிகமாக இருக்குமா என்ற நியாயமான சந்தேகம் இருக்கின்றது.

ஏனெனில் கிழக்கு மாகாணம் சம்பூரைச் சேர்ந்த 7 ஆயிரம் மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கையில், அரசின் மீளக்குடியமர்த்துகை அமைச்சு 08.05.2012 திகதிய அடிப்படையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கிழக்கில் மீளக்குடியமர்த்தப்படுவதற்கான மக்கள் எவரும் இல்லை என்பதாகத் தெரிவித்துள்ளது.

அப்பட்டமாகத் தெரியும் உண்மைகளையே அமைச்சுக்களும் அரச அலுவலகங்களும் இவ்வாறு அறிக்கையிடும்போது அவற்றின் நம்பகத் தன்மை குறித்து கேள்வி எழுவது நியாயமானதே.

எனவே வடக்கிலும் கிழக்கிலும் 57 ஆயிரம் தமிழர்களுக்கும் அதிகமானவர்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்றே நம்பகமாக எதிர்பார்க்கலாம்.

ஏனெனில், இடம்பெயர்ந்தோருக்கான அனைத்துலக கண்காணிப்பு நிலையம் இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் விடுத்த அறிக்கையில் இலங்கையில் 95 ஆயிரம் பேர் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளது. இவர்களில் 54ஆயிரம் பேர் பழைய இடம்பெயரிகள் என்றும் (யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இதற்குள் அடங்குவர்) 41ஆயிரம் பேர் புதிய இடம்பெயரிகள் (இறுதிப் போரில் இடம்பெயர்ந்தவர்கள்) என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த அறிக்கையின்படி மனிக்பாம் முகாமில் 6,700 பேர் தங்கியிருந்தனர். அதன் பின்னர் 6 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் இந்த எண்ணிக்கையில் 669 பேர் மட்டுமே மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று அரச புள்ளிவிவரங்களே தெரிவிக்கின்றன. இறுதிப் போர் உச்சமாக நடந்த இடங்களில் மீளக்குடியமர்வு எவ்வளவு வேகத்தில் நடக்கிறது என்று இதனைக் கொண்டே புரிந்துகொள்ள முடியும்.

2011ஆம் ஆண்டு டிசெம்பர் மாத இறுதிக்குள் முகாம்களில் உள்ள மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு விடுவார்கள் என்று இலங்கை அரசு சர்வதேச நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் உறுதியளித்திருந்தது. ஆனால், இன்று வரை அது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

90 ஆயிரம் மக்கள் இன்னமும் மீளக்குடியமர்த்தப்படாமல் இருப்பதற்கு கண்ணிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதே காரணம் என்று அரசு கூறுகின்றது. ஆனால், கடந்த 17 வருடங்களாக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படாமல் இருக்கும் மக்களில் அரைவாசிக்கும் மேலானவர்கள் இராணுவத்தினரால் தமது காணிகள் அபகரிக்கப்பட்டதன் காரணமாக மீளக்குடியமர முடியாமல் உள்ளார்கள் என்பதே உண்மை.

வலி.வடக்கிலும், வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், உடுவில், கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை போன்ற பிரதேச செயலர் பிரிவுகளிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் கடற்படையினரும் விமானப் படையினரும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அபகரித்து வைத்திருப்பதாலேயே அவர்களை மீளக்குடியமர்த்த முடியாமல் இருக்கிறது.

இந்த மக்கள் சுமார் 20 வருடங்களுக்கும் மேலாக இடம்பெயர்ந்து வாழ்கிறார்கள். அவர்களின் பிரச்சினையை மனிதாபிமான நோக்கத்துடன் அணுக வேண்டிய அரசு இராணுவ நோக்கத்துடன் மக்களின் இந்த மனிதாபிமானப் பிரச்சினையை அணுகி வருவதே இந்தப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்குமான காரணம்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் உள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு முற்றாக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வடக்கில் போர்க் காலங்களில் இருந்ததைப் போலல்லாது இப்போது படையினர் குறைக்கப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி அண்மையில்கூட கூறியிருந்தார். 10,000 படையினரே யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர் என்றும் அவர் கூறியிருந்தார். (இது யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க [illegible] 15,600 படையினர் என்ற எண்ணிக்கையுடன் வேறுபடுகிறது என்பது வேறு கதை)

வடக்கில் படையினர் குறைக்கப்படுகின்றனர் என்றால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் படையினர் ஏன் தம்வசப்படுத்துகிறார்கள் என்பதை இந்த நாடாளுமன்றமோ பொறுப்பான அமைச்சர்களோ விளக்குவார்களா?

யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கில் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் 8,000 ஏக்கர் நிலத்தை தமக்கே சொந்தமாக்கித் தரும்படி இராணுவத்தின் மேஜர் ஒருவர் அண்மையில் தெல்லிப்பழை மற்றும் கோப்பாய் பிரதேச செயலர்களிடம் கடிதங்களைக் கையளித்துள்ளார்.

இந்தப் பகுதி வளம்மிக்க விவசாய நிலப் பகுதி. அங்கிருந்த மக்கள் இடம்பெயர்வதற்கு முன்னர் தமது நிலத்திலிருந்து கிடைத்த வருமானத்தின் மூலம் வளமாக வாழ்ந்தவர்கள். 22 வருடங்களாகத் தமது சொந்த மண்ணுக்குத் திரும்பும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பை இராணுவத்தினரின் நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் நொருக்கித் தள்ளுகின்றன.

இந்தப் பகுதியில் இப்போது நிரந்தமான முள்வேலி போடப்பட்டுள்ளது. அதற்குள் அடங்கும் பகுதிகள் ஒருபோதும் விடுவிக்கப்படப்போவதில்லை என்ற அச்சம் மக்கள் மனங்களில் எழுந்துள்ளது.

ஆனால், வலி.வடக்கில் 17 கிராம அலுவலர் பிரிவுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அண்மையில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அவரது கருத்து வெளியாகி ஓரிரு நாள்களில் இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர் ஆணையரைச் சந்தித்துப் பேசிய யாழ்ப்பாணக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க, பலாலி விமானப் படைத் தளத்தின் விரிவாக்கத்துக்காகவும் காங்கேசன்துறைமுக மேம்பாட்டுக்காகவும் அதனைச் சுற்றியுள்ள காணிகள் யாழ்ப்பாணக் கட்டளைப் பணிமனையால் சுவீகரிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். அவர்களின் இணையத் தளத்தில் அந்தச் செய்தியை இப்போதும் பார்வையிட முடியும். காணிகளைச் சுவீகரிக்கும் அதிகாரம் இராணுவத்தின் ஒரு பிராந்தியக் கட்டளைத் தலைமையகத்துக்கு எப்போது வழங்கப்பட்டது என்று தெரியவில்லை. எனது சட்ட அறிவுக்கு எட்டியவரையில் காணி சுவீகரிப்பு என்பது அரசினால் மட்டுமே மேற்கொள்ளப்பட முடியும். ஒருவேளை, அரசும் இராணுவமும் வேறுவேறல்ல என்ற ரீதியில் கட்டளைத் தளபதி கருத்துத் தெரிவித்திருக்கவும்கூடும். அது அவரின் தவறல்லவே!

அதேபோன்று திருமுறிகண்டியிலும் படையினர் 4 ஆயிரம் ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர். இந்த நிலப் பகுதியில் ஊனமுற்ற படையினருக்கான வீட்டுத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதாக அந்தப் பகுதிப் பிரதேச செயலருக்குப் படையினர் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர். அதனால் அந்தப் பகுதியைத் தமக்குரியதாக்க நடவடிக்கை எடுக்கும்படியும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இறுதிப் போரில் இடம்பெயர்ந்த மக்கள், மந்தைகளாக அடைக்கப்பட்டுக் கிடந்த மனிப்பாம் முகாமிலிருந்து தமது சொந்த இடங்களுக்குத் திரும்பச் செல்கையில் ஒரேயொரு [illegible] மறுத்த இந்த அரசுதான், திருமுறிகண்டியில், ஊனமுற்ற படையினருக்கு ஆயிரம் வீடுகளை 4 ஆயிரம் ஏக்கரில் அமைத்துக் கொடுக்கிறது.

வேடிக்கை என்னவென்றால், இந்த நாட்டில் எல்லா இனங்களும் சமமானவையே என்று சொல்லிக் கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுதான் சிறுபான்மைத் தமிழ் மக்களை ஒரு மாதிரியாகவும் சிங்களப் படையினரை வேறொரு மாதிரியாகவும் நடத்துகிறது. ஒரு கண்ணுக்கு மையும் மற்றொரு கண்ணுக்குச் சுண்ணாம்பு இட்டுக்கொண்டு சமத்துவம் பேசும் கேவலம் இந்த நாட்டில் மட்டுமே நடக்கக்கூடியது.

மன்னார் மாவட்டத்திலும் இதுவரை படையினராலும் அரசின் திட்டங்களுக்காகவும் 5 ஆயிரம் ஏக்கர் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அரசு ஒரு திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு முன்னர் அது குறித்த சாத்திய அறிக்கைகள் மற்றும் மக்கள் விரும்பம் என்பன கேட்கப்படுதல் அவசியம்; அது கடப்பாடும்கூட. ஆனால் அப்படி எதுவும் செய்யாமலேயே மன்னார் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கும் காற்றாலைக்கு எனவும் 500 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கிலும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் இப்படி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறியாமல் சுற்றுலாத்துறைக்கு எனவும் பன்னாட்டு வர்த்தக நிறுவனங்களின் விவசாயத்துக்கு எனவும் அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலே 3,500 ஏக்கர் நிலம் இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகின்றனர். நிலஅளவைத் திணைக்களத்தினரால் இந்த நிலப் பகுதி அண்மையில் இராணுவத்தினருக்காக எனக் கூறி எல்லையிடப்பட்டுள்ளது. தள்ளாடி வடக்கில் திருக்கேதீஸ்வரம் வரையில் 272 ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது.

இப்படி ஆயிரக்கணக்கான ஏக்கர்களை அபிவிருத்தி என்ற பெயரில் அரசு கையகப்படுத்துவதும் பெரும் சந்தேகங்களை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்துகிறது. அதிலும் குறிப்பாக தமிழ் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர விடாது ஆயிரம் ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசு கையகப்படுத்துவது, எதிர்காலத்தில் தீர்வு என்ற ஒன்று வழங்கப்பட்டால், அதற்கு முன்னதாக வடக்கு - கிழக்கில் முடிந்த வரையில் காணிகளை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் உள்நோக்கம் கொண்டதா? என்பதே அந்த நியாயமான சந்தேகம்.

அரசு அவசர அவசரமாக, தமிழ் மக்களைக் கலந்தாலோசிக்காமல் அபிவிருத்தியின் பேரில் தமிழர் நிலங்களைக் கையகப்படுத்துவதால் இந்தச் சந்தேகங்களைத் தவிர்க்க முடியவில்லை.

இராணுவப் பாவனைக்கு என ஆயிரக்கணக்கில் நிலங்களை அபகரிக்கும் இந்த அரசு, மன்னார் - முள்ளிக்குளத்தில் 350 குடும்பங்களை மீளக்குடியமர அனுமதி வழங்காது இருக்கிறது.

வடக்கு - கிழக்கில் படையினரின் பயன்பாட்டுக்காவும் அபிவிருத்தி என்ற போர்வையிலும் மட்டும் நிலங்கள் பறிக்கப்படவில்லை, பௌத்த விகாரைகளை அமைப்பதற்காகவும் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் மாதகலில், சங்கமித்தை வந்திறங்கிய இடம் என்று கூறி முதலில் அங்கு ஒரு தனியாரின் காணி ஆக்கிரமிக்கப்பட்டு விகாரை அமைக்கப்பட்டது. இப்போது அதன் அருகிலிருந்த தமிழர்களின் காணிகளும் ஆக்கிரமிக்கப்பட்டு யாத்திரிகர் விடுதி அமைக்கப்படுகிறது. இவற்றின் பாதுகாப்புக்கு என தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டு கடற்படை முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணிகள் அனைத்தும் உறுதிகள் உள்ளவை. தமிழர்களுக்குச் சொந்தமானவை. ஆனாலும் கேட்டுக் கேள்வியில்லாமல் அவை ஆக்கிரமிக்கப்படுகின்றன.

கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டிருந்த விகாரையிலும் அதன் விரிவாக்கத்துக்காகத் தனியார் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. முல்லைத்தீவிலும் அதேபோன்று தனியார் காணியில் புத்தர் சிலையை வைத்துக் கொண்டு பிக்கு ஒருவர் ஆக்கிரமிப்பு நடத்துகிறார். திருக்கேதீச்சரத்தில் தமிழரின் காணியில் ஆக்கிரமித்து வைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றும்படி பௌத்த சாசன அமைச்சு செயலர் கூறிய பின்னரும் அது அகற்றப்படாமலேயே உள்ளது.

இப்படித் தமிழர்களின் காணிகளை படை முகாம்களுக்காகவும் விகாரைகளுக்காகவும் அபகரித்துக் கொண்டு, எஞ்சியிருக்கும் காணிகளை அபிவிருத்தித் திட்டங்களுக்கு எனக் கூறிச் சுவீகரித்துக் கொண்டிருந்தால் எப்படி தமிழர்களை அவர்களது இடங்களில் மீளக்குடியமர்த்த முடியும்?

தமிழர்களும் ஏனைய சிறுபான்மை இனத்தவர்களும் இந்த நாட்டில் சம குடிமக்களே என்று திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டே இந்த அரசு, தமிழர்களையும் ஏனைய சிறுபான்மை மக்களையும் இரண்டாம் தரக் குடிமக்களாகவே பார்க்கிறது, நடத்துகிறது.

இந்த அரசுக்கு தமிழர்களைப் பற்றி அக்கறையில்லை. அவர்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டும் என்று அக்கறையில்லை. மீளக்குடியர்ந்த தமிழ் மக்கள் இயல்பு வாழ்வுக்கு திரும்புவதற்கு உதவ வேண்டும் என்பதில் அக்கறையில்லை. அப்படி அக்கறையிருந்திருந்தால் அவர்களுக்கு தேவையான உதவிகளை இந்த அரசு செய்திருக்கும். அப்படி உதவி செய்வதற்கு நிதி இல்லை வசதி இல்லை என்று கூறும் இந்த அரசுதான் உரிய காலத்துக்கு முன்னரே 66 மில்லியன் ரூபாவைச் செலவிட்டு 3 மாகாண சபைகளுக்குத் தேர்தல்களை நடத்துகிறது.

இந்த அரசுக்கு அதன் அரசியல் தேவைகள்தான் முக்கியமானவையே தவிர, தமிழர்களின் நலன்கள் அல்ல. அவர்களைச் சமத்துவத்துடன் நடத்துவதற்கும் இந்த அரசு தயாராக இல்லை. தமிழர்கள் மீதான தனது அடக்குமுறைகளுக்கு நியாயம் கற்பிப்பதற்காக ஒவ்வொரு காரணத்தை சர்வதேசத்திடம் முன்வைக்கத்தான் இந்த அரசு முயல்கிறதே தவிர, தமிழர்களையும் தம்முடன் சேர்த்துக் கொண்டு நாட்டில் நல்லாட்சி நடத்த அது முயலவில்லை.

இடம்பெயர்ந்துள்ள, எஞ்சிய தமிழ் மக்களையும் உடனடியாக அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தி, தமிழர்களை இயல்பு வாழ்வுக்குத் திரும்ப அனுமதித்து, இந்த நாட்டில் அவர்களும் சம மதிப்புக் கொண்ட குடிமக்கள் தான் என்பதை அரசு நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் சாத்வீகமான அரசியல் போராட்டங்களுக்கு மீண்டும் திரும்புவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை என்பதை இங்கு ஆணித்தரமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்.

சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள், இல்லையேல் ஆயுதச் சண்டை இல்லாமல் போனதால் கிடைத்த அமைதி தொடர்வதற்கு வழியில்லாமல் போய்விடும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள இரண்டு கியுப் அளவு கொண்ட வெள்ளை நிற LH தொடர் இலக்கம் கொண்ட டாடா ரிப்பர் ஒன்று விற்பனைக் குண்டு.

தொடர்பு:- 0774073046 மாலை 6 மணிக் குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்.

(20573) (15-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் தமிழ்ப்பாட ஆசிரியை திருமதி கலாராணி ரஜீபன் அவர்களின் தந்தை

**கந்தையா இரத்தினம்**

அவர்கள் பிரான்ஸில் மறைவையிட்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்.**

(சி/1546)

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி நகரசபை பிரிவு இரண்டில் பொது சுகாதார பரிசோதகராக கடமை ஆற்றும் திரு.பி.தளிர்ராஜ் அவர் களின் பாசமிகு தந்தை

***கிறிஸ்தோப்பர் பிறேமஜெகன்***

அவர்கள் நேற்று (17.07.2012) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை

(சி/1548)(8-14)

# 'ஈழம்' குறித்த தீர்மானம் கருணாநிதி கொண்டு வந்தால் போராடத் தயார்

## தா.பாண்டியன் தெரிவிப்பு

'டெசோ' மாநாட்டில் இலங்கையில் தனி ஈழம் கிடைக்க கருணாநிதி தீர்மானம் கொண்டு வந்து போர்க் கொடி உயர்த்தினால் நாமும் அவருடன் போராடத் தயாராக இருக்கிறோம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் தா.பாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய குழுக் கூட்டம் ஒகஸ்ட்18 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை புதுடில்லியில் நடக்கிறது. இந்தியாவில் சில் லறை வணிகத்தில் அன்னிய முதலீட்டை அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமா பேசியிருப்பது கண்டிக் கத்தக்கது.

இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி கொடுப்பதை ஏற்கனவே தமிழ் நாட்டில் அனைத்து கட்சிகளும் எதிர்த்து வரு கின்றன. ஆனாலும் மறுபடியும் மத்திய அரசு இங்கு பயிற்சி கொடுக்க அனும திக்கிறது. இது தமிழர்களை அவமானப்படுத்தும் செயலாகும்.

இப்போது இலங்கை இராணுவ வீரர்களுக்கு குன்னூரில் பயிற்சி கொடுக்க ஏற்பாடு நடப்பதாக அறிகிறோம். மத்தியில் ராஜபக்ஷவுக்கு ஆதரவு தருகிற அரசு இருக்கும் வரை இது தொடரும். எனவே தற்போதைய காங்கிரஸ் கூட்டணி அரசு அகற்றப்பட்டால் தான் இதற்குத் தீர்வு கிடைக்கும்.

இலங்கையுடனான இந்திய உறவை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும். சென்னையில் டெசோ மாநாடு நடத்தப்போவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி அறிவித்திருக்கிறார். இதுபற்றி கருணாநிதியை சந்தித்த ப.சிதம்பரம் டெசோ மாநாட்டை நடத்துங்கள். ஆனால் தனி ஈழம் பற்றி தீர்மானம் நிறை வேற்றக்கூடாது என்று தெரிவித்துள்ளார்.

எனவே டெசோ மாநாட்டில் இலங்கை யில் தனி ஈழம் கிடைக்க கருண்ாநிதி தீர்மானம் கொண்டு வந்து போர்க்கொடி உயர்த்தினால் நாமும் அவருடன் போராடத் தயாராக இருக்கிறோம்-என்றார்.

## விபத்தில் 4 வயது பாலகன் காயம்

வலி.வடக்கு,ஜூலை18

ஒழுங்கையில் இருந்து வந்த பெண் பிரதான வீதியில் திடீரென ஏறியபோது ஏற்பட்ட விபத்தில் நான்கு வயதுப் பால கன் காயங்களுக்கு உள்ளாகிய சம்பவம் நேற்றுக் காலையில் சுன்னாகம் கந்த ரோடை வீதியில் இடம் பெற்றது.

கந்தரோடை பருத்தியோலை ஒழுங்கையால் வந்த பெண் பிரதான வீதி யைக் கவனியாது சைக்கிளில் கண் மூடித்தனமாக வந்து ஏறிய நிலையில் கந்த ரோடை வீதியில் பாடசாலை மாண வன் மற்றும் சிறு பிள்ளையையும் எற்றி வந்த மோட்டர் சைக்கிள், சைக்கி ளுடன் மோதியது. இதனால் நிலத்தில் விழுந்தமையால் மோட்டார் சைக் கிளில் இருந்த பாலகன் காயங் களுக்கு உள்ளாகி யதுடன் பாடசாலை மாணவனும் சிறு காயங்களுக்கு உள ளாகினார்.

(வ-86)

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கேஸ்வரி அருளானந்தன்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கேஸ்வரி அருளானந்தன் நேற்று (17.07.2012) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - நாச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - திரவியம் தம்பதியரின் அன்புமருமகளும், காலஞ்சென்ற அருளானந்தன் அவர்களின் அன்பு மனைவியும், மகாலிங்கம், காலஞ்சென்ற பற்குணராஜா மற்றும் தனபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யசோதரா (உப அஞ்சல் அதிபர் -Jaffna Bazzer), முரளி தரன் (கனடா), கங்காதரன், இராஜேந்திரன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும், போலிங்கம் (யாழ். வலயக்கல்வி அலுவலகம்), ரதிவதனி (கனடா), ராகினி, குமுதினி, கோணேஸ்வரி (சுபா) ஆகியோரின் அன்புமாமியும், கோபி சாளினி, கிருஸ்ணப்பிரியா, கார்த்திகன், துளசி, துகிந்தன், அஜந்தா, பிருந்தா, துஷீபன், நிதுஜனன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2012) வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 82/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
யசோதரா போலிங்கம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(20589)(6-7-8)

## பணி நிலை வெற்றிடம்

பதவி நிலை :- தொழில் நுட்ப உத்தியோகத்தர்
தகைமை:- NCT in (Civil Engineering ) and NCT in (Quantity Surveying)
கட்டட நிர்மாணத் துறையில் பணியாற்றிய 5 வருட சேவை அனுபவம்
பால்:- ஆண்

பணியாற்றவேண்டிய மாவட்டங்கள்:- வவுனியா, மன்னார். மேற்படி பதவிநிலைகளுக்கான விண்ணப்ப படிவத்தினை கீழ்குறிப்பிடும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது மின் அஞ்சல் ஊடாகவோ 23.07.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

**Sewa Economic Developement company (PVT) LTD**
*இல 52, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல 0212228754 தொலைநகல் இல 0212228754*
*மின்னஞ்சல் முகவரி:-* Jaffnasedco@gmail.com

SEDCO

(20574) (15-14)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி 18.06.2012 அன்று வானுலகு புகுந்த எங்கள் குலவிளக்கு

அமரர் பரராசசிங்கம் புவனேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியை கள் கடந்த 16.07.2012 திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (18.07.2012) புதன்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

*திருச்சபை வீதி, நவாலி*
*வடக்கு,*
*மானிப்பாய்.*

(20590) (15-14)

குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி நகரசபை பிரிவு-இரண்டில் பொது சுகா தார பரிசோதகராகக் கடமை யாற்றும் திரு. பி.தளிர்ராஜ் அவர்களின் பாசமிகு தந்தையார்

கிறிஸ்தோப்பர் பிறேமஜெகன்

அவர்கள் நேற்று (17.07.2012) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடை இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

பொது சுகாதார பரிசோதகர் சங்கம்
யாழ். மாவட்டம்

(சி/1543) 15-14)

# மரண அறிவித்தல்



*கிறிஸ்தோப்பர் பிறேமஜெகன்*

பருத்தித்துறை வறாத்துப்பளையைப் பிறப்பிடமாகவும் பிலிப் வீதி மட்டுவில் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் பிறேமஜெகன் நேற்று (17.07.2012) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோப்பர்- லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் யோகராணியின் (சாவகச்சேரி ப.நோ.கூ.ச. அன்புக் கணவரும் தளிர்ராஜ் (பொது சுகாதார பரிசோதகர் சாவகச்சேரி நகரசபை பிரிவு-2) பிரகாஸ், அகழ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரெல்லா, டிலானியின் (ஆசிரியை முருங்கன் ம.கா.வி.) அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன், தேவமலர், ஞானமலர் மற்றும் லயனல் றாஜ்குமார் (திருகோணமலை) மேரிவனஜா, ஜேக்குமார், ஆகியோ ரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2012) புதன்கிழமை பி.ப 3 மணி அளவில் மட்டுவில் வடக்கு புனித லூர்த்துமாதா தேவாலயத்தில் நடைபெற்று பூத வுடல் புனிதலூர்த்து அன்னை சேமக்காலையில் நல்லடக் கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*பிலிப் வீதி,*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*

(சி/1549) (15-14)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஊழியர் சேமலாப நிதி பாதுகாக்கப்பட வேண்டும்

ஈ.பி.எஃப். என்றழைக்கப்படும் ஊழியர் சேமலாப நிதி தொடர்பாக சமீபகாலமாக பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள் இந்த நிதியில் உறுப்பினர்களாக இருக்கும் ஊழியர்களைப் பெரிதும் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளன. இந்த நிதியை அரசு, நட்டத்தில் இயங்கும் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதாகவும் இதில் பல முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

அண்மையில் நாடாளுமன்றத்தில் ஊ.சே. நிதி தொடர்பாக கணக்காளர் நாயகத்தினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில் இந்த நிதியில் பல கணக்கீட்டு குறைபாடுகள் இருப்பதாகவும் முகாமைத்துவ திறமையின்மை காணப்படுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல லட்சக்கணக்கான ரூபாய் உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வைப்பிடப்படாமல் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டுக்கும் 2008 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சேமலாப நிதி உறுப்பினர்களால் செலுத்தப்பட்டுள்ள தொகையான 62 மில்லியன் ரூபாயும் நீதிமன்றங்களால் அறவீடு செய்யப்பட்ட ஈட்டுத் தொகைகளும் கூட உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் சேர்க்கப்படாமல் 2010 ஆம் ஆண்டுக்கான அரச வருமானத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று கணக்காளர் நாயகம் கண்டுபிடித்துள்ளார். இதற்கான காரணம் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்காமையே என்றும் அவர் தெரிவித்துள்ளார். தொழில் திணைக்களத்தில் ஊழியர் சேமலாப நிதி தொடர்பான பேரேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. அதே சமயம் பேரேட்டின் பதிவுகள் தொடர்பான தெளிவான மற்றும் விவரமான கையேடும் கூட கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். கணக்காளர் நாயகம் தெரிவித்துள்ள இன்னும் சில திடுக்கிடும் தகவல்களில்-

*நீதிமன்ற கட்டளைகளின்படி செலுத்தப்பட்ட பணத்துக்கான வரவு மற்றும் பணம் செலுத்தப்பட்டமைக்கான சிட்டைகள் ஆய்வுக்கான இறுதிக் கணக்கறிக்கையில் ஆதாரமாக இணைக்கப்படவில்லை.

*2010 ஆம் ஆண்டு நிதியத்தின் நிலையான சொத்து 610 மில்லியன் ரூபாய்க்கான ஆதாரம் இணைக்கப்படவில்லை என்பவைகளும் சிலவாகும்.

தொழிலாளர் சேமலாப நிதி அரசினால் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகிறது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குறிப்பாக ஐ.தே.கட்சியினர் தெரிவித்துவரும் நிலையில் கணக்காளர் நாயகத்தின் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை விரைவில் நாடாளுமன்றத்தின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

கணக்காளர் நாயகம் ஊழியர் சேமலாப நிதியின் நிர்வாகத்தின் மீது தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு அரசு குறிப்பாக நிதிக்குப் பொறுப்பான அமைச்சு பதிலளித்தாக வேண்டும்.

இது இவ்வாறு இருக்க, தொழிலாளர் சேமலாப நிதி சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டுபிடித்து இந்த நிதியில் கையாடல் செய்யப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிதியின் மூலம் வரும் நன்மைகள் நிதியின் உறுப்பினர்களுக்குப் போய்ச்சேரும்படியான மாற்றங்களை செய்யும்படி பல தொழிற் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொது சேவைகள் ஊழியர் சங்கத்தின் இணை செயலாளர் அன்ரன் மார்க்கஸ் விடுத்துள்ள அறிக்கையில், தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத விடத்து தொழிற்சங்கங்கள் யாவும் இணைந்து அரசுக்கெதிராகப் போராடப் போவதாக அறிவித்துள்ளார்.

சேமலாப நிதியானது பங்குச் சந்தையில் கேள்விக்குரிய விதத்தில் முதலீடு செய்யப்பட்டு முறைகேடுகள் நடந்திருப்பது குறித்த குற்றச்சாட்டுகள் பற்றி ஆராய குழுவொன்று நிறுவப்படவேண்டும். பாகுபாடு இல்லாத விதத்தில் அறிக்கையொன்றைத் தயாரிப்பதற்கு இக் குழுவில் தொழிற் சங்கவாதிகளும் இடம்பெற்றிருக்க வேண்டும் என்று அவர் தெரிவித்திருப்பதுடன் ஊழியர் சேமலாப நிதியை முதலீடு செய்யும் போது சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களைக் கண்டிப்பாக அதிகாரிகள் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். நஷ்டம் ஏற்படுத்தும் நிறுவனங்களில் சேமலாப நிதி முதலீடு செய்யப்படக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஊழியர் சேமலாப நிதியானது நாட்டில் உள்ள மிகப் பெரிய சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும். 2010 ஆம் ஆண்டு இருப்பின்படி அதில் ரூபா 899.6 பில்லியன் வைப்பிலுள்ளது. இதில் அனேகமாக ரூபா 7.2 பில்லியன் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 6 மாத காலத்தில் மட்டும் நிதிக்கு 1.3 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டிருப்பதாக க் கூறப்படுகின்றது.

எதுவானாலும் இந்த நிதி ஏழைகளின் சொத்து, உழைக்கும் ஊழியர்களால் அரசை நம்பி சேமிப்பில் இடப்பட்டது. இதை நட்டத்தில் இயங்கும் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யவோ, தனிப்பட்டவர்கள் தம் விருப்பப்படி கையாடல் செய்யவோ அரசு இடம்கொடுக்கலாகாது. எதிர்க்கட்சியினராலும் தொழிற் சங்கங்களினாலும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு வெளிப்படையாக அரசு பதிலளிக்க வேண்டும். சந்தேகங்களைத் தீர்த்துவைப்பதும் அரசின் கடமை.

# ஜனாதிபதி செயலணியின் அங்கீகாரம் வடக்கு மாகாணத்தில் தேவையற்றது

## நிபந்தனையை மீளாய்வு செய்யுமாறு கோருகிறது அரசசார்பற்ற இணையம்

குருநகர்,ஜூலை 18

வடக்கு மாகாணத்தில் செயற்பட்டு வரும் தேசிய மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி செயலணியின் அங்கீகாரம் பெற வேண்டும் என விதிக்கப்பட்ட நிபந்தனையை மீளாய்வு செய்து இந்த நிறுவனங்களை சுதந்திரமாகவும் அந்தந்த மாவட்ட அரச அதிபர்களுடன் இணைந்து செயற்பாடுகளை மேற்கொள்ளவும் அனுமதிக்குமாறு ஜனாதிபதி செயலணியின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் செயற்பட்டு வரும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள், நிதி வழங்கும் நிறுவனங்கள், சமயம் சார்ந்த அமைப்புக்கள் ஆகியவை வெளிநாடுகளில் உள்ள நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரிடமிருந்து நிதி பெறும் போது வங்கி நடைமுறை மூலமே பெறப்படுகின்றன.

மேலும் ஜனாதிபதி செயலணி கொழும்பில் செயற்படுவதால் அரசசார்பற்ற நிறுவனங்கள் பெரும் தொடர்பாடல் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. இந்தச் செயலணியில் உள்ளவர்களில் அநேகமான வர்கள் இந்தப் பிரதேசத்தைச் சார்ந்தவர்களாக இல்லாததுடன் வடக்கின் தற்போதைய களநிலையைத் தெரியாதவர்களாகவும் உள்ளார்கள்.

ஜனாதிபதி செயலணி அறிமுகமாக்கப்படுவதற்கு முன்பு அரச சார்பற்ற நிறுவனங்கள் அந்தந்த மாவட்ட அரச அதிபர்களிடமிருந்து அங்கீகாரங்களைப் பெற்றதுடன் யாழ்.மாவட்டத்தில் அரச அதிபர் தலைமையிலான மாவட்ட மீளாய்வுக் குழுவின் அங்கீகாரம்பெறும் நடைமுறை மிகவும் திருப்திகரமாகச் செயற்பட்டது.

மேலும் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின்பும் இந்த ஒழுங்கு உள்ளூரில் இயங்கும் நிறுவனங்களுக்குத் தொடரப்படுவது நியாயமானது அல்ல என்பதை தங்கள் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறோம். எனவே இந்த நிபந்தனையை மீளாய்வு செய்து அந்தந்த மாவட்டங்களின் அரச அதிபர்களுடன் இணைந்து அரசசார்பற்ற நிறுவனங்கள் செயலாற்றக்கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும்- என்றுள்ளது. (த-51)

## குருநகரில் டெங்கு ஒழிப்பு

குருநகர், ஜூலை 18

யாழ் .மாநகரசபையின் குருநகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவும், தேசிய இளைஞர் சேவைகள் அமைப்பும் இணைந்து டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கையும் டெங்கு ஒழிப்பு பேரணியையும் குருநகர் பகுதியில் அண்மையில் நடத்தின.

குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய மாணவர்களுக்கு டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்கள் மூலம் குருநகரிலுள்ள வீடுகளில் காணப்பட்ட வெற்றுப்போத்தல்கள், சிரட்டைகள், ரயர்கள் என்பன சேகரிக்கப்பட்டு யாழ். மாநகரசபையின் கழிவகற்றும் உழவுஇயந்திரங்கள் மூலம் அகற்றப்பட்டன. பின்னர் டெங்கு நுளம்பு தொடர்பாக பதாதைகளை ஏந்தியவாறு மாணவர்கள், அதிபர், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி, யாழ். மாநகரசபை உறுப்பினர்கள், குருநகர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஊர்வலமும் குருநகர் வீதிகள் ஊடாக நடத்தப்பட்டன. (த-51)

## 'பி.சி' படிவம் சமர்ப்பிக்காதோருக்கு உரிய காரணம் கோரிக் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகளின் ஆரம்பக் கட்டத்திலேயே கடந்த ஆண்டு வாக்காளராகப் பெயர் பதிந்து இந்த ஆண்டு 'பி.சி' படிவம் சமர்ப்பிக்காதவர்களுக்கு காரணம் கேட்டுக் கடிதம் அனுப்பப்படுகிறது என்று யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து இடம்பெற்று வருகின்றது. இதன் முதல் கட்டமாக கிராம சேவையாளர்களுக்கு ஊடாக வீடுவீடாக 'பி.சி' படிவம் விநியோகிக்கப்பட்டு நிரப்பப்பட்டு மீளப் பெறப்பட்டது.

அதன் பின்னர் ஒவ்வொரு கிராம சேவையாளரிடமிருந்தும், யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தால் பூரணப்படுத்தப்பட்ட 'பி.சி' படிவங்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

இதன் போது 'பி.சி' படிவத்தில், தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்படாமல் கையளிக்கப்பட்ட 'பி.சி' படிவத்துக்குரியவருக்கு தேசிய அடையாள அட்டை இலக்கத்தை குறிப்பிடாமைக்கான காரணத்தைக் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டு வருகின்றது.

அத்துடன் கடந்த 2011 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் இருந்து, தற்போது கிராம சேவகர் ஊடாக 'பி.சி' படிவம் சமர்ப்பிக்கத் தவறியிருப்பவர்களுக்கும் அதற்குரிய காரணங்களைக் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டு வருவதாக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். (ம-5)

# வன்னி ஆசிரியர் இடமாற்ற விசாரணை கல்வி அதிகாரிகளால் புறக்கணிப்பு

## நீடிக்கிறது இழுபறிநிலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

வன்னிப் பகுதியில் சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்துள்ள ஆசிரியர் இடமாற்றத்தில் இழுத்தடிப்புச் செய்யப்படுகிறது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் செய்த முறைப்பாடு தொடர்பான விசாரணை நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது தடவையாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போதும் முறைப்பாட்டின் பிரதிவாதிகளான வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் சமுகமளிக்கவில்லை என்று மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

வன்னிப் பகுதியில் ஆசிரியர் சேவைக்காலத்தை நிறைவு செய்துள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 104 ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்கும் விடயத்தில் இழுத்தடிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டு, இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலினால், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் கடந்த மாதம் 11 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டின் பிரதிவாதிகளாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த முறைப்பாடு மீதான விசாரணை கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகள் சமுகமளிக்கவில்லை. இருப்பினும் சமுகமளிக்க முடியாமைக்கான காரணத்தைக் குறிப்பிட்டு மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பப்பட்டமையால் அதனை ஏற்றுக்கொண்டு விசாரணையை நேற்று செவ்வாய்க்கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று யாழ்.பிராந்திய அலுவலகத்தில் விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகளான வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் வருகை தரவில்லை. அது குறித்து கடிதம் எதுவும் அனுப்பப்படவில்லை.

இருப்பினும் வடமாகாண நிர்வாக உத்தியோகத்தர் விசாரணையின் போது சமுகமளித்து, எதிர்வரும் ஜனவரி மாதமே இடமாற்றத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்று குறிப்பிட்டார். இதனை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வடமாகாணப் பொதுச் செயலாளர் ஆட்சேபித்ததைத் தொடர்ந்து விசாரணை அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று இன்னுமொரு விசாரணையில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்த வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் அந்த விசாரணைக்கும் சமுகமளிக்கவில்லை.

இதேவேளை 96 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைக்கு சமுகமளிக்காமல் விடுவது, ஆணைக்குழுவை அவமதித்த குற்றம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத பயிர்ச் செய்கைக்குக் காரணம் குடியேற்ற உத்தியோகத்தர்களின் தவறே

## நீர்ப்பாசனப் பிரதிப் பணிப்பாளர் கூறுகிறார்

கிளிநொச்சி, ஜூலை 18

காணித் திணைக்களத்தைச் சேர்ந்த குடியேற்ற உத்தியோகத்தர்களால் உரிய முறையில் பயிர்ச் செய்கைக் காணிகள் அளவீடு செய்யப் படாமையே சட்டவிரோதமான பயிர்ச்செய்கைகளுக்குக் காரணமாக அமைந்துள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நீர்ப்பாசனப் பிரதித் திட்டப் பணிப்பாளர் என். சுதாகரன்.

வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையைப் பாதுகாப்பது தொடர்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

**வரட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கையைப் பாதுகாப்பது தொடர்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி சிறுபோக நெற்செய்கை தொடர்பான தீர்மானங்களை நிறைவேற்றும் கூட்டத்தின் போது இரணைமடுக் குளத்தில் நீர்மட்டம் 25 அடி ஆறு அங்குலமாக இருந்தது. அதாவது 59 ஆயிரம் கனஅடி நீர் இருந்துள்ளது. இதனடிப்படையிலேயே 7 ஆயிரத்து 964 தொடக்கம் 8 ஆயிரம் ஏக்கரில் பயிர்ச் செய்கைக்கு அனுமதிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கடும் வரட்சி காரணமாகக் குளத்தின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

மேலும் சட்டவிரோதமான வகையில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விதைப்புக்களால் ஏனைய பயிர்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்குக் குடியேற்ற உத்தியோகத்தர்கள் உரிய வகையில் காணிகளை அளவீடு செய்து பயிர்ச் செய்கைகளை அனுமதிக்காமையே முக்கிய காரணமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# குளங்களின் எல்லைகள் ஒழுங்கில்லை குறைந்தளவு நீரே கிடைக்கிறது

## விசனம் தெரிவிக்கும் முல்லை. விவசாயிகள்

முல்லைத்தீவு, ஜூலை 18

சிறு குளங்களின் எல்லைகள் வரையறுக்கப் படாமையால் அவற்றிலிருந்து குறைந்த அளவு நீரையே பெறக்கூடியதாக உள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தச் சிறு குளங்களின் எல்லைகள் வரையறுக் கப்படாமையால் குளக் காணியைச் சிலர் அடாத்தாகப் பிடித்து வைத்துக் கொண்டு பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் குளங்களின் பரப்பளவு சுருங்கியுள்ளதுடன் பயிர்ச் செய்கையில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

சிலர் குள அணைக் கட்டுக்களின் அருகே வேலிகளையும் அமைத்துள்ளனர் இதனால் அணைக்கட்டைச் சீர்செய்வதற்கு மண்ணை எடுக்க முடியாதுள்ளது. சேதமடைந்துள்ள அணைக்கட்டினூடாக நீர் விரயமாகின்றது.

எனவே கமநலச் சேவை நிலைய அதிகாரிகள் சிறு குளங்களின் எல்லைகளை வரையறை செய்வதுடன் அணைக்கட்டின் கீழ்உள்ள காணிகளினதும், நீரேந்தும் பிரதேசத்திலே செய்கை பண்ணப்படும் எல்லைகளையும் நிர்ணயம் செய்ய வேண்டும் எனவும் விவசாயிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இவற்றை உடனடியாக மேற்கொள்ளாது விடும் பட்சத்தில் சிறு குளங்களின் கீழ் உள்ள செய்கைகள் தடைப்பட நேரும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (க-500)

# நேர்மைக்கு கௌரவம்...



தமது ஓட்டோவில் தவறவிடப்பட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை நேர்மையுடன் ஒப்படைத்த ஓட்டோ சாரதியான வேலாயுதம் கிருஷ்ணமூர்த்திக்கு வவுனியா தெற்குப் பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவலிங்கம் மாலை அணிவித்துக்கௌரவிக்கிறார். அருகில் அமர்ந்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன். (க-421)

# நூல் நிலையம் திறந்து வைப்பு

மன்னார் அல் - அஸ்ஹர் நவோதயப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நூல் நிலையத்தை அமைச்சர் றிசாத் பதியுதீன் கடந்த வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாகத் திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் யூனுஸ் மாஹீர் தலைமையில் இடம்பெற்றது. இதில் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஹுனைஸ் பாரூக், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சியான், மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், ஏனைய பாடசாலைகளின் அதிபர்களெனப் பலர் கலந்து கொண்டனர். திறப்பு விழாவைத் தொடர்ந்து இந்தப் பாடசாலையின் தரம் 5 இல் சித்தி பெற்ற மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. (க-12)

# மழையால் தடை

வேப்பங்குளம், ஜூலை 18

வவுனியாவில் இடம்பெற்று வரும் வீதிபுனரமைப்பு வேலைகள் இடையிடையே பெய்யும் மழை காரணமாகத் தடைப்பட்டு வருகின்றன.

இதனால் வீதி வேலைகளில் தடைகள் ஏற்பட்டுள்ளதோடு புனரமைப்பு வேலைகளுக்கெனக் குவிக்கப்பட்டுள்ள கல், மண் என்பவற்றால் இடையூறுகளும் தோன்றியுள்ளன.

வீதிப்புன்ரமைப்பு வேலைகள் ஆரம்பமானதால் மகிழ்ச்சியடைந்த மக்கள் மழை காரணமாக வேலைகள் தடைப்பட்டதையும், வீதிகளில் காணப்படும் இடையூறுகளையும் எண்ணிக் கவலைப்படுவதையும்காண முடிகின்றது. (க- 421)

# கிளி. இந்துவின் வைரவிழா

கிளிநொச்சி, ஜூலை 18

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் வைரவிழா எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவையொட்டியதாகக் கல்லூரி ஆரம்பித்த காலத்தில் இருந்து இன்று வரைகடமையாற்றிய அதிபர், ஆசிரியர்களின் விபரங்கள் அடங்கிய மலர் ஒன்று புகைப் படங்களுடன் வெளியிடப் படவுள்ளது. ஆரம்ப காலத்தில் இந்தப் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் மற்றும் ஆசிரியர்கள் தாம் கடமையாற்றிய காலம் கற்பித்த பாடம் என்பவை அடங்கலாத் தமது முழு விபரத்தையும் புகைப்படத்துடன் பின் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் த.சத்தியமூர்த்தி கேட்டுள்ளார்.

அதிபர் இந்துக் கல்லூரி டி.7, கிளிநொச்சி என்ற முகவரிக்கும், மின்னஞ்சல் மூலம்அனுப்புவதற்குவிரும்புபவர்கள் Sathyan health @ gmial.com என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்க முடியுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-400)

# மன்னாரில் ‘முதல் நன்மை’

மன்னாரில் ‘முதல் நன்மை’ வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. மன்னார், பேசாலை மற்றும் வங்காலைப் பங்கைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகளுக்கு ‘முதல் நன்மை’ வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் இடம் பெற்றது.

மறைக் கல்வி ஆசிரியர்களின் மூன்று மாதகால முன் ஆயத்தங்களைத் தொடர்ந்து இந்த அருட்சாதனம் வழங்கி வைக்கப்பட்டது.

மனனார் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் இடம்பெற்ற இந்த முதல் நன்மை வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்பணி விக்ரர் அவிதப்பர், உதவிப் பங்குத் தந்தை அருட்பணி டெஸ்மன் அஞ்சலோ ஆகியோரது தலைமையிலும், வங்காலை புனித ஆனாள் ஆலயத்தின் பங்குத்தந்தை ஜெயபாலன் அடிகளார் தலைமையிலும் கூட்டுத் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டு முதல்நன்மை என்னும் அருட்சாதனம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# கசிப்புடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு 95 ஆயிரம் ரூபா தண்டமும் சிறையும்

கிளிநொச்சியில் கசிப்புடன் கைது செய்யப்பட்டவர்களுக்கு 95 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப் பட்டுள்ளதுடன் கட்டாய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்மடு நகர்ப் பகுதியில் எட்டுப் போத்தல் கசிப்புடன் கைது செய்யப்பட்டவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஏற்கனவே இதுபோன்ற குற்றச் செயலில் ஈடுபட்டதால் ஆறுமாத கால கட்டாய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்லாறுப் பகுதியில் இரண்டு போத்தல் கசிப்பு வைத்திருந்த பெண் ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் அவரும் ஏற்கனவே இது போன்ற குற்றத்தை மேற் கொண்டதால் மூன்று மாத கால கட்டாயச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்லாறுப் பகுதியில் 375 மில்லி லீற்றர் கசிப்புடன் கைது செய்யப் பட்டவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் கல்மடுப்பகுதியில் இதேயளவு கசிப்பை வைத்திருந்தவருக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மேலும் கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் 375 மில்லிலீற்றர் கசிப்பை வைத்திருந்த ஒருவருக்கும் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதேவேளை புதுமுறிப்புப் பகுதியில் பேரப்பிள்ளைகளை வளர்ப்பதற்காகவே கசிப்பு விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறிய வயோதிபப் பெண்ணுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும் மூன்று மாத கால சாதாரண சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

அவரது மூன்று பேரப் பிள்ளைகளையும் சிறுவர் [illegible] மன்றினால் உத்தரவிடப் பட்டது. (க-6)

# கிளிநொச்சியில் ரூ. 30 லட்சம் செலவில் இரு இளைப்பாற்று மண்டபங்கள்

வலிதென்மேற்கு,ஜூலை18

கிளிநொச்சி மாவட்டத்தில் வசிக்கும் கடற்றொழிலாளரின் நலன் கருதிப் புலோப்பளை, பரமன் காடு ஆகிய கிராமங்களில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் இரு இளைப்பாற்று மண்டபங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியைக் கடற்றொழில் அமைச்சு வழங்கியதைத் தொடர்ந்து, கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, பளை ஆகிய இரு உதவி அரச அதிபர் பிரிவுகளில் மீள் குடியமர்த்தப்பட்ட மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் போதும், திரும்பி வரும் போதும் ஓய்வு எடுப்பதற்கு மண்டப வசதியில்லாது பெரும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இவர்களின் பரிதாபகரமான நிலை குறித்து கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக் களத்துக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து, அதிகாரிகள் எடுத்துக் கொண்ட முயற்சியினால் புலோப்பளை, பரமன்காடு ஆகிய கிராமங்களில் இரு ஓய்வு மண்டபங்களை அமைப்பதற்கு கடற்றொழில் அமைச்சு 30 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிதி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளைத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் இடம்பெறும் மீன்பிடித் தொழிலைத் தடை செய்த அரசஅதற்குமாற்றுத் தொழிலாக தூண்டிலைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மீன்பிடித்தொழிலை அறிமுகப்படுத்த முன்வந்துள்ளது. முதன் முதலாக 25 கடற்றொழிலாளர்களுக்கு 25 லட்சம் ரூபா பெறுமதியான இத்தகைய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

றோலர் (இழுவைப்படகு), தங்கூசி போன்றவற்றைப் பயன்படுத்திச் செய்யும் கடற்றொழிலால் கடல் வளம் அழிந்து கொண்டு போகும் அதேவேளை மீன்களின் இனவிருத்தியும் பாதிக்கப்படுகின்றது. இதனால் கடற்றொழிலையே நம்பி வாழும் மீனவர்கள் நாளடைவில் பொருளாதார ரீதியில் பாதிப்புக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதை நன்கு உணர்ந்த அரசு இத்தொழில்களுக்குத் தடைவிதித்ததுடன் தொடர்ந்து இத்தொழில்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவித்துள்ளது.

இதையடுத்து இந்தத் தொழில்களுக்குப் பதிலாக மாற்றுத் தொழிலை அறிமுகப் படுத்த முன்வந்துள்ள அரசு கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் வசிக்கும் 25 மீனவர்களுக்கு முதன் முதலாகத் தூண்டில் தொழிலுக்கான உபகரணங்களை வழங்க முன்வந்துள்ளது. இதற்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான ஒழுங்குகளை கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (க-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வீடுகளையும் விடுவித்து மீள்குடியமர அனுமதியுங்கள்

## பருத்தித்துறை கொட்டடி மக்கள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு கடிதம்

**கொட்டடிப் பகுதியில் ஜே/401 இலக்க கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 30 வீடுகளின் உரிமையாளர்கள் ஒன்றிணைந்து இந்த மனுவை அனுப்பி வைத்துள்ளனர்.**

வடமராட்சி, ஜூலை 18

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் உள்ள தமது சொந்த வீடுகளை விடுவித்து மீள்குடியேற அனுமதிக்குமாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த குடியிருப்பாளர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

"அந்தப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டதால், கடந்த 1996 ஆம் ஆண்டு நாம் அனைவரும் அங்கிருந்து வெளியேறி உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் வசித்து வருகின்றோம்.

ஏனைய இடங்களைப் போல எங்களையும், எங்கள் சொந்த வீடுகளில் மீள்குடியேற அனுமதித்தால் எமது இயல்பு வாழ்க்கையைத் தொடர ஏதுவாக இருக்கும்'' என அந்தப் பகுதி மக்கள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

கொட்டடிப் பகுதியில் ஜே/401 இலக்க கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 30 வீடுகளின் உரிமையாளர்கள் ஒன்றிணைந்து இந்த மனுவை அனுப்பி வைத்துள்ளனர்.

சொந்த வீடுகளில் தாம் குடியேற உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அனுமதி வழங்குமாறு கோரி இந்தக் குடும்பங்கள் ஏற்கனவே பல தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்திருந்தும், இதுவரை எந்தவித முன்னேற்றமும் கிடைக்கவில்லை. இதனையடுத்தே தமது நிலையைத் தெளிவுபடுத்தி, ஜனாதிபதிக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளதாக அந்த மக்கள் தெரிவித்தனர். (த-8)

# கட்டுப்பாட்டை இழந்து கம்பத்துடன் மோதியது மோட்டார் சைக்கிள்

## பயணித்த இருவரும் படுகாயம்

தென்மராட்சி, ஜூலை 18

வேகமாக வந்து முன் சக்கர ரயர் திடீரென வெடித்ததால் கட்டுப்பாட்டினை இழந்த மோட்டார் சைக்கிள், அருகிலிருந்த மின் கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்கு இலக்கானார்கள்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை கனகன்புளியடிச் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

விபத்தில் முகம் மற்றும் தலைப்பகுதிகளில் படுகாயங்களுக்கு இலக்கான மீசாலை மேற்கைச் சேர்ந்த விநாயகமூர்த்தி இளங்கீரன் (வயது - 27) இராமச்சந்திரன் கார்த்தீபன் (வயது - 20) ஆகிய இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (த-9)

# பஸ் மோதி காயமுற்றவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 18

அரியாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மினிபஸ் மோதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் அதிகாலை மரணமானார்.

இந்தச் சம்பவம் ஏ-9 வீதி, அரியாலையில் இடம்பெற்றது. சம்பவத்தில் அரியாலை, துண்டி வீதி யூதா கோயிலடியைச் சேர்ந்த வின்சன் அன்ரன் (வயது-50) என்பவரே மரணமானார்.

கச்சேரியடியில் மேசன் வேலை செய்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இவரை இரவு 9 மணியளவில் மினிபஸ் ஒன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டது. அந்த இடத்தில் நின்ற ஓட்டோ சாரதிகள் மினிபஸ் இலக்கத்தைக் குறித்து பொலிஸாரிடம் கொடுத்ததோடு காயப்பட்டவரையும் வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இந்த நிலையிலேயே நேற்றுமுன்தினம் அதிகாலை அன்ரன் மரணமானார். சந்தேகநபரான மினிபஸ் சாரதியைப் பொலிஸார் கைது செய்தனர். உரிய விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (த-4)

# வேலணைப் பகுதிக்கு விரைவில் கேபிள் தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். நகரில் இருந்து வேலணை வங்களாவடிச் சந்தி வரைக்குமான கேபிள் தொலைபேசி இணைப்பு விரைவில் வழங்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக பண்ணைக் கடலுக்கு ஊடாக தொலைபேசிக் கம்பங்கள் நடும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் யாழ். பிராந்திய அலுவலகம் இதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

குடாநாட்டின் பல இடங்களுக்கும் கேபிள் தொலைபேசி இணைப்பு பரவலாக வழங்கப்பட்டு வருகிறது.

அந்தத் திட்டங்களின் ஒருங்கிணைந்த செயற்பாடாகவே யாழ். நகரில் இருந்து தீவகத்துக்கான கேபிள் தொலைபேசி இணைப்புகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

கடந்த வாரம் முதல் கடலுக்கு ஊடாக கம்பங்களை நடும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் கேபிள் தொலைபேசி இணைப்புகள் தீவகத்தில் செயற்படலாம் எனவும் கூறப்பட்டது. (த-50)

# போதிய வசதிகள் இன்றி கொட்டடி மீன்சந்தை

யாழ்ப்பாணம், ஜூலை 18

கொட்டடி மீன் விற்பனைச் சந்தை போதிய வசதிகள் இன்றிக் காணப்படுகின்றது. இதனால் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சிறிய கட்டடத்தில் இந்தச் சந்தை இயங்குகின்ற போதும் இது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறது. இந்தக் கட்டடத்தினுள் மீன் விற்பனை ஒரு புறமும், மீன்களை வெட்டிப் பதனிடும் பிரிவு இன்னொரு புறமும் மீன்களை மொத்தமாகக் கூறி விற்பனை செய்யும் பிரிவு மற்றொரு புறமுமாகச் செயற்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் சந்தைக் கட்டடம் மிகவும் சிறியதாகக் காணப்படுவது குறித்து எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

நகரின் முக்கிய சந்தையாக இது இருக்கும் நிலையில் எவரும் கவனிக்காதது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ம-17)

# சட்டவிரோத மணல் ஏற்றியமை; தண்டத்தைக் குறைத்தது மன்று

யாழ்ப்பாணம், ஜூலை 18

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற குற்றத்துக்காக அபராதமாக விதிக்கப்பட்ட 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை 35 ஆயிரமாகக் குறைத்துத் தீர்ப்பளித்தது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று.

பொதுத் தேவைக்காகவே மணல் ஏற்றிச் செல்லப்பட்டதாகவும் காரைநகர் பிரதேச மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு முன்னர் விதித்த தண்டனையைக் குறைக்குமாறும் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி மன்றில் கோரியதைப் பரிசீலித்த நீதிவான் அபராதத்தைக் குறைத்து விதித்துத் தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற குற்றத்துக்காக ஊர்காவற்றுறை புளியங்கூடலைச் சேர்ந்த ஒருவருக்கு நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதமும் 5 வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாதச் சிறைத் தண்டனையும் விதித்திருந்தது. மணலைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்ட நீதிமன்று வாகன உரிமைக் கோரிக்கைக்காக வழக்கை ஒத்தி வைத்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே.சுகாஸ், தண்டனையைக் குறைக்குமாறு மனுச்செய்தார்.

மணல் ஏற்றுவதற்கு உரிய முறையில் அனுமதிப் பத்திரம் பெறப்பட்டுள்ளது. காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையெனப் பத்திரத்தில் நேரம் வரையறை செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் டிராக்டர் சில்லு ஒன்று காற்றுப் போய்விட்டதால் அதற்குரிய மாற்று வழிகள் மேற்கொண்டு மீண்டும் புறப்பட்டபோது நேரவரையறையை கடந்து விட்டதனாலேயே சட்டப் பத்திரம் மீறப்பட்டது.

இந்தச் சம்பவம் சட்டவிரோதமானது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அது எதேச்சையாக நிகழ்ந்து விட்டது. தவிர காரைநகரில் கலாசார மண்டபம் ஒன்று காரைநகர் பிரதேச செயலகத்தினால் கட்டப்பட்டு வருகிறது. அதற்குத் தேவையான மண்ணை காரைநகர் பிரதேச சபைத் தலைவரின் டிராக்டரில் ஏற்றி வந்தபோதே பொலிஸாரிடம் பிடிபட்டது. எனவே பிரதேச மக்களது நலனைக் கருத்தில் கொண்டு தண்டனையைக் குறைக்குமாறு கோரியிருந்தார். அதனைப் பரிசீலித்த பின்னரே அபராதத் தொகை 35 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது.

மணல் ஏற்றிச் சென்ற டிராக்டர் சாரதி ஏற்கனவே சட்டவிரோதமாக பல தடவைகள் மணல் ஏற்றிய குற்றத்துக்காக நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டிருந்தார். (த-4)

# வைக்கோல் எடுத்த மாணவனை தீண்டியது பாம்பு

தென்மராட்சி, ஜூலை 18

வைக்கோல் குவியலிலிருந்து மாட்டுக்கு போடுவதற்கு வைக்கோல் எடுத்த பாடசாலை மாணவன் பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரணி - இயற்றாலையில் இடம்பெற்றது. ஆலய உற்சவத்திற்கு செல்வதற்காக அவசரமாகச் சென்று வைக்கோல் எடுத்த போது பாம்பினால் கடியுண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த கனகலிங்கம் நித்தியன் (வயது - 10) என்னும் பாடசாலை மாணவன் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

# தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற ஹென்றியரசர் கல்லூரிக்கு வரவேற்பு



பண்டத்தரிப்பு, ஜூலை 18

அகில இலங்கைத் தமிழ்த் தின நாடகப்போட்டியில் வெற்றி பெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வும், பாராட்டு நிகழ்வும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. நேற்றுமுன்தினம் யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் வந்திறங்கிய வெற்றி பெற்ற நாடகக் குழுவினர் கல்லூரி அதிபர் வணபிதா. ஜே.ஏ.ஜேசுதாஸினால் வரவேற்கப்பட்டுக் கல்லூரியின் பழைய மாணவர்களால் கௌரவிக்கப்பட்டுத் திறந்த ஊர்தியில் இளவாலைக்குப் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் கல்லூரியில் பாராட்டு வைபவமும் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

தேசிய மட்ட தமிழ்த் தின நாடகப் போட்டி கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் கடந்த ஞாயிறுக்கிழமை நடைபெற்றது. இதில் அகில இலங்கை ரீதியாக மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்ற ஒன்பது நாடகக் குழுக்கள் பங்குபற்றியிருந்தன. இதில் வடக்கு மாகாணம் சார்பாக மாகாணத்தில் முதலிடம் பெற்ற புனித ஹென்றியரசர் கல்லூரியும் பங்கு பற்றியிருந்தது.

இந்த நாடகப் போட்டியில் முதலாம் இடத்தை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், இரண்டாம் இடத்தைக் கிழக்கு மாகாணம் சார்பாகப் பங்குபற்றிய மட்டக்களப்பு கரடியனாறு மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை மேல் மாகாணம் சார்பாக பங்குபற்றிய கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

முதலிடம் பெற்ற புனித ஹென்றியரசர் கல்லூரியின் நாடகமானது ''வீடு'' என்ற தொனிப்பொருளில் அமைந்ததாகும். இதனைக் கல்லூரியின் பழைய மாணவர் மக்ஸ்வெல் றொபின்சன் நெறியாள்கை செய்து பயிற்றுவித்தார். (த-130)

# நெடுந்தீவில் தண்ணீர் பரிசோதனை


நெடுந்தீவு சாராப்பிட்டி முருகன் கோயிலடி, வெல்லை, பணங்காணி ஆகிய பகுதிகளில் தண்ணீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இது குறித்த பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இந்தப் பகுதிகளில் நல்ல தண்ணீர் கிடைக்கும் பட்சத்தில் மக்கள் உள்ள பகுதிகளுக்கு அவைகொண்டு செல்லப்பட்டு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் இரண்டு ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் எனவும் கூறப்பட்டது.

இரணைமடு தண்ணீரை பாஜ் மூலம் நெடுந்தீவுக்குக் கொண்டுவரும் திட்டமும் இதற்குள் அடங்குகின்றது. நெடுந்தீவு நீர் விநியோகம் தொடர்பாக குழு ஒன்று அமைக்கப்பட்டு இது குறித்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதுடில்லியில் 84 ஆவது இந்தியன் சபையின் வேளாண் ஆய்வு குறித்து நடந்த விருது வழங்கும் விழா நிகழ்ச்சியில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் மற்றும் மத்திய விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார்.

# 'ஜெ'யின் நீதிபதி நியமன எதிர்ப்பு மனுவை நிராகரித்தது நீதிமன்று



பெங்களூர், ஜூலை 18

சொத்துகுவிப்பு வழக்கை தற்போது விசாரித்து வரும் நீதிபதி மல்லிகார் ஜூனய்யா, அதற்குத் தகுதியற்றவர் என்று ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நேற்று பெங்களூர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தமிழக முதலமைச்சரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலா மீது தொடரப் பட்டுள்ள வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்த வழக்கை விசாரிக்கும் பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி நியமனத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்த ஜெயலலிதா சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுவை நேற்று பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் நிராகரிப்புச் செய்து உத்தரவிட்டது. மேலும், உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படியே சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ஒருமுறை வெளியிடப்பட்ட அரசாணையே, மற்ற நீதிபதி நியமனத்துக்கும் பொருந்தும். எனவே, வழக்கு விசாரணையை தாமதப் படுத்தவே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறி நீதிபதி, ஜெயலலிதாவின் மனுவை நிராகரிப்புச் செய்து உத்தரவிட்டார்.

சொத்து குவிப்பு வழக்கு மீதான விசாரணையை வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார். (வ)

அமர்நாத் யாத்திரிகர் இறப்பு

## உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்

அமர்நாத் பனிலிங்க தரிசன யாத்திரை ஆரம்பமான 17 நாள்களில் 67 யாத்திரிகர்கள் மரணம் அடைந்ததற்கு, உச்ச நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. யாத்திரிகர்களுக்கு முறையான வசதிகளைச்செய்து கொடுக்காதது ஏன் என்று கேள்வி எழுப்பி மத்திய அரசு, ஜம்மு - காஷ்மீர் மாநில அரசு மற்றும் அமர்நாத் குகைக் கோயில் பரிபாலனம் ஆகியவற்றுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக பத்திரிகை களில் வந்த செய்திகளையே மனுவாக ஏற்ற நீதிபதிகள் குழு நேற்றுமுன்தினம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.(வ)

# இந்திய ஜனாதிபதி தேர்தல் நாளை

### நேற்று மாலை நிறைவுக்கு வந்தது பிரசாரம்



டில்லி, ஜூலை 18

இந்தியாவின் 14 ஆவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. தேர்தல் பிரசாரம் நேற்று மாலையுடன் நிறைவுக்கு வந்தது.

தேர்தலில் போட்டியிடும் பிரணாப் முகர்ஜி மற்றும் பி.ஏ.சங்மா தீவிர வாக்கு வேட்டையில் இறங்கியுள்ளனர். ஜனாதிபதி பிரதிபா பாட்டீலின் பதவிக்காலம் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது. இதைத் தொடர்ந்து அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் திகதி கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது. இதன்படி நாளை வியாழக்கிழமை ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற, சட்டசபை உறுப்பினர்கள் வாக்களிக்க உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும், சட்டசபை உறுப்பினர்கள் அந்தந்த மாநில சட்டமன்றத்திலும் வாக்களிக்க வேண்டும். மாநில சட்டமன்றத்தில் வாக்களிக்க விரும்பும் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் தேர்தல் அதிகாரியின் அனுமதியுடன் அவர்கள் சார்ந்த மாநில சட்டசபையில் வாக்களிக்கலாம். தேர்தலை முன்னிட்டு மாநிலங்கள் அனைத்துக்கும் வாக்குப்பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பாக தேர்தலில் போட்டியிடும் பிரணாப் முகர்ஜியும், தேசிய ஜனநாயக கூட்டணி ஆதரவை பெற்றுள்ள எதிர்க்கட்சி வேட்பாளர் பி.ஏ.சங்மாவும் கடைசிக் கட்ட பிரசாரத்தில் இறங்கி இருந்தனர். (வ)

### தமிழக மீனவர் சுட்டுக்கொல்லப்பட்ட விவகாரம்

# அமெரிக்கக் கடற்படைக்கு எதிராக வழக்குத் தாக்கல்

## எமிரேட்ஸ் அரசிடம் வலியுறுத்துகிறது இந்தியா

தமிழக மீனவரைச் சுட்டுக் கொன்ற அமெரிக்கக் கடற்படையினருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய வேண்டும் என்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசிடம் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

துபாய் கடற்பரப்பில் அந்தநாட்டு நிறுவனம் ஒன்றுக்காக ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டிருந்த தமிழக மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது பஹ்ரைனில் முகாமிட்டுள்ள அமெரிக்கக் கடற்படையினர் 5ஆவது படைப் பிரிவுக்காக எரிபொருள் ஏற்றிக் கொண்டு யு.எஸ்.என்.எஸ். ரப்பாஹன்னோக் என்ற கப்பல் துபாயின் ஜபேல் அலி துறைமுகம் அருகே சென்று கொண்டிருந்தது.

தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகு, அமெரிக்க கப்பலின் அருகே சென்ற போது அந்தக்கப்பலில் இருந்த கடற்படையினர் கண்மூடித்தனமாக இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதனால் தமிழக மீனவர் சேகர் உயிரிழந்தார். முனிராஜ், முத்துக்கண்ணன், முருகன் ஆகிய மூன்று மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக அறிக்கை தருமாறும் துபாயில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரியிடம் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதைத்தொடர்ந்து சம்பவ இடத்துக்கு துபாயில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் விரைந்து சென்றனர். அங்கு சிகிச்சை பெற்று வரும் மூன்று தமிழக மீனவர்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர். மேலும் தமிழக மீனவரைச் சுட்டுக் கொன்ற அமெரிக்கக் கடற்படையினர் மீது வழக்குப் பதிவு செய்யுமாறு ஐக்கிய அரபு எமிரேட் அரசிடம் இந்தியத் தூதரக அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கேரளாவின் கொல்லம் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இத்தாலிய கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இருவர் உயிரிழந்தனர். அதைத்தொடர்ந்து இத்தாலிய கடற்படையினர் கைது செய்யபட்டு சிறையில் அடைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக் கின்றனர். இந்தச்சம்பவத்தை முன்னுதாரணமாகக் கொண்டு அமெரிக்கக் கடற்படையினர் மீதும் வழக்குப் பதிவு செய்ய இந்தியத் தூதரக அதிகாரிகள் வலியுறுத்தியிருக்கின்றனர்.

### அறிக்கை தர உத்தரவு

இந்தச்சம்பவம் தொடர்பாக அறிக்கை தருமாறு துபாயில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரியிடம் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக துபாயில் உள்ள தூதரை தொடர்பு கொண்ட வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, உயிரிழந்த மீனவர் சேகரின் உடலை தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரவும் காயமடைந்த மீனவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கவும் உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இதேவேளை தமிழக மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூடு குறித்து அமெரிக்கக் கடற்படையும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

### சென்னை தூதரகம் இரங்கல்

இதனிடையே சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்; துபாயில் அமெரிக்கக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டில் தமிழக மீனவர் சேகர் உயிரிழந்ததற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# தனி ஈழம் அமைவதுதான் இந்தியாவுக்கு பாதுகாப்பு

## சீமான் கருத்து



தனி தமிழ் ஈழம் அமைவது தான் இந்தியாவின் பாது காப்புக்கு உகந்தது என்று நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

காரைக்குடியை அடுத்த கல்லுப்பட்டியில் செய்தியாளர்களிடம் பேசிய நாம் தமிழர் இயக்க தலைவர் சீமான் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை போர்க்குற்றம் செய்த நாடு என்பது ஐ.நா. மன்றத்திலேயே நிரூபிக் கப்பட்டுள்ளது. போர்க்குற்றம் செய்து ஓர் இனத்தையே அழித்த இராணுவத்துக்கு இந்தியா வலிந்து போய் இராணுவ உதவிகளைச் செய்வதும், பயிற்சி அளிப்பதும் ஏற்புடையது அல்ல. இந்தச் செயல் இலங்கையின் போர்க்குற்றத்தை அங்கீகரிக்கும் செயலாகும்.

தனி ஈழம் அமைவதுதான் இந்தியாவின் பாதுகாப்புக்கு உகந்தது. இலங்கையில் சீனா, பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலையே தரும். இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை மிகவும் அபத்தமானது, பாதுகாப்பற்றது.- என்றார். (வ)

### நுழைவுத் தேர்வு விண்ணப்பத்தில் ஐஸ்வர்யா ராயின் புகைப்படம்




கர்நாடக மாநிலத்தில் நுழைவுத் தேர்வு ஒன்றுக்கு விண்ணப்பித்த மாணவர் ஒருவர் தனது புகைப் படத்துக்கு பதிலாக முன்னாள் உலக அழகியும், நடிகையுமான ஐஸ்வர்யா ராயின் புகைப்படத்தை இணைத்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நாராயண கவுடா என்ற இந்த மாணவன் மாநில அளவில் நடக்கும் நுழைவுத்தேர்வுக்கு இணையத்தளம் மூலம் விண்ணப்பித்தான். அதில் தனது புகைப்படத்துக்கு பதிலாக ஐஸ்வர்யா ராயின் புகைப்படத்தை இணைத்துள்ளான். இந்த விடயம் பரீட்சை நிலையத்தில் மாணவர்கள் கையெழுத் திட வேண்டிய தாள் மூலம் தெரிய வந்தது.

# ஆய்வுகூடங்களில் மனிதர்களை வைத்து மருத்துவ ஆராய்ச்சியா?

### உச்சநீதிமன்றம் அதிர்ச்சி

மருத்துவ ஆய்வு கூடங்களில் எலி, நாய் போன்ற விலங்குகளை வைத்து பரிசோதனை நடப்பது போல் மனிதர்களும் இந்தப்பரிசோதனையில் ஈடுபடுத்தப்படுவது குறித்து உச்ச நீதிமன்றம் அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் சில ஆய்வு கூடங்களில் மனிதர்களுக்கு புதிய மருந்துகளை செலுத்தி பரிசோதனை நடப்பதாகவும், அதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென கூறியும் உச்ச நீதிமன்றத்தில் பொது நலன் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர். எம்.லோதா, மத்தியப் பிரதேசம் மற்றும் நாட்டின் எந்த மூலையிலும், மனிதர்களை ஆய்வுக் குட்படுத்தும் செயல் கண்டிக்கத்தக்கதாகும்- என்றார்.

இந்த விடயத்தில் மத்திய, மாநில அரசுகள் தங்களது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மனிதர்கள் பன்றிகளை விட மோசமாக நடத்தப்படுவது துரதிர்ஷ்டவசமானதாகும். இது குறித்து 8 வார காலத்துக்குள் பதிலளிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கும், மத்திய பிரதேச மாநில அரசுக்கும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் நடப்பது உள்நாட்டுப் போர் செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு!

சிரியாவில் நடைபெற்று வருவது உள்நாட்டுப் போர் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முறைப்படி அறிவித்துள்ளது. இதையடுத்து அங்கு நடைபெறும் மோதலுக்குக் காரணமானவர்கள் மீதும், வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீதும் போர்க் குற்ற விசாரணை நடத்தித் தண்டனை அளிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பசார் அல்-அசாத்துக்கு எதிராக இராணுவத்திலிருந்து பிரிந்து சென்றவர்களும், அரசு எதிர்ப்பாளர்களும் இணைந்து போராட்டம் நடத்திவருகின்றனர்.

இந்தத்தாக்குதலை நிறுத்துமாறு சர்வதேச நாடுகள் கோரிக்கை விடுத்தபோதும், அதிபர் அதை ஏற்கவில்லை. அண்மையில் டிரெம்சே என்ற பகுதியில் இராணுவத்தினர்

**ஐ.நா. சபையில் சிரிய அரசுக்கு எதிராகச் சர்வதேச பொருளாதாரத் தடை தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று பிரிட்டன் கோரிக்கை விடுத்துள்ளது.**

நடத்திய தாக்குதலில் ஏராளமானோர் கொல்லப்பட்டதாகத் தகவல் வெளியானது. அங்கு ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை நடத்தினர். அதில், வீடுவீடாகச் சென்று அடையாள அட்டைகளை சரிபார்த்த இராணுவத்தினர், சிலரைக் கொன்றதாகவும், சிலரைக் கைது செய்து அழைத்துச் சென்றதாகவும் தெரியவந்தது.

இந்தத்தாக்குதலில் 200 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டதாக வெளியான செய்தியை அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜிகாத் மக்தஸி மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்:

''அந்தப்பகுதி அரசு எதிர்ப்பாளர்களின் வசம் இருந்தது. அதை மீட்பதற்காகத்தான் இராணுவத்தினர் அங்கு சென்றனர். துப்பாக்கி ஏந்திப் போராடிய 37 அரசு எதிர்ப்பாளர்களும், 2 பொது மக்களும்தான் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் பீரங்கி உள்ளிட்ட கனரக வாகனங்கள் எதையும் பயன்படுத்தவில்லை'' என்றார்.

ஆனால், இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கடுமையான தாக்குதலை நடத்துவதாகவும், குண்டுவீசித் தாக்க ஹெலிகொப்டரை பயன்படுத்துவதாகவும் ஐ.நா. குழுவினர் உறுதிப் படுத்தியுள்ளனர். கடந்த 16 மாதங்களாக நிகழ்ந்துவரும் மோதலில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்திருப்பார்கள் என்றும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா. சபையில் சிரியா அரசுக்கு எதிராகச் சர்வதேச பொருளாதாரத் தடைகளை விதிப்பது தொடர்பாக கொண்டு வரப்படும் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று பிரிட்டன் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக இந்திய அரசு அதிகாரிகளைச் சந்தித்துப் பேச பிரிட்டனின் அரபு நாடுகள் விவகார வெளியுறவுத் துறை அதிகாரி இர்ஃபான் சித்திக்விரைவில்டில்லி செல்லவுள்ளார். (வ)



சிரியா பிரச்சினை குறித்துப் பேச ரஷ்யா சென்றுள்ள அமெரிக்கவின் சிறப்புத் தூதர் கொபி அனான், மொஸ்கோவில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவைச் சந்தித்துப் பேசினார். (வ)

## வடகொரியா இராணுவத் தலைவர் ராஜினாமா



வடகொரியாவின் இராணுவத் தலைவர் ரி யோங் ஹோ தனது இராணுவத்தலைவர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

வடகொரியாவின் தொழிலாளர் கட்சித் தலைவராகவும், இராணுவத் தலைவராகவும், இராணுவ குழுத் துணைத் தலைவராகவும் இருந்தவர் ரி யோங் ஹோ. கடந்த 15 ஆம் திகதி நடந்த தொழிலாளர் கட்சியின் உயர்பீட (பொலிட் பீரோ) கூட்டத்தில் பங்கேற்ற ரியோங்ஹோ, உடல் நலத்தை காரணம் காட்டி அனைத்துப் பதவியிலிருந்தும் விலகுவதாக அறிவித்தார்.

இவரது ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. எனினும் இவர் வகித்த இராணுவத் தலைவர் பதவிக்கு யார் நியமிக்கப்படுவார்கள் என்பது இன்னும் அறிவிக்கப்படவில்லை. கடந்த மூன்றாண்டுகளுக்கு முன் ரி யோங் ஹோ, இராணுவத் தலைவராகப் பதவி ஏற்றார். (வ)

## அகதிகள் நாடு கடத்தலுக்கு ஜேர்மன் நீதிமன்றம் தடை

இத்தாலியிலிருந்து அகதிகளாக ஜேர்மனிக்கு வந்த பலஸ்தீனக் குடும்பத்தினரை திருப்பி அனுப்பக்கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத்தாலியிலிருந்து வரும் அகதிகள் அங்கு அடிப்படைத் தேவைகளான உணவு, குடிதண்ணீர், மின்சாரம் மற்றும் தங்குமிடமின்றிப் ஏனைய நாடுகளைத் தேடி வருகின்றனர்.

இந்த நிலையில் இவர்களைத் திரும்பவும் அதே நாட்டுக்கு அனுப்புவது மனிதாபிமானமற்ற செயலாகும். அவர்களை அவமதிக்கும் நடவடிக்கையுமாகும் என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. இந்தத் தீர்ப்பு கடந்த 2 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இதன்படி இந்தக் குடும்பத்தினர் ஜேர்மனியில் தொடர்ந்து வசிக்கலாம்.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான டப்ளின் சட்டம், முறையான அனுமதி பெற்று வராத அகதிகளைத் திரும்பவும் அவர்கள் எந்த ஐரோப்பிய நாட்டிலிருந்து வந்தார்களோ அங்கேயே திருப்பி அனுப்பிவிடுமாறு கூறுகிறது.

எனவே இத்தாலியில் இருந்து வந்த இந்தப் பலஸ்தீனியக் குடும்பத்தை திரும்பவும் இத்தாலிக்கே அனுப்ப அரசு முனைந்தது. இந்தச் சட்டம் புகலிடம் தேடுவோரின் இன்றைய நிலையை உணர்த்துவதாக இல்லை என்று சிலர் விமர்சிக்கின்றனர். (வ)

## ஜப்பானில் அணு உலைக்கு எதிராக மக்கள் பேரணி



கோடையில் தற்போது ஏற்படும் மின்தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக அணு உலையைத் திறக்க ஜப்பான் அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் பிரம்மாண்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

ஜப்பானில் கடந்தாண்டு மார்ச் மாதம் ஏற்பட்ட சுனாமியின் போது புகுஷிமா அணு உலை பெரும் சேதத்தைச் சந்தித்தது. இதையடுத்து அந்த அணு உலையை வேகமாக மூடியதுடன், மற்ற அணு உலைகளையும் மூட அந்தநாட்டு அரசு நடவடிக்கை எடுத்தது.

இந்தநிலையில் தற்போது கோடையில் ஏற்படும் மின்தட்டுப்பாட்டைச் சமாளிக்க அணு உலையைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டோக்கியோவில் யோயோகி பார்க் அருகில் நேற்று முன்தினம் பிரம் மாண்டப் பேரணி நடைபெற்றது. இந்தப்பேரணியில் ஈடுபட்டவர்கள் அணு உலையைத் திறக்க அனுமதி அளித்துள்ள பிரதமர் நோடா பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்திக் கோஷமிட்டனர்.

மேலும் இந்தப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். அணு உலைக்கு எதிராகப் போராட்டத்தில் பங்கேற்கும் நபர்களின் எண்ணிக்கையை ஒரு லட்சத்து 70 ஆயிரமாக உயர்த்த இலக்கு நிர்ணயித்திருப்பதாகப் போராட்டக் குழு அமைப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நோபல் பரிசு பெற்ற பிரபல நாவலாசிரியர் கென்ஸாபி யூரோ மற்றும் இசையமைப்பாளர் ரூயிச்சி சகாமோடோ ஆகியோரும் இந்தப் பேரணியில் கலந்து கொண்டனர். (வ)

## தீக்குளித்து உடல் கருகியவர் ஐஸ் சாப்பிட்ட விசித்திரம்



டெல் அவிவ், ஜூலை 18

சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்தி இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் நகரில் நடந்த பேரணியில் கலந்து கொண்ட நபர் ஒருவர் தீக்குளித்து உடல் கருகிய நிலையிலும் ஐஸ் சாப்பிட்ட விசித்திரமான சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்தி இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் நகரில் நடந்த பேரணியில் கலந்து கொண்ட ஒருவர் திடீரெனத் தீக்குளித்தார்.

அந்த நபரின் பெயர் மோஷே சில்மான்(வயது 57). இவர் சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்தி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற டெல்அவிவ் நகரில்நடந்த பேரணியில் கலந்து கொண்டார்.

பேரணியின் போது திடீரென தீக்குளித்துவிட்டார் மோஷே. தனது உடல் மீது பெற்றோல் ஊற்றி பற்ற வைத்துக் கொண்டார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக அருகில் இருந்தவர்கள் கடுமையாகப் போராடி தீயை அணைத்தனர். அவர் மீது தண்ணீரை ஊற்றி உட்கார வைத்தனர். பின்னர் அவருக்கு ஐஸ் பழத்தைக் கொடுத்தனர். அதை வாங்கி நிதானமாகச் சாப்பிட்டார் மோஷே.

அதன் பின்னர் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், 80 சதவீத அளவுக்கு உடலில் தீக் காயம் ஏற்பட்டிருப்பதாகக் கூறினர். இதனால் தற்போது ஆபத்தான நிலையில் மோஷே சிகிச்சை பெற்று வருகிறார். மோஷே தீக்குளித்தது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நதன்யாஹு கவலை தெரிவித்துள்ளார். அவர் விரைவில் குணமடைய வாழ்த்துவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (வ)

## மீண்டும் சிறையில் முபாரக்



எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

எகிப்தில் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தியதால், பதவியிலிருந்து விலகினார்.

போராட்டத்தின் போது பொதுமக்களைக் கொன்று குவித்தமை, ஊழல் போன்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டு, தற்போது ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட முபாரக், டோராவில் உள்ள சிறைத்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு உடல் நிலை மோசமடைந்ததால் கடந்த மாதம் 19ஆம் திகதி இராணுவ மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அப்போது அவர் இறந்து விட்டதாகத் தகவல் பரவிப் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் தற்போது முபாரக்கின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதை யடுத்து, மீண்டும் டோரா சிறை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (வ)

## ஐ.நாவின் சிரிய தீர்மானம் மேற்குலக நாடுகளின் மிரட்டலே

### ரஷ்யா குற்றச்சாட்டு

சிரியா மீதான ஐ.நா. பாதுகாப்புச் சபையின் புதிய தீர்மானம் தொடர்பாக மேற்குலக நாடுகள் மிரட்டுவதாக ரஷ்யா குற்றம் சுமத்தியுள்ளது.

ஐ.நா. மற்றும் அரபு கூட்டமைப்பு நாடுகளின் சிரியாவுக்கான தூதரான கொபி அனானை ரஷ்ய வெளிவிவகாரத்துறை அமைச்சர் சேர்ஜி லாவ்ரோவ் மொஸ்கோவில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார்.

இதற்கு முன்பு லாவ்ரோவ் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

ரஷ்யாவும், சீனாவும் சிரியா ஜனாதிபதி அசாத்துக்கு ஆதரவாகச் செயற்படுகின்றன என்ற குற்றச்சாட்டு அபத்தமானது.

நாம் அசாத்துக்கு ஆதரவளிக்கவில்லை. அனைத்து நாடுகளும் ஆதரவுதரும் கொபி அனானின் திட்டத்துக்கே சார்பாக உள்ளோம்.

மேலும் சிரிய ஜனாதிபதி அசாத்தை பதவி விலகச் செய்ய ரஷ்யாவினால் தான் முடியும் என்பது அர்த்தமற்றது-என்றார்.

முன்னாள் சோவியத் யூனியனின் காலத்தில் இருந்தே ரஷ்யாவும், சிரியாவும் நெருங்கிய உறவைப் பேணி வருகின்றன. இந்த நிலையில் சிரியாவின் மோதலை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யா உதவி அளிக்க வேண்டும் என்று மேற்குலக நாடுகள் எதிர்பார்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றுநோயால் சூடான் அகதிகள் அவலநிலையில்



தெற்கு சூடானின் மேலை நைல் மாகாணத்தில் உள்ள அகதிமுகாமில் உள்ள மக்கள் தொற்று நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

சூடானுக்கும், தெற்கு சூடானுக்கும் இடையிலான எல்லை விவகாரத்தில், அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தாண்டில் தெற்கு சூடான் விடுதலையானதில் இருந்து இரு நாட்டின் எல்லைப் பகுதிகளிலும் வன்முறை அதிகமாகி விட்டது.

இதனையடுத்து ஒவ்வொரு நாளும் தெற்கு சூடானிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் சூடான் நோக்கி அகதிகளாகச் செல்கின்றனர். இவர்களில் 2 ஆயிரம் பேர் சிறுவர்களாவர்.

இதுதவிர அங்குள்ள அகதிகள் முகாமில் மோசமான சுகாதார சூழ்நிலையால் மக்கள் கடும் அவதிக்கு ஆளாகின்றனர்.

தெற்கு சூடானின் மேலை நைல் மாகாணத்தில் உள்ள ஜமாம் அகதிகள் முகாமில் ஆரம்பத்தில் 30 வீதம் பேர் நோய்த் தாக்குதலுக்கு ஆளாயினர். இப்போது ஏறத்தாழ 60வீதம் பேர் இந்த நிலையைச் சந்தித்து வருகின்றனர்.

பல மைல் தூரம் நடந்து வந்த களைப்பும், பசியும், தாகமும் கொண்ட ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தினந்தோறும் அகதிகள் முகாமை வந்து அடைகின்றன.

இந்தப்பகுதியில் பெய்து வரும் அடைமழை காரணமாக இந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை உடனுக்குடன் கொண்டு சேர்க்கவும் இயலவில்லை.

சிறுவர்களைப் பசியும், பிணியும் தாக்குவதால் அவர்களை உடனே காப்பாற்ற வேண்டிய நிலை உருவாகி உள்ளது. (வ)

## சர்வதேச விண்வெளி நிலையத்தில் இணைந்தனர் சுனிதா குழுவினர்



இரண்டு தினங்களுக்கு முன்பு சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றவர்களான சுனிதா வில்லியம்ஸ் தலைமையில் ஜப்பான், ரஷ்யா நாட்டு விஞ்ஞானிகள் சர்வதேச விண்வெளிக் குழுவினருடன் நேற்று இணைந்தனர்.

அமெரிக்காவின் நாசா மூலம் இரண்டு தினங்களுக்கு முன்பு, சுனிதா வில்லியம்ஸ் தலைமையில் ஜப்பான், ரஷ்யா நாட்டு விஞ்ஞானிகள் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குப் புறப்பட்டனர்.

தங்களது இரண்டு நாள் பயணத்திற்குப் பின்பு, நேற்று சுனிதா தலைமையிலான குழுவினர் அவர்களுடன் இணைந்து கொண்டனர்.

ஏற்கனவே இந்த நிலையத்தில் பல நாடுகளிலிருந்து 32 விஞ்ஞானிகள் பணியாற்றி வருகின்றனர். நேற்று இணைந்த சுனிதா குழுவினர் அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவர்.

இந்தக்குழுவினர் விண்வெளியிலிருந்தே ஒலிம்பிக் போட்டிகளைக் கண்டுகளிக்க உள்ளனர். மேலும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலும் வாக்களிக்க உள்ளனர். (வ)

## 5 மாதங்களுக்கு முன்னரே பாகிஸ்தானில் தேர்தல்

பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு 5 மாதங்களுக்கு முன் கூட்டியே நவம்பர் மாதம் முதல் வாரத்தில் தேர்தல் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனை பாகிஸ்தான் சுதந்திர தினத்தன்று பிரதமர் ராஜா பர்வேஸ் அஷ்ரப் அதிகாரபூர்வமாக அறிவிப்பார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் அதிபர் சர்தாரியின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சி கூட்டணியின் ஆட்சி நடைபெற்று வருகின்றது. தற்போது பிரதமராக ராஜா பர்வேஸ் அஷரப் இருக்கிறார். இந்த ஆட்சியில் ஊழல் மலிந்து கிடக்கிறது என்றும், நிர்வாகத் திறமை இல்லை என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன. இதனை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களையும் நடத்தி வருகின்றன.

இதற்கிடையில் அதிபர் சர்தாரி மீதான முறைப்பாட்டில் சுவிற்ஸர்லாந்து வங்கி அதிகாரிகளுக்கு கடிதம் எழுதும்படி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதைச் செயற்படுத்த மறுத்ததால் கிலானியின் பிரதமர் பதவி பறிக்கப்பட்டது. இவருக்கு அடுத்து பிரதமரான அஷரப்புக்கும் இந்த வழக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது எதிர்வரும் 25 ஆம் திகதி வரையில் உச்ச நீதிமன்றம் கெடு விதித்து இருக்கிறது. இதனால் பாகிஸ்தான் அரசுக்கு கடும் நெருக்கடி உருவாகி இருக்கிறது.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்துக்கு அடுத்த வருடம் மார்ச் மாதம் தேர்தல் நடைபெற வேண்டும். ஆனால் தற்போதுள்ள நெருக்கடியில் இருந்து மீள முன் கூட்டியே இந்த ஆண்டு இறுதிக்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த ஆளுங்கட்சி தீர்மானித்து அதில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

## அமெரிக்கா சென்ற விமானத்தில் வழங்கிய சாண்ட்விச்சில் ஊசிகள்

வொஷிங்டன், ஜூலை18

அமெரிக்கா சென்ற விமானங்களில் பயணிகளுக்கு வழங்கப்பட்ட 'சாண்ட்விச்'சில் ஊசிகள் இருந்தமை பீதியை ஏற்படுத்தியுள்ளது.

'சாண்ட்விச்'சில் ஊசிகள் எப்படி வந்தன என்பது தொடர்பாக அமெரிக்காவின் டெல்டா ஏர்லைன்ஸ் நிறுவனமும் எப்.பி.ஐயும் விசாரணை நடத்தி வருகின்றன.

நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து அமெரிக்காவின் டெல்டா ஏர்லைன்ஸ் விமானம் புறப்பட்டுச் சென்றது.

அப்போது அந்த விமானத்தில் பயணிகளுக்கு வழங்கப்பட்ட 5 'சாண்ட்விச்'களில் ஊசிகள் இருந்தமை தெரியவந்தது. ஒரு பயணியின் தொண்டையில் ஊசி குத்தியும் காயப்படுத்தி விட்டது. இதனால் பயணிகளுக்கு வழங்கப்பட்ட 'சாண்ட்விச்'கள் திரும்பப்பெறப்பட்டன.

இந்தத் தகவல் அனைத்து அமெரிக்க விமானங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. இதனால் அனைத்து விமானங்களிலும் சாண்ட்விச்சுகள் பரிசோதிக்கப்பட்டன. அப்போது அட்லாண்டா மற்றும் சியாட்டில் செல்லும் விமானங்களில் இருந்த சாண்ட்விச்சுகளிலும் ஊசிகள் இருப்பது கண்டறியப்பட்டன. இதனால் சாண்ட்விச்சுகள் திரும்பப் பெறப்பட்டு வேறு உணவுகள் வழங்கப்பட்டன. (வ)


### வாடகைக்குத் தேவை

யாழ். மத்திய பகுதி, கோயில் வீதி, நாவலர் வீதி, நல்லூர் வீதி ஆகிய இடங்களில் சிறிய குடும்பம் தங்குவதற்கு சகலவசதிகளுடனும் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 075 0698608

(20558)(6-7-8)

### வாடகைக்கு

NPLE - xxxx என்னும் இலக்கமுடைய ISUZU ஹன்டர் (Hanter) ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்குக் கொடுக்கப்படும்

தொடர்பு :077 9462841

(20557)(6-7-8)

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் மெயின் றோட்டில் உள்ள ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் உள்ள 10 அடி பாதையுடன் அமைந்துள்ள பொழி கல்லு கிணற்றுடனும் பனை, தென்னை உட்பட 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 6618920

(20434(6-7-8)

### காணி விற்பனைக்கு உண்டு

இல. 30/2, கனகரட்ணம் வீதி, அரியாலையில் 03 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 4046272, 021 3217918

(20404)(6-7-8)

### காணி விற்பனைக்குண்டு

கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் கச்சாய் தோட்டம் மாரியான் காடு என்னும் 17 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தென்னை பயிரிடக்கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 5227107

(20658)(6-7-8)

### காணவில்லை



கண்டி வீதி, பரந்தனில் வசிக்கும் வீராசாமி ஜெயசீலன் (வயது 12), வீராசாமி சந்திரகுமார் (வயது 08), அஜந்தன் (வயது 14) இவர்கள் மூவரையும் 05.07.2012 இல் இருந்து பரந்தனில் காணவில்லை. இவர்களைக் காண்பவர்கள் தயவு செய்து உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 077 5230344

(20575)(6-7-8)




### ஆண்டுகள் பன்னிரண்டில்



மண்ணில்
1942★01★30

விண்ணில்
2000★07★18

வேலுப்பிள்ளை கனகரட்ணம்

[ADP - பிரதேச செயலகம் – சண்டிலிப்பாய்]

பன்னிரு ஆண்டுகளில்
பற்பல மாற்றங்கள் பார்ப்பவர்கள் பார்வைகளோ
பல்வேறு கோணங்கள் பந்தங்கள் பாசங்கள்
பற்பல மாற்றங்கள் இத்தனையும் பார்த்தபடி
விண்ணுலகில் நீங்கள் உங்கள் ஆசியுடன்
இவ்வுலகில் நாங்கள்.....
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

'செல்வகிரி'
மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
075 0418170

உங்கள்:
நீலபன், மேகலா
கோகு, அர்ச்சா.

(f/1536)(6-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைகள் சாதனைகள் ஆகட்டும்

(2)

எந்தக் காரியத்தை நாம் தொடங்கினாலும் அதில் இடையூறுகளும், கஷ்டங்களும் தோன்றவே செய்யும். கஷ்டம் அல்லது இடையூறு ஏற்படுகிறது என்பதற்காக நாம் மேற்கொள்ளும் முயற்சிகளைக் கைவிட்டு ஓடிவிட முடியாது.

அவற்றை எப்படிச் சமாளிப்பது என்று முதலில் யோசிக்க வேண்டும். அப்போது சமாளிப்பதற்கான வழிகள் தாமாகவே தோன்ற ஆரம்பிக்கும். எந்தச் சோதனைக்கும் ஒரு முடிவு இருக்கவே செய்கிறது.

கஷ்டங்களும் பிரச்சினைகளும் இல்லாமல் வாழ்க்கை இருக்க முடியாது. அவற்றைச் சந்திப்பதுதான் வாழ்க்கை. அவற்றை வெற்றி கொள்ளுவதுதான் லட்சியத்தை அடையும் வழி. இதை முதலில் தெளிவுபடுத்திக் கொண்டால் சோதனைகளைச் சமாளிக்கும் மன உறுதியும் தானாகவே ஏற்பட்டு விடும்.



காந்தியடிகள் தன்னுடைய சுயசரிதைக்கு 'சத்தியசோதனை என்று பெயரிட்டார். இந்தப் பெயரை அவர்ஏதற்காக வைக்கவேண்டும்? வாழ்க்கை பூராவும், என்ன கஷ்டங்கள் வந்தாலும், உண்மையே பேச வேண்டும் என்று அவர் பிரதிக்ஞை செய்து கொண்டார். அந்த முயற்சியில் அவர் ஈடுபட்ட போது, சொந்த வாழ்க்கையிலும் சரி, அரசியல் வாழ்க்கையிலும் சரி, பல சோதனைகளை அவர் சந்திக்க வேண்டியிருந்தது.

அதனால் தான் தன்னுடைய சுயசரிதைக்கு' சத்தியசோதனை எனப் பெயர் வைத்தார். அவருடைய வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகளையும், கஷ்டங்களையும் அவர் எதிர் நோக்கியிருக்கிறார். அவற்றை சாத்வீக முறையில் சந்தித்து எந்தச் சந்தர்ப்பத்திலும் உண்மை தவறாதபடி நடந்து கொண்டதிலேயே அவருடைய வாழ்க்கை வெற்றியாக அமைந்தது. 'மகாத்மா எனவும் அவர் போற்றப்பட்டார்.

வெற்றி பெற்ற எந்த மனிதனுடைய வாழ்க்கையும் சோதனைகளை வெற்றி கொண்டு மீண்ட கதையாகவே இருக்கும். பெரிய மனிதர்களானாலும், சாதாரண மனிதர்களானாலும் எல்லோருடைய வாழ்க்கைக்கும் இந்த உண்மை பொருந்தும்.

சோதனைகள் என்பது வாழ்க்கையில் அனைவருக்கும் ஏற்படக்கூடிய ஒன்று தான் என்பதை முதலில் ஏற்க நாம் பழகிக் கொள்ள வேண்டும். சோதனைகள் தவிர்க்க முடியாதவை என்று ஆகிவிட்ட பின்பு அவற்றைச் சந்திக்கத்தானே வேண்டும்! எந்த மனிதனும் தன்னுடைய வாழ்க்கை வெற்றிபெற வேண்டும் என்று தான் ஆசைப்படுகின்றான். ஆனால் எல்லோருடைய வாழ்க்கையிலும் வெற்றி கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். சோதனைகளைச் சந்திக்கத் தயாராக இருப்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள். சோதனைகளைக் கண்டு பயப்படுகிறவர்கள் தோல்வியடைகிறார்கள்.

சோதனைக்ளை வாழ்க்கையில் ஒரு பகுதியாக ஏற்றுக் கொண்டு விட்டால் சிரமமே இருக்காது. சில சமயங்களில் நாம் ஒரு தவறான முடிவுக்கு வந்து விடுகிறோம். சிலர் எப்போதும் மகிழ்ச்சியாகவே காணப்படுவார்கள். அவர்களைப் பார்க்கும் போது, இவர்களுக்கு வாழ்க்கையில் கஷ்டமே இல்லை போலிருக்கிறது என்று நாம் நினைத்துக் கொள்வோம். அவர்களுடைய நிஜமான வாழ்க்கையை அறியும்போது தான், இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் இவர்களால் எப்படி இவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்க முடிகிறது என்று ஆச்சரியப்படுவோம்.

கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டு மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒரு மனோபாவம் வேண்டும். இந்த மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளுவதில்தான் வாழ்க்கையில் வெற்றியே இருக்கிறது. சோதனை என்பது உண்மையில் என்ன என்று கொஞ்சம் ஆராய்ந்து பார்க்கலாம்.

படித்துப் பட்டம் பெற்ற ஒருவன் வேலை தேடி பல இடங்களிலும் அலைகிறான். எங்கும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. வீட்டிலோ வறுமை. குடும்பத்தின் கஷ்டத்தைப் பார்க்கும்போது அவனுக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது. எவ்வளவோ செலவு செய்து பெற்றோர்கள் அவனைப் படிக்க வைத்தார்கள். அவனும் நன்றாகப் படித்து நிறைய மதிப்பெண்கள் வாங்கி பரீட்சையில் சித்தியடைந்து விட்டான். ஆனால் படித்ததன் நோக்கம் நிறைவேறவில்லை. எங்கேயும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை.

இது அவனுக்கு ஏற்பட்ட சோதனை என்பதில் சந்தேகமில்லை. இந்தச் சோதனை ஏற்பட்டதால் அவன் மனம் உடைந்து போகலாமா என்பதுதான் கேள்வி.

வேலை தேடிக் கிடைக்காத போது ஏமாற்றம் ஏற்படுவது இயற்கையே. அதற்காக தன் வாழ்க்கையே இருண்டு விட்டது என்கிற முடிவுக்கு அவன் வரவேண்டிய அவசியமில்லை. இந்தச் சோதனையில் அவன் வெற்றி காண்பதைப் பொறுத்தே அவனுடைய எதிர்காலம் அமையப் போகிறது.

அவன் என்ன செய்ய வேண்டும்? வேலை கிடைக்கவில்லை என்பதற்காக சோகத்துடன் அவன் நடமாடிக் கொண்டிருந்தால் அவன் மீது நம்பிக்கை வைத்து எவரும் வேலை தர முன் வர மாட்டார்கள்.

-பி.சி.கணேசன்-

(தொடரும்)

# கலை கலாசாரங்களைப் பாதுகாத்துப் பேணி அரும்பணியாற்றியவர் மரியசேவியர்

## ஆயர் மேதகு ஒஸ்வேல்ட் கோமிஸ் ஆண்டகை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஒவ்வொரு இனத்தினதும் கலை, கலாசாரங்களைப் பாதுகாத்து துறைசார்ந்த பணிகளை நிறைவேற்றியவர்களை நாம் மறந்து விடமுடியாது. இவர்களின் ஆளுமை மிக்க செயற்பாட்டினாலே தான் கலை, கலாசாரங்கள் பொக்கிஷங்களாக இன்றும் நிலைத்து நிற்கின்றன.

அப்படிப்பட்ட அரும் பெரும் பணியை, தனது காலத்தில் நிறைவேற்றியவர் அருட்திரு மரிய சேவியர் என்பதை நாம் மறந்துவிட முடியாது என்று கொழும்பு மறை மாவட்ட ஆயர் மேதகு ஒஸ்வேல்ட் கோமிஸ் ஆண்டகை தெரிவித்தார்.

திருமறைக் கலாமன்ற ஸ்தாபகர் அருட்கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் குருத்துவப் பொன் விழா கடந்த 14 ஆம் திகதி யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஒஸ்வேல்ட் கோமின் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

**ஒவ்வொரு இனத்துக்கும், மதத்துக்கும் என தனிப்பட்ட கலை, பண்பாடுகள், கலாசாரங்கள் மாறுபட்டதாகவே இருக்கும்.**

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு இனத்துக்கும், மதத்துக்கும் என தனிப்பட்ட கலை, பண்பாடுகள், கலாசாரங்கள் மாறுபட்டதாகவே இருக்கும். இவற்றைக் காலத்தால் அழியவிடாது பாதுகாக்க, கலை ஆர்வலர்கள் இன்னும் தமது பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

எனினும் கடந்த காலங்களில் கலை ரீதியாக தமது பணிகளை செவ்வெனே நிறைவேற்றியவர்கள் மறைந்தாலும், கலைகள் என்றுமே மறைந்து விடாமல் நடமாடிக் கொண்டிருக்கின்றன. இவை தனிப்பட்ட ஓர் சமுதாயத்தின் பொக்கிஷம் என்று மத ரீதியாகவும், இன ரீதியாகவும் உயர்ந்த நிலையைப் பெறுவதற்கான வழியாக அமைந்துள்ளன.

தனது வாழ்நாளில் மரிய சேவியர் அடிகள் இன, மத, மொழி கடந்து தனிப்பட்ட கலைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, கலை ஆளுமையை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல் இன்று அவை மக்களால் பேசப்படும் ஒன்றாக திகழும் வகையில் தனது கலைப்பணியை நடத்தியவர் ஆவார்.

இவரைப் போன்று பணிகளை ஆற்றியவர்கள் பலர் மறைந்தாலும் கலை வடிவில் வாழ்ந்து கொண்டே தான் இருக்கிறார்கள். எனவே இத்தகைய பொக்கிஷங்களை எம் தலைமுறை பாதுகாப்பாக பேணி வழி நடத்த வேண்டும் - என்றார்.

(எ-14-135)



திருமறை கலா மன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குநருமான அருட் கலாநிதி நீ.மரியசேவியர் அடிகளாரின் குருத்துவ பொன் விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் மன்னார் ஒஸ்வேல்ட் கோமிஸ் ஆண்டகை மரியசேவியருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். (135)

# ஆக்கம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் நடத்தப்படவுள்ள கலாசார விழாவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள கலாசார செய்தி மடலுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை அனுப்புவோர் தமது சொந்தப் படைப்பான பிரதேசம் சார்ந்த பிரதிபலிப்புடையதான கட்டுரை, கவிதை, சிறுகதை, செய்தித் துளிகள், விடுகதைகள், குறுங்கதைகள் போன்ற ஆக்கங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், நெடுந்தீவு எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-14)

# ஜெய்ப்பூர் நடத்திய போட்டி முடிவுகள்

கொழும்புத்துறை, ஜூலை 18

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வெள்ளிவிழாவில் நிறுவனப் பயனாளிகளிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. விவரம் வருமாறு:-

**சைக்கிள் ஓட்டம்**

**முழங்காலுக்கு மேல்**

**ஆண் - 40 வயதுக்கு மேல்**

1 ஆம் இடம் - எம்.பொன்னுத்துரை (தாவடி), 2 ஆம் இடம் - எஸ். சுப்பிரமணியம் - (தருமபுரம்).

**ஆண் -40 வயதுக்கு கீழ்**

1 ஆம் இடம் - ஆர்.பீரதீபன் (புலோலி), 2 ஆம் இடம்- வி.தனுசியன் (தெல்லிப்பழை), 3 ஆம் இடம் - ஆர்.புவிராஜ் (மானிப்பாய்).

**பெண் 40 வயதுக்கு கீழ்**

1 ஆம் இடம் - திருமதி பி.ஞானசவுந்தரி (இளவாலை), 2 ஆம் இடம் - ஆர். கம்சா (கோண்டாவில்), 3 ஆம் இடம் - ஆர்.மோகனகலா (கொடிகாமம்).

**முழங்காலுக்கு கீழ்**

**ஆண் -40 வயதுக்கு கீழ்**

1 ஆம் இடம் - ஆர். உதயகுமார் (தெல்லிப்பழை), 2 ஆம் இடம் - ரி.அனுராசா (மீசாலை), 3 ஆம் இடம் - கே.ஜெயகுமார் (விசுவமடு).

**பெண்- 40 வயதுக்கு கீழ்**

1 ஆம் இடம் - ரி.புஸ்பநிதி (கொடிகாமம்), 2 ஆம் இடம்- எஸ். யசிந்தா (எழுவைதீவு), 3 ஆம் இடம்- திருமதிஎஸ். ரஞ்சிதமலர் (அரியாலை).

**ஓட்டோ ஓட்டம், ஆண்**

1 ஆம் இடம் - எஸ்.[illegible] ([illegible]), 2 ஆம் இடம் - கே.ராஜேந்திரன் (வட்டுக்கோட்டை), 3 ஆம் இடம் - எம்.அற்புதராஜா (உடுவில்)

**100 மீற்றர் ஓட்டம்**

**ஆண் (மு.மேல்) - 40 வயதுக்கு மேல்**

1 ஆம் இடம் - எம்.பொன்னுத்துரை (அரியாலை), 2 ஆம் இடம் - பி.பரமகுமார் (ஓட்டுமடம்), 3 ஆம் இடம் - எஸ். சுப்பிரமணியம் (தருமபுரம்).

**ஆண் (மு.மேல்) - 40 வயதுக்கு கீழ்**

1 ஆம் இடம் - கே.நவநீதன் (கிளிநொச்சி), 2 ஆம் இடம் - ஆர்.பிரதீபன் (புலோலி), 3 ஆம் இடம் - எஸ்.கபின்ராஜ் (வவுனியா).

**ஆண் (மு.கீழ்) -40 வயதுக்கு கீழ்**

1 ஆம் இடம் - ஆர்.உதயகுமார் (தெல்லிப்பழை), 2 ஆம் இடம் - எல்.ஜெயக்குமார் (பெரியவிளான்), 3 ஆம் இடம்- கே.ஜெயக்குமார் (விசுவமடு).

**பெண் (மு.மேல்) - 40 வயதுக்கு கீழ்**

1 ஆம் இடம் - ஆர்.மோகனகலா (கொடிகாமம்), 2 ஆம் இடம் - திருமதி பிஞானசவுந்தரி (இளவாலை), 3 ஆம் இடம் - ஆர். கம்சா (கோண்டாவில்).

**பெண் (மு.கீழ்) - 40 வயதுக்கு கீழ்**

1 ஆம் இடம் - திருமதி எம்.இந்திராகாந்தி (மல்லாகம்), 2 ஆம் இடம் - திருமதி எஸ்.ரஞ்சிதமலர் (அரியாலை), 3 ஆம் இடம் - எஸ்.ராஜேஸ்வரி (பொம்மைவெளி).

**தடைதாண்டல் ஓட்டம்**

**ஆண் (மு.மேல்)**

1 ஆம் இடம் - வி.தனுசியன் (தெல்லிப்பழை)- கே.நவநீதன் (கிளிநொச்சி), 2 ஆம் இடம் - ஆர்.புவிராஜ் (மானிப்பாய்) - எஸ். கபின்ராஜ் (வவுனியா).

**ஆண் (மு.கீழ்)**

1 ஆம் இடம் - ஏ.பிரகாஸ் (அளவெட்டி) - எல்.ஜெயக்குமார் - பெரியவிளான்), 2 ஆம் இடம் - கே.ஜெயக்குமார் (விசுவமடு) - கே.பிரதீபன் (பருத்தித்துறை), 3 ஆம் இடம் - ஆர். உதயகுமார் (தெல்லிப்பழை) - ரி.பிரேமசீலன் (மயிலங்காடு).

**பெண் (மு.கீழ்)**

1 ஆம் இடம் - திருமதி எம்.இந்திர காந்தி (மல்லாவி) - ரி.புஸ்பநிதி (கொடிகாமம்), 2 ஆம் இடம் - திருமதி எஸ்.ரஞ்சிதமலர் (அரியாலை) - எஸ்.ராஜேஸ்வரி (பொம்மைவெளி).

**மெதுவான சைக்கிள் ஓட்டம்**

**ஆண்(மு.மேல்)**

1 ஆம் இடம் - எஸ்.கபில்ராஜ் (வவுனியா).

**ஆண்(மு.கீழ்)**

1 ஆம் இடம் - எல். ஜெயக்குமார் (பெரியவிளான்).

**பெண் (மு.மேல்)**

1 ஆம் இடம் - திருமதி பி.ஞானசவுந்தரி (இளவாலை).

**பெண் (மு.கீழ்)**

1 ஆம் இடம் - திருமதி எம்.இந்திராகாந்தி (மல்லாகம்).

**சங்கீதக் கதிரை, ஆண்**

1 ஆம் இடம் - கே.பிரதீபன் (சாவகச்சேரி), 2 ஆம் இடம் - ஞானகிரிதாஸ் (குடத்தனை), 3 ஆம் இடம் - கே. ஜெயக்குமார் (விசுவமடு).

**பெண்**

1 ஆம் இடம் - திருமதி எஸ்.ரஞ்சிதமலர் (அரியாலை), 2 ஆம் இடம் - திருமதி ஜ.துசியந்தி (மானிப்பாய்), 3 ஆம் இடம் - எஸ்.யசிந்தா (எழுவைதீவு)

(எ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## கிழக்குத் தேர்தல் சர்ச்சைகள்

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இம்முறைகளத்தில் குதித்துள்ளதால் பலத்த போட்டி நிலவுகிறது.

முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் சிங்கள பேரினவாதம் தனது கோரப் பற்களை அண்மைக் காலங்களில் காட்டியதால் முஸ்லிம் காங்கிரஸ் இம்முறை தனித்துப் போட்டியிடும் என்ற எதிர்பார்ப்பிருந்தது. ஆனால், அப்படியெல்லாம் இல்லை என்று நிரூபித்த அந்தக் கட்சி அரசுடன் இணைந்தே கிழக்குத் தேர்தலை எதிர்கொள்வதற்கு முடிவெடுத்துள்ளது.

கட்சிக்குள் எழுந்த பலத்த எதிர்ப்புகளையும் சமாளித்து, அரசுடன் இணைந்து போட்டியிடும் முடிவை நோக்கி அதனை வழிப்படுத்தியுள்ளார் அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம். கிழக்கில் சேர்ந்து போட்டியிடுவதாக இருந்தால் தங்கள் கட்சிக்கு முதலமைச்சர் பதவி தரப்பட வேண்டும் என்று நிபந்தனை வைத்திருந்தது முஸ்லிம் காங்கிரஸ். ஆனால் தற்போது எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டில் அதற்கான எந்தவோர் இணக்கமும் காணப்படவில்லை.

தேர்தலில் வெற்றிபெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதலமைச்சர் பதவியைத் தீர்மானிப்பது என்ற இணக்கப்பாடே எட்டப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி இருந்தபோதும் அரசுடன் இணைந்து போட்டியிட முஸ்லிம் காங்கிரஸ் தயாராகி உள்ளது.

இருப்பினும் தமது கட்சியின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளர் ஒருவரை முன்வைத்தே தேர்தல் பரப்புரையில் இறங்கப்போவதாக மு.கா. வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால், முதலமைச்சர் வேட்பாளர் பற்றிய பிரச்சினை மு.காவுடனான பேச்சின்போது ஆராயப்படவே இல்லை என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

அதேபோன்று, தேர்தலுக்கு முன்பாக அரசுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும் என்று மு.கா. தலைவர்கள் கூறிவருகிறார்கள். ஆனால், அப்படி உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்படாது, தேர்தல் தொடர்பான ஆவணங்கள் மட்டுமே பரிமாறிக் கொள்ளப்படும் என்று அமைச்சர் பஸில் கூறியிருக்கிறார்.

இந்த உடன்படிக்கை அல்லது ஆவணம் பற்றியும் சர்ச்சைகளே நீடிக்கின்றன. அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்குத் தமிழ் பேசும் அரச அதிபர்களை நியமிப்பது, முஸ்லிம்களின் காணிகள் பறிக்கப்படுவதைத் தடுப்பது, மத சுதந்திரத்தைப் பாதுகாப்பது, அரச நியமனங்களில் முஸ்லிம்களுக்கு உரிய பங்கை வழங்குவது ஆகிய பிரச்சினைகளில் அரசிடம் இருந்து நியாயமான உத்தரவாதங்களைப் பெறாத நிலையில் அதனுடன் சேர்ந்து போட்டியிடத் தீர்மானித்ததாலேயே கட்சிக்குள் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது என்று கட்சியின் மத்திய குழு உறுப்பினர் அப்துல் மஜீட் தெரிவித்திருக்கிறார்.

அப்படி இருந்தபோதும் மு.கா. அரசுடன் சேர்ந்துவிட்டது. அதற்கான காரணம் ஹக்கீமுக்கும் வேறு சிலருக்கும் மட்டுமே தெரிந்திருக்கக்கூடும். ஆனால் தேர்தல் முடிவு வெளிவரும்போது அரசு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை எந்தளவு தூரத்துக்கு மதித்து நடந்தது; நடக்கும் என்ற முடிவு தெளிவாகத் தெரிந்துவிடும். பேரம் பேசவே முடியாத அளவுக்கு மு.கா. அரசுடன் ஒட்டிக் கொள்ள வேண்டி வந்தது ஏன் என்றும் தெரிந்துவிடும்.

# நல்லிணக்கம் இல்ல வேயில்லை

## சிங்களப் பத்திரிகையின் வாக்குமூலம்

■ தமிழில் - எஸ்.கே.எம்



போர் முடிவுக்கு வந்து மூன்றாண்டுகள் கடந்துள்ளன. மக்களின் நாளாந்த வாழ்வுக்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாய் அமைந்துள்ள பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே போர் முன்னெடுக்கப்படுவதாக அரசு கூறிக் கொண்டது. போர் முடிவுற்றதன் பின்னர் அரசினால் நாட்டு மக்களுக்கும் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அதுவரையில் நாட்டின் பாதுகாப்புக்குச் செலவிடப்பட்ட பெருந்தொகைப் பணம் இனிமேல் நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும், நாட்டின் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படும், சமூக பொருளாதார மேம்பாடு மற்றும் மக்களின் வாழ்வாதாரங்கள் கட்டியெழுப்பப்பட்டு இலங்கையில் புதியதொரு பொற்காலம் உருவாக்கப்படும் என்பவையே அரசின் அந்த வாக்குறுதிகள். போரை அங்கீகரித்து அரசின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கியோர் அரசின் புதியதோர் இலங்கையென்ற அந்த வாக்குறுதிகளில் தீவிர நம்பிக்கை வைத்தனர்.

ஆனால் போர் முடிவுற்ற பின்னர் நாட்டில் தொடர்ந்து இடம்பெற்று வரும் அரசின் போர்க்கால செயற்பாடுகளை ஆழ்ந்து அவதானித்து வந்த தரப்பினர் போரின் பின்னர் இலங்கையில் அத்தகைய புதிய சகாப்தமொன்று உருவாக்கக்கூடுமென்பதில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

பொதுவாக, போரொன்றின் போது' வெற்றி பெறுவது எந்தத் தரப்பாக இருப்பினும், தோல்வியடையும்தரப்பு, வெற்றிபெறும் தரப்பால் பல வகைகளில் புறக்கணிக்கப்படும் என்ற உண்மைக்கு ஒரே நாட்டின் இரு சகோதர இனங்கள் மத்தியிலான அத்தகைய மோதலின் பின்னரான செயற்பாடுகளின் வரலாறுகள் சான்றுபகர்கின்றன. அந்த வகையில் இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் பின்னர் பெரிதும் அவசியமானவைகள் எனக் கருதப்படும் ஆற்றுப்படுத்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இங்கு முன்னெடுக்கப்படவேயில்லை.

அதற்குப் பதிலாக வெற்றித் தரப்பின் கை ஓங்கிப் பலம்பெற்று அதன் தன்னிச்சைப் போக்கு தொடர்வதையே காணமுடிகிறது. போர் வெற்றியின் பின்னர் வெற்றி பெற்ற தரப்பொன்றின் பலம் மற்றும் தன்னிச்சையான செயற்பாடுகள் மென்மேலும் தீவிரம் பெறும் என்ற இயற்கையான நடைமுறைக்கு ஏராளமான வரலாற்று முன்னுதாரணங்கள் உள்ளன.

போர் முனைப்பின் போது போரை விடுத்து பிரச்சினையின் தீர்வுக்கு வேறு மார்க்கமொன்றை நாடுமாறு ஆலோசனை வழங்கியோர் தேசத் துரோகிகளாக முத்திரை குத்தப்பட்டனர் என்பதும் வரலாற்றுப் பதிவுகளே.

சரி! மூன்றாண்டுகளுக்குப் பின்னரான அரசு காலத்துக்கு காலம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு ஏற்ப நாட்டில் இன்று புதியதோர் பொற்காலம் மலர்ந்துள்ளதா? போர் வெற்றியின் பயனாய் அரசால் நிலப்பிரதேசங்களின் நிர்வாகத்தைக் கைப்பற்ற முடிந்துள்ளது. இலங்கை ஒரே தேசம் என்பதையும் உறுதிப்படுத்த முடிந்துள்ளது. ஆனால், மனிதத் தன்மை, சகோதர வாஞ்சையென்பவை அற்றுப் போயுள்ள நோயுற்ற சமுதாய மொன்றே இன்று எம்முன் உள்ளது.

போர் வெற்றியை முன்னிலைப்படுத்தி ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு ஆளாய்ப்பறக்கும் அதீத பேராசையும், ஊழலும், எதையும் அரசியல் மயமாக்கலும், மக்களின் சொத்துக்களை எண்ணம்போல் கவர்ந்து கொள்வதற்கு முனையும் பேரவாவும்,

> “ இறுதிப்போரின் பின்னர் பெரிதும் அவசியமானவைகள் எனக் கருதப்படும் ஆற்றுப்படுத்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இங்கு முன்னெடுக்கப்படவேயில்லை.

பூமியே பொறுக்காத அளவுக்கு அநியாயங்களும், அட்டூழியங்களும், வன்முறையும் இன்று நாட்டில் மிக நன்றாகவே விரவிப் போயுள்ளன.

பௌத்த விழுமியங்களைப் பரப்ப வேண்டிய பொறுப்புள்ள மத நிறுவனங்கள் கூட அஹிம்சாவாதத்துக்குப் பதிலாக வன்முறைக் காவிகளாக மாறியுள்ளன. 'ஒட்டு மொத்த சமுதாயமும் மிகப் பாரதூரமாக அனைத்துக் கோணங்களிலும் நோய்வாய்ப்பட்டுள்ளமையை இன்று தெளிவாகக் காணமுடிகிறது.

ஜீரணித்துக் கொள்ள இயலாத அளவுக்கு இன்று நாட்டில் இடம் பெற்றுவரும் சிறுவர் மற்றும் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களின் அதிகரிப்பு, அவற்றின் கொடூரத் தன்மைகள் நாட்டின் இன்றைய சமுதாயம் எந்த அளவுக்கு நோய் வாய்ப்பட்டுள்ளது என்பதற்குப் போதுமான சாட்சி பகர்பவை.

பெரிதாகச் சிறப்பித்துப் பேசப்படும் நாட்டின் தென்கோடியிலிருந்தே அதற்கு உதாரணங்கள் முன்வைக்கப்படுவதும், தமது பிரதேசத்துச் சிறுமியொருவரால் சுதந்திரமாக நடமாட இயலாத அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளதாக நாட்டின் ஜனாதிபதி கவலை தெரிவிக்கும் அளவுக்கும் நிலைமை விரிவடைந்துள்ளதும் கவலை தரும் விடயங்கள் இளவயது சிறுமியொருத்தி பலவந்தமாக கடத்தப்பட்டு பல தினங்களாக பலரால் பல தடவைகள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட கொடூரம் நிகழ்த்தப்பட்டுள்ளது. இலங்கையின் தென்கோடியைச் சேர்ந்த அரச தரப்பு அரசியல், வாதியொருவரே இந்தக் கொடூர சம்பவத்தின் முக்கிய குற்றவாளியாக இனங்காணப்பட்டுள்ளார்.

ஒரு வெளிநாட்டுத் தம்பதிகள் இலக்கு வைக்கப்பட்டு அந்தப் பெண் வன்புணர்வுக்குப் உட்படுத்தப்பட்டு அவரது கணவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் இளைஞரொருவர் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ள மேலுமொரு சம்பவம் என்பவற்றில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டுள்ளோர் அரச தரப்பு தென்பகுதி அரசியல்வாதிகளே கடந்த மாதத்தில் ஜே.வி.பியினரால் தென்பகுதியில் நடத்தப்பட்ட கூட்டமொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இருவர் உயிரிழந்திருந்தனர். அந்தச் சம்பவத்தில் சந்தேக நபராக இனங்காணப்பட்டுள்ள வரும் அரச தரப்பு அரசியல் அடிவருடியேயாவார்.

இவர்களிடையே எதிரணி அரசியல்வாதிகளும்கூட இருக்கவே செய்கின்றனர். அரசியல் பின்புல மொன்றைக் கொண்டிராத கூட சமுதாயத்தில் கொலைகள், கொள்ளைகள் மற்றும் சிறுமிகள், பெண்களுக்கு எதிரான அநியாயங்களின் தன்மை பெரும் கொடூர முகத்தையே காட்டி நிற்கிறது.

நாட்டின் தலைநகரான கொழும்பில், உதாரணப்படுத்தி சிறப்பித்துப் பேசப்படும் அம்பாந்தோட்டையில் மாத்திரமல்ல வடக்கிலும் சப்ரகமுவாவிலும், வடமத்திய மற்றும் தென்மேற்கிலும் இத்தகைய சம்பவங்கள் திரும்பத் திரும்ப நிகழ்ந்த வண்ணமுள்ளன.

இவையனைத்தும் போரின் நேரடிப் பெறுபேறுகளே எனக் கூறுவதற்கு அவசரம் காட்டுவது தவறு என்றாலும் கூட, அவையனைத்துக்கும் போரின் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கமும் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு வழங்கியுள்ளது என்பது தெளிவானதே.


மனிதப்படுகொலைகளை சொத்தழிப்புக்களை உற்சாகப்படுத்தி வெற்றியின் குறியீடுகளாக அரச அனுசரணையுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நாடொன்றில் போரின் பின்னரான காலகட்டத்தில் இத்தகைய சோகங்களைக் கேட்க நேர்வதென்பது தவிர்க்க இயலாத தொன்றே. எனவே இப்போதாவது போர்வெற்றியென்ற மமதையில் மூழ்கித் திளைப்பதை மக்களை மூழ்கடிப்பதை நிறுத்தி சமுதாயத்தின் திட ஆரோக்கியத்தில் போர் எந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை ஆழமாகச் சிந்தித்து ஏற்பட்ட போர் வடுக்களைக் குணப்படுத்தும் வழியொன்று முன்னெடுக்கப்பட வேண்டியமை காலத்தின் இன்றைய அவசர அவசிய தேவையாகிறது.

நன்றி:-'ராவய'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ சுகந்தன்

# வலுக்கிறது போட்டி





இலங்கை அரசியலில் சூடு பிடித்துள்ள விடயமாக இன்று மாறியுள்ளது மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஆகும்.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளில் அதிகாரத்தில் இருந்த அரசு தனது ஆட்சிகாலம் முடிவடைய இன்றும் ஒரு வருடம் உள்ள நிலை திடீரென மாகாண சபையைக் கலைத்து தேர்தல்களை நடத்துகிறது. தலைகீழாக நின்றேனும் இதில் வெற்றி பெற்றாக வேண்டும் என்ற முழு வீச்சோடு களமிறங்கி உள்ளது.

சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுவிக்கப்பட்டுள்ளார். அதைவிட கடந்த பல வருடங்களாக நியமனம் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்ட பட்டதாரிகள் அனைவரும் அழைக்கப்பட்டு பயிலுநர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களின் தகுதிக்கு ஏற்ற நியமனமா என்ற கேள்விகள் எழுகின்றபோதிலும் பல வருடங்களாக வேலையின்றி அலைந்த பட்டதாரிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகத்தான் அமைந்துள்ளது.

இந்த நிலையில் வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் இலகுவாக வென்றுவிடலாம் என்ற நம்பிக்கையில் அரசு உள்ளது. காரணம் அங்கு பலமான எதிர்க்கட்சிகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் கிழக்கு மாகாண சபையில் அவ்வாறில்லை.

கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாத நிலையில் அரசால் இலகுவாக வெல்ல முடிந்தது.

ஆனால் தற்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு களத்தில் குதித்துள்ளது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் ஆதரவளிப்பர் என்பது நிச்சயம்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய தேர்தல் மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களும் அதிகளவில் செறிந்து வாழ்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் காணிகள் அரசால் சுவீகரிக்கப்படுகின்றமை, அவர்களின் மதம்சார் விடயங்களில் அநீதி இழைக்கப்படுகின்றமை மற்றும் அண்மையில் நடந்த தம்புள்ள பள்ளிவாசல் மீதான பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவின் தாக்குதல்கள் போன்ற செயற்பாடுகளால் கொதித்துப்போயுள்ள முஸ்லிம் சமூகம் அரசுக்கு முறையான பாடம் புகட்டவேண்டுமென்றே கங்கணம் கட்டியுள்ளது.

இந்த நிலையில் அரசில் இணைந்து அமைச்சர் பதவியில் இருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணைந்து இந்தத் தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவு செய்தாலும் முஸ்லிம்கள் பலர் ஆத்திரத்துடனேயே இருக்கிறார்கள். தேர்தல் வெற்றியைக் கொண்டு தமிழர்களிடத்தில் பிரச்சினை இல்லை என சர்வதேசத்திடம் அரசு செய்யும் பிரசாரத்தை தவிடுபொடியாக்குதல் மற்றும் வடக்கு, கிழக்கு இணைப்பு ஆகிய இரண்டையுமே பிரதான நோக்காகக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுகிறது. இந்தக் கோஷங்கள் மு.காவின் முடிவால் கோபமுற்றிருக்கும் முஸ்லிம்களின் வாக்குகளை கூட்டமைப்பின் பக்கம் திருப்பப் போதுமா என்பது இன்னும் தெளிவில்லை.

அண்மையில் திருகோணமலையில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய சம்பந்தன் அரசைத் தோற்கடிப்பதே தமது நோக்கம் எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதற்காக முஸ்லிகள் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படவே விரும்புவார்கள்.

கடந்த தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடாதமையினால் இந்தத் தேர்தலில் அதன் தாக்கம் எவ்வாறு இருக்கும் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாவிட்டாலும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கடந்த காலத்தில் நிலவிய மக்கள் ஆதரவைக் கொண்டு பார்க்கையில் அந்த நிலைமை இப்போதும் சிதறிப் போய் இருக்க முடியாது என்றுதான் கூறவேண்டும்.

கிழக்கு மாகாண சபைக்கு 37 உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்காக மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த பத்து லட்சத்து 34 ஆயிரத்து 249 பேர் 2011 ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதில் அம்பாறை மாவட்டத்திலேயே அதிகளவு வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

போட்டியிடும் கட்சிகள் தமது வேட்புமனுத் தாக்கலில் மும்முரமாக இறங்கியுள்ளன. மேலும் ஐக்கிய தேசியக்கட்சி, ஜனதா விமுக்தி பெரமுன மற்றும் ஐந்து சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தேர்தலில் போட்டியிடுவோருக்கான வேட்புமனுத்தாக்கல் பூர்த்தி அடைவதற்கு முன்பாகவே தேர்தல் சட்டமீறல்கள் இடம்பெற ஆரம்பித்துவிட்டதாக தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டன.

தேர்தல்களைக் கண்காணிப்பதற்கு வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை நியமிக்க வேண்டுமென ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலை நகரிலும் அதை அண்மித்த பல பகுதிகளிலும் தற்போதே தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு வேட்புமனுத்தாக்கல் முடிவடைவதற்கு முன்னர் தேர்தல் பிரசாரத்துக்கு ஒத்தவகையிலான நடவடிக்கைகள் ஆரம்பமாகி உள்ளன. இது தேர்தல் சட்டமீறல் சம்பவங்கள் என்று கண்காணிப்பு அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் வேட்பாளர்கள் சிலர் தமது ஆதரவாளர்களுடன் முரணான வகையில் பிரசாரங்களைச் செய்து கொண்டு வாகனங்களில் பயணிப்பதாக 'கபே' அமைப்புக் குற்றம் சாட்டியுள்ளது.

திருகோணமலை நகரில் மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சுற்றி 'கட்-அவுட்', கந்தளாய் நகரில் பல இடங்களில் பெரிய 'கட்-அவுட்'கள் நிறுவப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த வேகங்களைப் பார்க்கும் போது தேர்தல் பலத்த போட்டியைச் சந்திக்கும் என்பது தெரிகிறது.

■ கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம்

# பிதுர் கருமம் செய்வதற்குச் சிறந்த ஆடி அமாவாசை

சைவ மக்கள் விரதம் அனுட்டித் தலைச் சமய ஒழுக்கமாகக் கொள்பவர்கள். விரதங்கள் தெய்வங்களை நோக்கியும் பிதுர்களின் பொருட்டும் மேற்கொள்ளப்படுகின்றன. மாதா, பிதா ஆகியோர் தெய்வங்களுக்கு ஒப்பானவர். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது ஔவையார் வாக்கு. அன்னையையும் தந்தையையும் கண்கண்ட தெய்வங்களாக ஏற்றிப் போற்றுபவர்கள் சைவர்கள். பெற்றோர் காலமான பின்னரும்கூட அவர்களை மறவாது அவர்களின் ஆத்ம சாந்திக்காக விரதம் அனுட்டிப்பது; சிரார்த்தம், மஹாளயம் என்பவற்றைச் செய்வது; பிதுர் வழிபாடு செய்வது என்பனவற்றை நடைமுறை வாழ்க்கையில் மேற்கொள்வது சைவமக்களின் இன்றியமையாத கடமையாகிவிட்டது. இவற்றை ஒழுங்காக நிறைவேற்றாவிடில், பிதுர் சாபத்திற்கு உள்ளாக வேண்டிவரும் என்ற ஐதீகமும் உண்டு.

எவற்றைச் செய்யத் தவறினாலும் தாய் தந்தையர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை, அவர்கள் உயிருடன் இருக்குங் காலத்திலும் சரி, உயிர் நீத்த பின்னரும் சரி, செய்யத் தவறவே கூடாது. தாய் தந்தையர் எமக்குச் செய்த நன்றிகளை மறத்தல் பெரும் பாவகாரியம் என்று சைவம் கூறுகிறது. அதற்குக் கழுவாயே கிடையாது.

அமாவாசை, பௌர்ணமி ஆகிய விரதங்கள் முறையே காலமான தந்தை, தாய் ஆகியோர் நற்கதியடையும் பொருட்டு அவர்களின் பிள்ளைகளால் அனுட்டிக்கப்படும் விரதங்களாகும். தந்தை, தாய் ஆகியோர் உயிரோடு வாழுங் காலத்தில் அமாவாசை, பௌர்ணமி விரதங்களைப் பிள்ளைகள் மேற்கொள்ளல் ஆகாது.

அமாவாசை ஒவ்வொரு மாதமும் வருகின்றது. சூரிய சந்திரர்கள் ஒரு இராசியில் சஞ்சரிக்கும் புனித நாள் அமாவாசையாகும். சூரியனும் சந்திரனும் ஒரே பாதையில் பூமிக்கு நேராக வரும் பொழுது ஏற்படுவது அமாவாசைத் திதி.அன்றைய தினம் பூமியில் உள்ளவர்களுக்குச் சந்திரன் தென்படாது. இரவு இருட்டாக இருக்கும். அமாவாசை ஒரு கனத்த நாள். அத்தினம் சுபகருமங்கள் செய்வதற்கு ஆகாது. அதே வேளை பிதுர் வழிபாட்டுக்கும் தெய்வமாகி விட்ட தந்தையின் பொருட்டு விரதம் அனுட்டிப்பதற்கும், பிண்டதானம், தர்ப்பணம் செய்வதற்கும் ஏற்ற நாள் ஆக உள்ளது.

பிதுர்களைத் தென்புலத்தார் என்று அழைப்பது தமிழர் மரபு.

*'தென் புலத்தார் தெய்வர் விருந்தொக்கல் தான் என்றாங்கு*
*ஐம்புலத்தாறு ஓம்பல் தலை'* என்கிறது திருக்குறள்.

இதிலிருந்து தென்புலத்தாரைப் பேணுதல், வழிபடுதல் என்பன சைவத் தமிழ் மக்களின் கடமை என்பது தெரியவருகிறது. அமாவாசையில் இவற்றை நிறைவேற்ற வேண்டும். அமாவாசைகளுள் ஆடிமாதத்தில் வருகின்ற அமாவாசை தென்புலத்தார் வழிபாட்டுக்கு மிகச் சிறந்தது.

தட்சணாயனத் தொடக்க மாதம் ஆடி என்பதால், ஆடி அமாவாசை பிதுர் கருமங்கள் செய்வதற்குச் சிறப்பானது எனக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆடி அமாவாசை விரதம் அனுட்டிப்பவர்கள் ஆசார சீலர்களாக இத்தினத்தில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடித் தூய்மையராய் பிதுர் தர்ப்பணம், பிண்ட தானம் செய்தும்; இறை வழிபாடு, பிதுர் வழிபாடு செய்தும், அந்தணர்களுக்குத் தானமும், விருந்தினர், சுற்றத்தவர், ஏழைகள், ஆதாரவற்றவர்கள், நலிந்தோர் என்போருக்கு அன்னம், வஸ்திரம் அளித்தும் இயன்ற தான தருமஞ் செய்தும் விரதம் அனுட்டிப்பர். அமாவாசையில் அன்று முழுநாளும் உபவாசம் இருப்பர். அவ்வாறு இருக்க இயலாதவர் ஒரு பொழுது உணவு உண்பர்.

தந்தை இறந்த திதியில் ஆண்டு தோறும் சிரார்த்தம் செய்ய வேண்டும். சிரார்த்தத்தை திவசம் என்றும் அழைப்பர். குறித்த திதியைத் தவறவிட்டவர்கள் அல்லது அத்திதியில் திவசம் செய்யாதவர்கள் ஆடி அமாவாசையில் அன்று சிரார்த்தத்தை நிறைவேற்றிக் கொள்வர்.

ஆடி அமாவாசையில் கடல், நதி, வாவி போன்ற நீர் நிலைகளில் தீர்த்தமாடினால் பழ வினைகள் மாறிவிடும் என நூல்கள் கூறும். அயோத்தியா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவரகா என்னும் தலங்களைத் தீர்த்தமாடித் தரிசித்து வழிபாடு செய்தல் மிக உத்தமமானது. இத்தலங்களில் எள்ளும் தண்ணீரும் இறைத்து சிரார்த்தம் செய்வதால் இறந்த தந்தை தாயர் நற்கதியடைவர். சிரத்தையோடு செய்வதால் சிரார்த்தம் எனப்படுகிறது. தென்னிந்தியாவில் இராமேஸ்வரம். கன்னியாகுமாரி ஆகிய இடங்களில் தீர்த்தமாடுதல், பிண்டதானம், சிரார்த்தம் என்பனவற்றை நிறைவேற்றுதல் சிறப்பானதாகும்.

இலங்கையில் வடக்கிலுள்ள கீரிமலை நகுலேஸ்வரம், கிழக்கில் மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரம் என்னும் தலங்கள் ஆடி அமாவாசைத் தீர்த்தச் சிறப்புப் பெற்ற தலங்களாகும். இங்கு ஆண்டு தோறும் ஆடி அமாவாசையன்று தீர்த்தமாடுதல், பிதுர்வழிபாடு செய்தல், சிரார்த்தம், பிண்டதானம், தருப்பணம் என்பன சைவர்களால் நிறைவேற்றப்படுகின்றன.

நாம் சுகமாக வாழவும் சகல செல்வங்களுடன் இனிதாக வாழவும் தெய்வ வழிபாட்டுடன் பிதுர் வழிபாடும் இன்றியமையாததாகும். ஆடி அமாவாசைத் தினத்தில் இவ் வழிபாடுகளைச் செய்து இன்புற்று வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ஜுனனுக்குத் தேர் செலுத்தியவன்

"பார்த்தசாரதி" என்றால் என்ன அர்த்தம்?

பார்த்தனுக்கு சாரதி. அதாவது, 'அர்ஜுனனுக்குத்தேர் செலுத்தியவன்' என்ற பொருளில் 'பார்த்தசாரதி'என்றசொல் வழங்குகிறது.

அது கண்ணனைக் குறிக்கிறது-இது நமக்குத் தெரியும்.

இந்தக் கண்ணன் அர்ஜுனனுக்கு இரண்டாவது பார்த்தசாரதிதான்.

அப்படியென்றால், "முதல் பார்த்த சாரதி" என்று ஒருவர் உண்டா?

உண்டு!

கண்ணனுக்கு முன்னாலேயே அர்ஜுனனுக்கு தேர் செலுத்திய ஒருவர் உண்டு.

அவன் பெயர் உத்தரகுமாரன்.

அவன் விராடதேசத்தின் இளவரசன்.

அப்போது பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்தார்கள்.

'பாண்டவர்கள்விராட தேசத்தில்தான் இருப்பார்கள்!'என்று துரியோதனன் ஊகிக்கிறான்.

அவர்களை வெளிப்படுத்துவதற்காக அவன் சில முயற்சிகளைச் செய்கிறான்.

தன்னுடைய சேனைகளையெல்லாம் துரியோதனன் அழைத்துக் கொண்டு போய்,விராட நாட்டிலுள்ள பசுக்களையெல்லாம் ஓட்டிக் கொண்டு போகிறான்.

அந்த நேரத்தில் விராடன் வேறு ஒரு திசையில் போர்செய்வதற்குச் சென்றிருந்தான்.

அவனுடைய மகன் உத்தரகுமாரன்- பயந்தாங்கொள்ளி!

அவன் கத்தியைப் பார்த்தாலே மிகவும் பயப்படுவான்.அவன் எங்கே,எப்படி சண்டை போடுவான்?

இருந்தாலும் அவனுக்கு இப்போது வேறு வழியில்லை.

அப்பா ஒரு பக்கம் போயிருக்கிறார்.இவன் இன்னொரு போர் முனைக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இருந்தான்.

இந்தச் சமயத்தில் அங்கிருந்த அர்ஜுனன் உத்தர குமாரனுக்கு உதவி செய்ய வருகிறான்.

எப்படி?

அதாவது பேடி உருவத்தில் இருக்கும் அர்ஜுனன், உத்தரகுமாரனுக்கு சாரதியாக அமைகிறான்.

போர்முனைக்குப் போய்ச் சேர்ந்ததும் உத்தரகுமாரன் தேர் செலுத்துகிறான். அர்ஜுனன் கௌரவ சேனைகளை விரட்டியடிக்கிறான். அதனால் கௌரவர்கள் அனைவரும் புறமுதுகிட்டு ஓடிப்போகிறார்கள்.

அதன் பிறகு ஊருக்குத் திரும்பும் போது... அர்ஜுனன் மறுபடியும் பேடி உருவம் எடுத்துக்கொண்டு தேரைச் செலுத்திக் கொண்டுவருகிறான். அப்போது உத்தரகுமாரன் தேரில் உட்கார்ந்திருக்கிறான்.

பார்கிறவர்கள்அனைவரும், உத்தரகுமாரன் தான் கௌரவர்களை முறியடித்துவிட்டு வருகிறான்! என்று நினைத்து அவனைப் பாராட்டுகிறார்கள்.

அர்ஜுனனும்,"நான் சண்டை போட்ட விடயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம். இந்த ரகசியம் நமக்குள் இருக்கட்டும்" என்று உத்தரகுமாரனிடம் கூறிவிடுகிறான்.

கத்தியைக் கண்டாலே பயந்து நடுங்கும் உத்தரகுமாரனுக்கு "போரில் வெற்றி பெற்றான்!" என்ற பேரும் புகழும் எப்படி வந்தது?

"அதுதான் அந்த ஸ்தானத்தின் மகிமை" என்று ஓர் ஆன்மீகப் பேச்சாளர் கூறினார்.

'ஸ்தானத்தின் மகிமை - அதாவது இடத்தின் மகிமை!' இங்கு எப்படி என்று கேட்டால்...

உத்தரகுமாரன் சிறிது நேரம் உட்கார்ந்து தேர் செலுத்தினானே, அந்த இடத்தின் மகிமைதான் அவனுக்குப் பெருமையைச் சேர்த்துக் கொடுத்தது.

அது 'சீட்டு' க்கு உள்ள பெருமை.

பிற்காலத்தில், ஸ்ரீகிருஷ்ணன் உட்கார்ந்து பெருமைப்படுத்த போகும் 'சீட்' இல்லையா அது? அந்தச் சாரதி ஸ்தானத்தில் உத்தரகுமாரன் முன்பே அமர்ந்தான். அதனால் அவனுக்கு அத்தனை பெருமை கிடைத்தது.

ஒரு நாற்காலிக்கு மதிப்பு அதில் உட்காருகிறவர்களைப் பொறுத்துத்தான் ஏற்படுகிறது. "இதோ இருக்கிறதே... இது இன்னார் அமர்ந்த நாற்காலி!" என்று இப்போதும் நாம் சொல்லிக்கொள்கிறோம் அல்லவா?




நாம் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தால்... அந்த நாற்காலி ஏற்கனவே வாங்கி வைத்திருக்கும் பெருமையைக் காப்பாற்றும் அளவுக்கு அதில் நாம் உட்கார வேண்டும்!

அதுதான் நமக்கும் நல்லது... நாற்காலிக்கும் நல்லது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# 2 ஆயிரம் வருடம் பழமை வாய்ந்த பொலிகண்டி கந்தவனம்



கர்ணன்

இலங்கையிலுள்ள முருகக் கடவுளின் ஆறுபடை வீடுகளில் இந்தக் கோயிலும் ஒன்றானது. இது மிகவும் புராதனமான ஓர் ஆலயமாகும். இலங்கையில் சண்முகன் சிலா விக்கிரகமாக மூலஸ்தானத்தில் அமைந்துள்ளது இங்கு மட்டுமே. இந்தக் கோயில் சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

இந்தக் கோயில் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியில் பருத்தித்துறையிலிருந்து தொண்டைமானாறு செல்லும் வழியில் பொலிகண்டி என்னும் சிற்றூரில் கடற்கரையோரமாக எழிலுடன் அமைந்துள்ளது. இந்தக் கோயில் ஸ்கந்தாரண்யம், கந்தவனக்கடவை முருகவனம், கந்தசுவாமிகானகம், வெள்ளரிக்கொல்லை அம்பலவாண முருகேசசுவாமி கோயில், பொலிகண்டி கந்தசுவாமி கோயில் எனப்பல பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது.

இந்தக் கோயிலின் தோற்றம் பற்றி கந்தபுராணத்தின் ஒரு பகுதியாகிய தட்சிணகைலாய மான்மியமும், ஈழத்தின் பழமை கூறும் ஈழமண்டல சதகமும் பின்வருமாறு குறிப்பிடுகின்றன. அதாவது முருகப் பெருமான் திருச்செந்தூரில் சூரனை அழித்து, வள்ளி, தெய்வயானை ஆகியோரை மணமுடித்த வேளையில் கதிர்காமம் செல்லும் நோக்கில் வேதாரண்யம் சென்று அங்கிருந்து மரக்கலத்தில் தேவியர்கள் இருவருடனும் வீரபாகு தேவருட்பட நவவீரர்கள், கின்னரர், கிம்புருடர், சம்தரிஷிகள், இந்திரன், பிரம்மா, விஸ்ணு உட்பட்ட முப்பத்து முக்கோடி தேவர்கள் ஆகியோர்களுடன் கடற்பிரயாணம் செய்து இலங்கையின் கரையை அடைந்து காங்கேசன் துறையில் இறங்கி கோயில் கொண்டனர் பின்னர் மீண்டும் கடல் வழியாக வந்து பொலிகண்டி எனும் ஊரில் வன்னி மரங்கள் நிறைந்த வன்னி வனத்தில் இறங்கி அங்கு கோயில் கொண்டெழுந்தருள விரும்பி விசுவகன்மாவினால் ஒரு கோயிலைக் கட்டுவித்து அங்கே முருகப்பெருமான் தேவியர்களுடன் அழகிய மயிலில் எழுந்தருளி இருக்கையில், முருகப் பெருமான் கடற்பயணம் செய்த தோஷம் நீங்கும் பொருட்டு பிரம்மா, விஸ்ணு, இந்திரன் முதலியோர் மகாபிஷேகம் செய்து வழிபட அவர்களுக்கு நல்லருள்பாலித்த தலமாகையால் அன்றிலிருந்து அந்த வன்னி வனம் 'கந்தவனம்' எனும் சிறப்புப் பெயர் பெற்றதாகவும், பின்பு இங்கிருந்து கந்தக் கடவுள் கடல்வழியாகப் பயணம் மேற்கொண்டு திருகோணமலை சென்று அங்கிருந்து 'உகந்தை' சென்று இறுதியாக கதிர்காமம் சென்றதாகக் கூறுகின்றன.

> கச்சியப்பர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கந்தபுராணத்தை அரங்கேற்றியபோது அவற்றின் பிரதிச் சுவடிகள் இங்கும் கொண்டு வந்து பாடிய தாகவும் கூறப்படுகின்றது. இந்தக் கோயில் அருணகிரிநாதர் 'உறவு சிங்கிகள்' எனும் திருப்புகழைப் பாடியுள்ளார். அதில் "கந்தசுவாமி கானகம்" எனும் தல முத்திரையையும் குறிப்பிட்டுள்ளார்.

கச்சியப்பர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கந்தபுராணத்தை அரங்கேற்றிய போது அவற்றின் பிரதிச் சுவடிகள் இங்கும் கொண்டு வந்து பாடியதாகவும் கூறப்படுகின்றது. இந்தக் கோவில் அருணகிரிநாதர் "உறவு சிங்கிகள்' எனும் திருப்புகழைப் பாடியுள்ளார். அதில் "கந்தசுவாமி கானகம்" எனும் தல முத்திரையையும் குறிப்பிட்டுள்ளார்.

இங்குள்ள மூர்த்தங்கள் (விக்கிரகங்கள்) அனைத்தும் சிறப்புப் பெற்றவை. இங்கே மூன்று சண்முகர் உண்டு. ஒன்று "பழையவர்" என அழைக்கப்படும். பழையமூலவர். இரண்டாவது தற்போதுள்ள மூலவர் மூன்றாவது ஆறுமுக நயினார் என அழைக்கப்படும் எழுந்தருளி சண்முகர். இவற்றில் பழையவர் எனும் பழைய சண்முகர் விக்கிரகம் சோழகாலத்துக்குரியது. இந்த விக்கிரகம் சோழப்பேரரசு காலத்தில் தென்னிந்தியாவில் வாழ்ந்த சிற்பமுனிவரால் வடிக்கப்பட்டது. இந்தச் சிற்ப முனிவர் முத்தரச சோழ மன்னனால் கை வெட்டப்பட்டிருந்த வேளையில் தமது கைக்குழைச்சுக்குள் உளி வைத்து செதுக்கியமையினால் இந்த சண்முகரை "கைக்குழைச்சுக்கல்யாணவேலவர்" என்று அழைக்கின்றனர். இந்தச் சிற்பியினால் செய்த ஏனைய மூன்று விக்கிரகங்கள் தென்னிந்தியாவில் உள்ள சிக்கல், எட்டிக்குடி, எண்கண் ஆகிய தலங்களில் உள்ளன.

மேற்குறிப்பிட்ட சண்முகர் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள குமாரபுரம் எனும் குகதலத்தில் பிரதிட்டை செய்யப்பட்டார். பின்னர் இந்தக் கோயிலைப் போர்த்துக்கீசர் இடித்த போது இந்த விக்கிரகம் கடல் மார்க்கமாக கந்தவனம் கொண்டுவரப்பட்டு பிரதிட்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டது. இந்தச் சண்முகர் மூலவராய் இருந்த போது கோயில் மிகவும் சிறப்படைந்தது. இந்த வேளையில் உடுப்பிட்டியைச் சேர்ந்த சிவசம்புப்புலவர் (இவரிற்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரே "புலவர்" எனும் பட்டம் வழங்கினார்.)

தமது இரு கண் பார்வையையும் இழந்த வேளையில் கந்தவனம் வந்து இங்குள்ள நறுநீர்க்கேணியில் நீராடி இந்தப் பழைய சண்முகரை வழிபட்டு நான்மணிமாலை பாட இவருக்கு கண்பார்வை கிடைக்கப் பெற்றது.

சுமார் நூறு வருடங்களுக்கு முன் இந்த மூர்த்திக்கு அபிடேகம் நடைபெறும் போது அபிடேகக்குடம் தவறி வீழ்ந்து சுவாமியின் இடது புற வரத கரத்தை ஊறடையச் செய்தது. அதனால் இதே அமைப்புடைய இன்னோர் சண்முக விக்கிரகம் கும்பகோணத்திலிருந்து கொண்டுவரப்பட்டு மூலவராக வைத்து வழிபடப்படுகிறது.

மூன்றாவதாகக் கூறப்பட்ட ஆறுமுகநயினார் இலங்கைக்குக் கிடைத்த ஓர் அரிய பொக்கிசமாகும். ஏனெனில் இந்த விக்கிரகம் போல் மிகுந்த அழகுடையதும் மிகவும் பெரியதுமான சண்முகர் வேறெங்கிலுமில்லை. (இந்தியாவில் கூட) இது சைவப் பெரியார் திக்கம் சி.செல்லையாபிள்ளையின் ஒரு நேர்த்தியின் பொருட்டு 1928 ஆம் ஆண்டு கோயிலில் வைத்தே வார்ப்பிக்கப்பட்டது. இதன் போது இந்த ஊர் மக்கள் அநேகர் ஏராளமான பொன்னை இந்த விக்கிரகம் வார்க்கத் தயாரான ஐம்பொற் கலவையில் சேர்த்தனர். சிலர் தாமணிந்திருந்த திருமாங்கல்யத்தைக் கூட இதில் சேர்த்தனர். இதனைக் கண்டு திருமுருக கிருபாணந்த வாரியாரே வியந்துள்ளார். இதற்கு அடுத்த பெரிய திருவுருவமே இந்தியாவின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியிலுள்ளதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய சுதந்திர முன்னணி பஞ்சாயுத சின்னத்தில் போட்டி

மட்டக்களப்பு, ஜூலை18

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி பஞ்சாயுத சின்னத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியாக தேர்தலில் போட்டியிட எண்ணியிருந்தது. எனினும், அந்த முன்னணியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகரவுக்கு, ஆளும் கட்சியின் கீழ் போட்டியிட இடம் கிடைக்காமை காரணமாக அவர்கள் தனித்துப் போட்டியிட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் நேற்று முன்தினம் மாலை விசேட கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. கிழக்கு மாகாண சபைக்காக தேசிய சுதந்திர முன்னணியினால் அம்பாறை மாவட்டத்துக்காக பரிந்துரைக்கப்பட்ட வேட்பாளருக்கு ஆளும் கட்சியில் போட்டியிட வாய்ப்புக்கிடைத்துள்ளது. எனினும், திருகோணமலையில் தாம் எதிர்பார்த்த இடம் கிடைக்காத நிலையில் அம்பாறை வேட்பாளரும், தேசிய சுதந்திர முன்னணியின் கீழேயே போட்டியிடவுள்ளார். (ச)

## கிணற்று நீரை அருந்திய 6 பேர் வைத்தியசாலையில்

ஹசலக - மஹயாய - உல்பத்தகம பகுதியில் ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும் திடீர் சுகயீனம் காரணமாக ஹசலக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

தமது வீட்டுக்குப் பின்புறம் உள்ள கிணறு ஒன்றில் இருந்து பெற்ற நீரைப் பருகிய பின்னரே இவர்கள் சுகயீனமடைந்துள்ளனர்.

குறித்த அறுவரும் வாந்தி, வயிற்றுவலி ஏற்பட்டு தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர். இவர்கள் பருகிய நீரில் ஏதாவது விஷம் கலந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. நீரின் மாதிரி எடுக்கப்பட்டு தற்போது பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (ச)

# தமிழர்கள் மீதான திணிப்பே கிழக்கு மாகாணத் தேர்தல்

## முதன்மை வேட்பாளர் குற்றச்சாட்டு

திருகோணமலை, ஜூலை18


கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நாம் விரும்பி ஏற்கவில்லை. அது எம்மீது திணிக்கப்பட்டது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கீழ் திருகோணமலைக்காகப் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் சிங்காரவேல் தண்டாயுதபாணி குற்றஞ் சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கும் சந்திப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் இல்லத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேசத்தில் தமிழர் பிரச்சினை உச்ச நிலையில் உள்ளது. இதனை முறியடிக்க அரசு தேர்தல் ஒன்றை நடத்தி அதில் கிழக்கு மாகாண மக்கள் தம்வசம் இருக்கின்றார்கள் என்பதைப் பறைசாற்றி அரசியல் அழுத்தத்தில் இருந்து விடுபட முயற்சிக்கின்றது.

தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் அதிக அக்கறை கொள்ள வேண்டும். அரச பிரதிநிதிகள் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு நாம் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடாது.



அரச பிரதிநிதிகள் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு நாம் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடாது.

கடந்த கால தேர்தல்களை ஒப்பிடும்போது தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவடைந்து செல்கிறது. 1970 ஆம் ஆண்டுகளில் 92 சதவீதமாக இருந்த வாக்களிப்புத் தொகை தற்போது 60 வீதமாகக் குறைந்துள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் இந்தத் தொகை மீண்டும் அதிகரிக்கப்பட வேண்டும்.- என்றார். (ச)



வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொத்தியாபுலை பள்ளியடிக் கிராமத்தில் நடைபெற்ற திருமண விருந்துபசார வைபவத்தின்போது வழங்கப்பட்ட உணவு விஷமடைந்ததனால் பாதிப்புக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் உள்ளிட்ட பலர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சென்று பார்வையிட்டனர்.

## ஆஸி. செல்ல முயன்றோருக்கு விளக்கமறியல்

திருகோணமலைஜூலை18

ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச்செல்ல முயன்ற 8 சிங்களவர்கள் உட்பட 109 பேர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை வாழைச்சேனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருமலையிலிருந்து 25 கடல் மைல் தொலைவில் கல்குடா கடற்பகுதியில் கடற்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களுடன் அவர்கள் பயணிக்கவிருந்த றோலர் படகும் நேற்றுமுன்தினம் திருகோணமலை துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டவர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு - வாழைச்சேனைக்கு கடற்படையினரின் இரண்டு பஸ் வண்டிகளில் கொண்டுவரப்பட்டு நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

நீதிவான் இவர்களை எதிர்வரும் 30 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து இவர்கள் அனைவரும் மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு கொண்டுவரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ச)

## மின்சாரம் தாக்கி சிறுவன் சாவு

நுவரெலியா, ஜூலை18

நுவரெலியா, உடப்புஸ்ஸலாவ பகுதியில் மின்சாரம் தாக்கி 17 வயதுச் சிறுவன் ஒருவன் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை உயிரிழந்துள்ளான்.

குரங்குகளை கலைப்பதற்காக வீட்டில் அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் அகப்பட்டு குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடப்புஸ்ஸலாவ பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுவருகின்றனர். (ச)

## ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கக்கோரி ஆர்ப்பாட்டம்



திருகோணமலைஜூலை18

திருகோணமலை வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த றொட்டவெவ முஸ்லிம் வித்தியாலத்தில் ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட வசதியின்மை போன்ற குறைபாடுகளைத் தீர்த்துவைக்குமாறு கோரி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாடசாலைக்கு முன்னால் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாடசாலைக்கு 17 ஆசிரியர்கள் தேவைப்படும் இடத்தில் 9 ஆசிரியர்கள் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர்.

மாணவர்கள் கட்டட வசதிகள் இல்லாமையால் பெரும் சிரமத்தின் மத்தியில் கற்றலில் ஈடுபடுகின்றனர் என்று பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் வலயக் கல்வி அதிகாரிக்கும், கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் பல தடவைகள் தெரியப்படுத்தியும் பாடசாலை புறக்கணிக்கப்பட்டு வருவதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் விமலசேன மத்துமாராய்ச்சி பாடசாலைக்கு வருகை தந்து பெற்றோர்களுடன் விசேட கூட்டமொன்றை நடத்தி பாடசாலைக்கு ஐந்து லட்சம் ரூபா தற்காலிகமாக வழங்குவதாகவும், கிழக்கு மாகாணத் தேர்தல் முடிவடைந்த பின்னர் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருவதாகவும் உறுதியளித்தார். குறித்த உறுதிமொழியை அடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ச)

## கிழக்கு அரச ஊழியர்கள் தேர்தலில் யாருக்கு ஆதரவு?

### 21இல் கூடி முடிவு

அம்பாறை,ஜூலை 18

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்கென அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபை எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை கூடவுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவரும் தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் தலைமையில் குறித்த தேர்தல் பற்றி ஆராய்வதற்கான முகாமைத்துவசபையின் விசேட கூட்டம் நடைபெறவுள்ளது.

கல்முனை சனச திறந்த வெளி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இந்த விசேட கூட்டத்தில், கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள நிலவரங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்படும் என்று லோகநாதன் தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சி, வட கிழக்கு மாகாண ஜீவோதய நலன்புரி நிறுவனம் என்பவற்றை இணை நிறுவனங்களாகக் கொண்ட அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முழு ஆதரவு அளித்திருந்தது. (ச-30)

## மரை இறைச்சியுடன் 3 பேர் கைது

முன்னேரியா,ஜூலை18

மின்னேரியா - பட்டுஓய பகுதியில் 75 கிலோ கிராம் மரை இறைச்சியுடன் மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பட்டுஓயா ரயில் நிலையத்துக்கு அண்மையில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.15 மணிக்கு ஓட்டோ ஒன்றை சோதனை செய்தபோது மின்னேரிய பொலிஸாரால் இந்த மரை இறைச்சி மீட்கப்பட்டுள்ளது.

ஓட்டோவில் இருந்து பிரிட்டன் நாட்டில் தயாரிக்கப்பட்ட கைதுப்பாக்கி ஒன்றும் ஐந்து ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் [illegible] நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தருவது வித்தியா**

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** தவறான கணிப்புகளால் எதிர்மறையான பலன் ஏற்படும். சிலரிடம் உதவி கேட்பதற்கு தயக்கம் நிலவும். குடும்பத்தில் சச்சரவுகள் ஏற்பட்டு விலகும். நம்பிய ஒருவர் உங்களை ஏமாற்றலாம். மற்றவர்கள் காரியங்களுக்காக அலைய நேரிடலாம்.

**இடபம்:** சிந்தித்துச் செயற்படுவீர்கள். ஒரு காரியத்தைச் செய்ய பலரிடமும் யோசனை கேட்பீர்கள். செய்தொழிலில் அபிவிருத்தி காணப்படும். உறவினர்கள் உங்கள் சிக்கலைத் தீர்க்க உதவிக் கரம் நீட்ட முன்வருவர். உடல் உபாதை குறையும்.

**மிதுனம்:** சிக்கலான காரியங்களைக்கூட வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். பிறரால் பாராட்டப் படுவீர்கள். பெற்றோரால் உதவிகள் கிடைக்கப்பெறும். புதிய வேலை முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.

**கடகம்:** விருப்பு, வெறுப்புக்களைத் தவிர்த்து பணிவாகச் செயற்பாடு நல்லது. பண வரவு மூலம் எண்ணங்கள் நிறைவேறும். அலைச்சல் அதிகரிக்கும். செய்தொழிலில் சில சீர்திருத்தங்களை மேற்கொள்வீர்கள். வழக்கு விவகாரங்களில் எச்சரிக்கை தேவை.

**சிங்கம்:** அவசரப்பட்ட செயற்பாடுகளால் ஆதாயங்களைவிட இன்று விரயங்களே அதிகரிக்கும். சுய தேவைகள், ஆடம்பர விருப்பங்களை நிறைவேற்ற முற்படுவீர்கள். அலுவலகப் பணிகளில் தேவையற்ற தொந்தரவுகளைச் சந்திக்க நேரிடும்.

**கன்னி:** சில காரியங்களில் தொடர்ந்த முயற்சியால் வெற்றி காண்பீர்கள். விட்டுப்போன உறவுகளை மீண்டும் புதுப்பிக்க முற்படுவீர்கள். பணியில் உயர்வு காண தகுதிகளை உயர்த்திக் கொள்ள ஆயத்தமாவீர்கள்.

**நாளை**

ஆடி 04 வியாழக்கிழமை 19.07.2012
திதி: அமாவாசை மு.ப 10.18 வரை
நட்சத்திரம்: புநர்பூசம் மு.ப 11.42 வரை
சுபநேரம்: 07.31- 09.01 வரை
ராகு காலம்:01.31- 03.01 வரை

**துலாம்:** மனதில் பட்டதை உடனடியாக வெளிப்படுத்தி சிலரின் பாராட்டுதலுக்கும், அதிருப்திக்கும் ஆளாவீர்கள். எதிர்பாராத பண வரவுகளும் உண்டு. உறவினர்கள் வழியிலும் உதவிகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பெருந்தன்மையான போக்கு நிலவும். உதவும் மனப்பான்மையும் கூடும். நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். பயணங்களில் எச்சரிக்கை அவசியம். அலுவலகப் பணிகளில் கவனம் இருக்கட்டும்.

**தனுசு:** சில விவகாரங்களில் தான் எடுத்த முடிவே சரியென செயற்படுவீர்கள். அது தவறானதாக இருப்பதற்கும் வாய்ப்புண்டு கவனம். புதிய நபர்களின் சந்திப்பில் எச்சரிக்கை தேவை. நண்பர்களிடம் குற்றம் காணும் போக்கைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**மகரம்:** மனத்திருப்திக்காக சில பணிகளை மேற்கொள்வீர்கள். நீண்ட நாள் எண்ணம் பூர்த்தியாகும். அறிமுகமற்ற நபர் ஒருவரின் உதவி மிகுந்த பயன்தரும். பணி ரீதியாக முக்கியமான செய்தி உங்களை வந்தடையும்.

**கும்பம்:** கவலைகள் மறையும். கலகலப்பு அதிகரிக்கும். மற்றவர்கள் பாராட்டும் வகையில் அறிவுத் திறனுடன் செயற்படுவீர்கள். கொடுக்கல், வாங்கலில் சீரான நிலைமை காணப்படும். இல்லறத்துணையின் வகையில் ஆதாயங்கள் கிடைக்கும்.

**மீனம்:** சிலரின் விமர்சனங்களுக்கு ஆளான போதும், வெளிப்படுத்திக்கொள்ளாமல் காரியங்களில் கண்ணாக இருப்பீர்கள். தொழிலில் வருமானத்தை பெருக்க முற்படுவீர்கள். ஆரோக்கியம் மேம்படும். பயணங்களால் பலன் காணலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | | | 4 | 7 |
| | 9 | | 4 | 1 | 2 | | | 3 |
| 6 | | | 5 | | | 1 | | 9 |
| | 8 | | | | 7 | | | 1 |
| 7 | | 3 | | | | 4 | | 8 |
| 5 | | | 8 | | | | 6 | |
| 4 | | 6 | | | 1 | | | 5 |
| 9 | | | 2 | 5 | 6 | | 1 | |
| 3 | 5 | | | | 8 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 2 | 8 | 5 | 3 | 7 | 6 | 1 |
| 7 | 6 | 8 | 2 | 1 | 9 | 5 | 3 | 4 |
| 5 | 3 | 1 | 7 | 4 | 6 | 9 | 8 | 2 |
| 8 | 5 | 9 | 4 | 3 | 2 | 6 | 1 | 7 |
| 4 | 7 | 6 | 9 | 8 | 1 | 2 | 5 | 3 |
| 2 | 1 | 3 | 6 | 7 | 5 | 8 | 4 | 9 |
| 6 | 9 | 5 | 1 | 2 | 4 | 3 | 7 | 8 |
| 3 | 8 | 4 | 5 | 9 | 7 | 1 | 2 | 6 |
| 1 | 2 | 7 | 3 | 6 | 8 | 4 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# இரண்டாவது பிறந்ததின வாழ்த்துக்கள்



**உதயகுமார் - சுதா** தம்பதியரின்
செல்வப் புதல்வி **ராகவி** தனது இரண்டாவது
பிறந்த
தினத்தை இன்று
(18.07.2012) லண்டனில் உள்ள தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
செல்வி ராகவி பல்கலைகளும் பெற்று நலமுடன் நீடூழி
வாழ்வதற்கு எல்லாம் வல்ல வண்ணார்பண்ணை
வட- கிழக்கு ஸ்ரீ வீரகத்தி விநாயகருடைய அருள்
வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்கள்:-**

அம்மப்பா - ரி.மகாதேவன்
அம்மம்மா - ம.இராஜராஜேஸ்வரி
சின்னமாமா - ம.ரவிஷங்கர்
சின்னமாமி - ம.இந்திராணி
பெரியப்பா - சோ.முரளீதரன்
பெரியம்மா - மு.மாலினி
மணியத்தான் - பொ.நாகரத்தினம்
} நாயன்மார்கட்டு.

பெரியமாமா - Dr.எம்.நிரஞ்சன்
பெரியமாமி - நி.கமலாசனி
மச்சான் - நி.சஞ்சயன்
} திருகோணமலை


## மானிப்பாயில் தனிமையில் செல்லும் பெண்களிடம் சங்கிலி அபகரிக்கும் திருடர்கள்

மானிப்பாய் பொலிஸ் பகுதயில் மோட்டார் சைக்கிளில் சென்று தனிமையில் செல்லும் பெண் களின் சங்கிலிகளை அறுத்துச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த வாரத்தில் மட்டும் இத்தகைய சம்பவங்கள் மூன்று இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தனிமையில் செல்லும் பெண்கள் பின்னால் மோட்டார் சைக்கிளில் தொடரும் திருடர்கள் மிகவும் நுட்பமாக இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டு தப்பி ஒடி விடுகின்றனர்.

தனிமையில்செல்லும் பெண்கள் மிகவும் அவதானத்துடன் செல்ல வேண் டியது அவசியமாகும்.

பொது மக்கள் நடமாட்டம் குறைந்த வீதிகளிலும் மதிய வேளைகளிலும் இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் இடம் பெறுகின்ற பொதிலும் இத்தகைய திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்படுவார்கள் எனவும் பொலிஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். (வ-86)


# மரண அறிவித்தல்

## பூதப்பிள்ளை சின்னத்துரை

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை சின்னத்துரை (16.07.2012) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான வைத்தி - நாகமுத்து தம்பதியரின் மருமகனும், அம்மணியின் அன்புக் கணவரும், துசிதரன் (கனடா), ஜெசிந்தா (ஜேர்மனி), சதீஸ்கரன் (மாவட்ட நீதிபதி, திருகோணமலை), ஜெர்மிளா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முரளிதரன் (ஜேர்மனி), மனோராணி (கனடா), சிறீதரன் (லண்டன்), மிஷாந்தி ஆகியோரின் மாமனும், சாரூபன், சதுர்சன், சாருகா, ருதுனையா, ஸ்வரமியா, ஜெனுஸ், ஹரிசன், ஹரிஸ்ணா, சுஜனிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ரதீஸ்கரன் (மகன்),
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்

(20567)(6-7-8)

# தேவை

★ மிசின் மைன்டர்
(இயந்திர இயக்குநர்)
★ கணினி இயக்குநர் தேவை.
தொடர்பு : 077 8249007

(சி/1534)(6-7-8)

# இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது.சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்
நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம்

(18767)(6-7-8)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ★ DS Max Marketing International Company

**பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.**

1. Distributor 2. Supervisor 3. ASS. Manager

★ தகைமை : க.பொ.த. சாதாரண தரம் O/L

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் வயது எல்லை 18 - 40 வரை

★ 6 மாத கால பயிற்சி. பயிற்சியின் போது 8,000 - 12, 000 வரை பெறலாம்.

பயிற்சி நிறைவடையும் போது 35,000 - 45, 000 வரை பெற முடியும்.

குறிப்பு : தங்குமிட வசதி இலவசம் புனர்வாழ்வு முகாம்களில் இருந்து வந்தோருக்கு முன்னுரிமை

(20582)(8-14)

**தொடர்புகளிற்கு : 077 6057421, 077 5574795**


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை சிறிகரன்



கோப்பாய் தெற்கு, இருபாலையைப் (V.H லேன்), பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிறிகரன் கடந்த (15.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிறிரஞ்சன் (லண்டன்), நிரஞ்சனி ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகநாதன் (இலங்கை), இராஜலக்சுமி (லண்டன்), கனகலிங்கம் (லண்டன்), பகவதி (லண்டன்), விமலாதேவி (ஜேர்மனி), சிவநாதன் (நோர்வே), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் வேலணை அம்பலவி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
பஸ் கொம்பனியடி, 6ஆம் வட்டாரம்.

தகவல்:
குடும்பத்தினர்

(20579) (45.6.7)


**மருந்தாளர் (Pharmacist)தேவை**

கோண்டாவில் சந்தியில் ஆரம்பிக்கப் படவிருக்கும் மருந்தகம் ஒன்றை பதிவுசெய்வதற்குரிய மருந்தாளர் **(Pharmacist)** உடனடியாகத் தேவைப்படுகிறார். ஓய்வு பெற்ற மருந்தாளரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:- 0772897869

(20584) (15-14)

## கடைத்தொகுதி வாடகைக்கு

கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் சகல வசதிகளுடனும் பாதுகாப்புடனும் நிறுவப்பட்ட இரண்டு மாடி கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு. களஞ்சியமாகவும் பாவிக்க முடியும்.

தொடர்பு : மயூரன்
**077 3296035**

(20580)(6-7-8)

## காணிவிற்பனைக்கு

கொக்குவில் பொற்பதி வீதி, உடையார் லேனில் (100m) தொலைவில் உள்ள காணி (பரப்பு -5) விற்பனைக்கு உண்டு. பகுதிகளாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 3161 822, 077 0463 841

(20573) (45.6.7)

## வெளிவந்துவிட்டது

எதிர்வரும் வாரங்களில் நடைபெறவுள்ள இலங்கை கணக்காய்வு சேவையின் கணக்காய்வு அத்தியட்சகர்களைத் தேர்வு செய்வதற்கான வரையறுத்த திறந்த போட்டிப்பரீட்சை மற்றும் இலங்கை கணக்காளர் சேவையின் வரையறுத்த / திறந்த போட்டிப்பரீட்சைக்கு தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கானதுமான கணக்காய்வும் நுண்ணாய்வும் எனும் பாடத்துக்கான நூல்.

**கணக்காய்வும் உறுதிப்பாடும்**
**Audit and Assurance**

நூலாசிரியர் : **ஞானானந்தராஜா தேவஞானன்**
உதவிக்கணக்காய்வாளர் நாயகம்

இந்நூல் கணக்காய்வின் சமகால கோட்பாடுகள், நுட்பங்கள், நியமங்கள் புதிய சட்ட ஏற்பாடுகள் உட்பட 300 இற்கு மேற்பட்ட கடந்த கால பரீட்சை வினாக்களையும் மாதிரி விடைகளையும் உள்ளடக்கியுள்ளது.

AAT, HNDA பட்டயக்கணக்கறிஞர் பரீட்சை சான்றிதழ்களிற்கும் பயன்படும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. எல்லா மாவட்டங்களிலுமுள்ள கணக்காய்வு திணைக்கள உப அலுவலகம்

தொடர்புகளுக்கு : 021 222 5949,
077 6039230, 077 3534452

(20572)(6-7-8)


## சட்டமா அதிபரிடமும் பொலிஸ் பொறுப்பதிகாரியிடமும் விளக்கம் கோருகிறது யாழ். மேல் நீதிமன்று

யாழ்ப்பாணம், ஜூலை 18

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்புக்கு எதிராக யாழ். பஸ் நிலையம் முன்பாக நடத்தவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு இடைக்காலத் தடை விதித்த யாழ். நீதிமன்றின் தீர்ப்பை மீளாய்வு செய்து ரத்துச் செய்யுமாறு கோரிய வழக்குத் தொடர்பில் சட்டமா அதிபரிடமும் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரியிடமும் விளக்கம் கேட்டு அறிவித்தல் அனுப்ப யாழ். மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

யாழ். மேல் நீதிமன்றில் கடந்த 10 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செ.கஜேந்திரன் சார்பில் சட்டத்தரணிகளான கு.குருபரன், கே.சுகாஸ், வி.மணிவண்ணன் ஆகியோர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பான ஏற்பாட்டாளர்களின் நியாயங்களை சட்டத்தரணிகள் மன்றில் எடுத்துக்கூறியிருந்தனர். வழக்கில் பிரதிவாதிகளாக சட்டமா அதிபர் மற்றும் யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா ஆகியோர் குறிப்பிடப்பட்டனர்.

அதனைப் பரிசீலித்த நீதிபதி சம்பந்தப்பட்ட இருவருக்கும் அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டு இந்த வழக்கை எதிர்வரும் 3ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

கடந்த 8ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டம் நடத்தவிருந்த வேளை யாழ். பொலிஸார், யாழ். நீதிவான் நீதிமன்றினூடாக ஆர்ப்பாட்டத்தை நிறுத்துவதற்கான இடைக்காலத் தடை உத்தரவு பெற்று ஆர்ப்பாட்டத்தை நிறுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (10-4)

## சிவநகரில் 2ஆம் கட்ட மீள்குடியமர்வு

முல்லைத்தீவு, ஜூலை 18

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள சிவநகர் கிராமசேவையாளர் பிரிவில் இரண்டாம் கட்டமாக எதிர் வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை மக்கள் மீளக்குடியேற்றப் படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் அறிவித்துள்ளார்.

எனவே குறித்த பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்கள் மீளக்குடியேறுவதற்கான சகல ஆயத்தங்களுடனும் குறித்த தினத்தன்று முற்பகல் 9மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். அத்துடன் தாங்கள் இதுவரைகாலமும் வசித்த பிரதேசத்தின் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு மேலும் அப்பகுதி உதவி அரச அதிபரிணால்கையொப்பமிடப்பட்ட விடுவிப்புக் கடிதத்தையும் பெற்று வந்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

சிவநகர் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களில் மனிக்பாம் முகாமில் தங்கியிருந்த ஒரு தொகுதி மக்கள் கடந்த 14ஆம் திகதி மீளக்குடியேற்றம் செய்யப்பட்டிருந்தனர். முகாம் தவிர்ந்த உறவினர், நண்பர்களினது வீடுகளில் வதியும் குடும்பங்களே இரண்டாம் கட்டமாக மீளக்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர். (த-16)





■ எக்ஸோஸ்டெக் (ExhausTEC) உடன் 125cc DTS-i எஞ்ஜின் ■ 5-வேக கியர் வழிமுறை ■ தன்னியக்க சோக்குடன் (Auto Choke) மின் ஆற்றல் செயற்பாடு ■ கண்கவர் ஒப்பற்ற பலவர்ண ஸ்டிக்கர்கள் ■ கறுப்பு நிற வடிவமைப்பு ■ கவர்ச்சிகரமான மீற்றர் அமைப்பு

Discover 125
உங்களுக்கு வெற்றி நிச்சயம்!

விசேட கொடுப்பனவு! அனைத்து Discover மோட்டார் சைக்கிள்களுடனும் ஹெல்மட் மற்றும் ஜக்கட் இலவசம்!! 2012 ஜூலை 1 முதல் 31 வரை வழங்கப்படும்

ஈடிணையற்ற உத்தரவாதம்
2 வருடங்கள் அல்லது 30,000கி.மீ ஓட்டம்*
*எது முதலில் நிகழ்கிறதோ அது

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
த.பெ இல. 1909, 75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02.
மின்னஞ்சல்: info@dpmco.com இணையதளம்: www.dpmco.com
தொலைபேசி: 011-4700600 தொலைநகல்: 011-4700677

(சி/1344)(8-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

**The Only Official French Language Centre in Jaffna**

*Learn French the French Way*

French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.

வகுப்புக்கள்: சனி, ஞாயிறுகளில்.

புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

61, Kachcheri - Nallur Road, Jaffna Phone: 021 2228093

E-mail: alliance jaffna@yahoo. com

(கண்டி வீதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டடம்)

மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

(20492) (45-6-7)

உதயன்

advt@uthayan.com

0215671111

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயது, மூலம், 6' 2'' உயரம், 12 இல் செவ்வாய், பாவம் 29, UK யில் Work Permit இல் உள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

தொடர்பு : விளம்பர இல. 4377

மே/பா. உதயன்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(20346)(6-7-8)

## தவறிவிட்டது

திருநெல்வேலிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் டயலொக் டொங்கிள் ஒன்று தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 7760680 என்ற இலக்கத் துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(20583)(14-8)

## COMPUTERS FOR SALE

**Tel : 021-222 4459, 0772533390**

Intel DH61WW Mother Board, Intel 2.6GHz 2nd Generation Dual Core Processor, 500GB HDD, 4GB DDR-III Ram, Samsung DVD Writer, ATX Casing, 19" Samsung LED Monitor, Keyboard, Laser Mouse & Gel Pad, Woofer, Webcam, H.Phone இவை அனைத்தும் Rs.53,850/= மட்டுமே (3வருட உத்தரவாதம்)

### COMPUTER ACCESSORIES FOR SALES

Huawei Multy Dongle : 7.2mbps From, 3550, 21.1 mbps 5250, Webcam from: 750, Kingston Pendrive: 4GB-900, 8GB-1150, Casing-2550, DVD Writer 2850, ATX Power Supply-1350, Kaspersky In Security: 1550, Optical Mouse: 350, Keyboard-550, Woofer-1200, LCD Monitor from: 5400, Laptop Charger-1900.

(உங்கள் சகல விதமான கணினிகளையும் ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்)

**North Lead Computer Sales & Services**

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

## இந்திய சாஸ்திரியார் வருகை

*யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்*

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித்தடையா, குழந்தை பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா ? வெளிநாடு செல்லத்தடையா ?, மன உளைச்சலா ? எந்தப்பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை)

பீப்பில்ஸ் இன் (PEOPLE INN)

இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)

T.P: 072 6816681, 0726816691

(20214) (6,7,8)

## வேலையாள்கள் தேவை

நீர்கொழும்பிலுள்ள பிரபலமான Book Center இக்கு அனுபவமுள்ள, அனுபவமற்ற 18 - 35 வயதுக்குட்பட்ட SALE S Boy's/Girls தேவை.

ஆண்களுக்கு மட்டும் தங்குமிடமுண்டு திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 7444163, 077 3866809

(20445) (6-7-8)

## தேவை

பிரபல்யம் வாய்ந்த ஐஸ்கிறீம் கடைக்கு அனுபவம் மிக்க இரண்டு ரீ மேக்கர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிதர்சன் கிறீம் கவுஸ்

பஸ் நிலையம், பருத்தித்துறை.

தொடர்பு: 077 6214 224

(F/1529) (45,6,7)

## வேலை வாய்ப்புகள்

PAN GLOBAL RECRUITMENTS

| தொழில் | எண்ணிக்கை |
|---|---|
| 01. ஹைட்ரோ இயந்திரவியல் வடிவமைப்பு பொறியியலாளர் | 05 |
| 02. ஹைட்ரோ - இயந்திரவியல் மேற்பார்வையாளர் (வாகனம்) | 05 |
| 03. ஹியர் பொக்ஸ் திருத்துபவர் (டீசல் அன் ஹட்ரோலிக்) | 10 |
| 04. ஹட் ரோலிக் மெக்கானிக் | 15 |
| 05. Auto A/c தொழில்நுட்பவியலாளர் | 10 |
| 06. இன்டஸ்ரியல் A/c தொழில்நுட்பவியலாளர் | 05 |
| 07. இயந்திரம் பழுதுபார்க்கும் மெக்கானிக் (டீசல்) &ஹட்றோலிக் | 20 |
| 08. ரிங்கர் & ரெண்டர் வேலை | 10 |
| 09. Auto ஸ்பிறே பெயின்டர் | 10 |
| 10. ரயர் பழுது பார்க்கும் தொழில் நுட்பவியலாளர் | 05 |

குறிப்பு : இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம்

QR 1 = SL: 35.00

**நேர்முகத்தேர்வு யாழ்ப்பாணத்தில்!**

*திகதி : 21.07.2012 (சனிக்கிழமை)*

*நேரம்: காலை 9.00 முதல் மாலை 5.00 வரை*

* இடம் : ஹோட்டல் லவுசியா
  இல. 584, ஹொஸ்பிற்றல் வீதி,
  (வேம்படிச்சந்தி அருகில், யாழ்ப்பாணம்)
* தங்குமிட, மருத்துவ, போக்குவரத்து வசதிகள் இலவசம் !
* கடவுச்சீட்டு, புகைப்படங்கள் 2 (கடவுச்சீட்டு அளவு) மற்றும் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

(20576)(6-7-8)

PAN GLOBAL L.L. No: 1980

பான் குளோபல்

றிக்குறூட்மன்ற் (பிரை) லிமிட்

ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை

கொழும்பு - 03

தொ.பே : 011 5300100/ 077 3012020/ 072 6700917

AL0000/00/00


# சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

# கேள்வி அறிவித்தல் 2012

## சாவகச்சேரி பிரதேசசபையால் கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

1) நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் இக்ராட் C8 பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி, கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2) கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ''செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

3) ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியாக உறையிலிடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு கேள்விகள் சமர்பிக்கப்படல் வேண்டும்.

4) கேள்விகள் பரிசீலிக்கப்படும் போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

5) கேள்விப்படிவம் வழங்கப்படும் ஆரம்பத் திகதி:- 18.07.2012 காலை 10 மணி முதல் (அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

*கேள்விப்படிவம் வழங்கப்படும் இறுதித்திகதி :- 02.08.2012 பி.ப 2 மணி வரை*

*கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி:- 03.08.2012 பி.ப 12 மணிவரை*

*கேள்விகள் திறக்கப்படும் திகதி:- அன்றைய தினம் (03.08.2012) பி.ப 2 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.*

6) மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் (கொடிகாமம்) அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப்படிவப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத VAT + NBT 12% + 2% ரூபா |
|---|---|---|---|---|
| 01 | மிருசுவில் பொதுநூலக காணிக்கு முட்கம்பி வேலி அமைத்தல் | 1800.00 | 750.00 | 105.00 |
| 02 | புதிய தலைமை அலுவலக வாகனத்தரிப்பிடம் அமைத்தல் | 6600.00 | 750.00 | 105.00 |
| 03 | தலைமை அலுவலக கட்டட, மலசலகூட திருத்தமும் தீந்தை பூசுதலும் | 1500.00 | 750.00 | 105.00 |
| 04 | பிளாஸ்ரிக், கண்ணாடிசேகரிப்பு நிலையம் அமைத்தல் | 3100.00 | 750.00 | 105.00 |
| 05 | கொடிகாமம் சந்தை மலசலகூடத் திருத்தம் | 1000.00 | 750.00 | 105.00 |
| 06 | எழுதுமட்டுவாழ் சந்தைக் காணிக்கு வேலி அமைத்தல் | 3700.00 | 750.00 | 105.00 |
| 07 | புதிய தலைமை அலுவலக மலசலகூடம் அமைத்தல் | 1700.00 | 750.00 | 105.00 |
| 08 | எழுதுமட்டுவாழ் சந்தை, பஸ் தரிப்பிடம் அமைத்தல் (இரண்டு) | 2000.00 | 750.00 | 105.00 |

தலைவர்

திரு.சிற்றம்பலம் துரைராஜா

சாவகச்சேரி பிரதேசசபை,

கொடிகாமம்

16.07.2012

(சி/1543) (15)

## என்றும் இதயம் கனிந்த நன்றிகள்

2012 ஆம்ஆண்டு யூலை மாதம் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் திகதிகளில் கொண்டாடப்பட்ட யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலய நூற்றாண்டு விழா நிகழ்வுகளுக்கு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்த விருந்தினர்களுக்கும் நிதியுதவிகளை வழங்கிய உள்நாட்டு, வெளிநாட்டு அன்பர்களுக்கும் கலைநிகழ்ச்சிகளை வழங்கியோர்களுக்கும், மண்டப அலங்காரங்கள், பந்தல் சேவைகள், வெளிஅலங்காரங்கள் முதலியவற்றை மேற்கொண்டோருக்கும் சரீர உதவிகளை வழங்கியவர்களுக்கும் மற்றும் விழா சிறப்புற பரிபூரணமான ஒத்துழைப்புக்களை வழங்கியவர்களுக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரியப்படுத்துகின்றோம்.

நன்றி

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயச் சமூகத்தினர்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை

(20587)(6-7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதியை அரசு நிறைவேற்றவில்லை

**ஐ.தே.கட்சி குற்றச்சாட்டு**

கொழும்பு,ஜூலை18

ஐ.நா. மனித உரிமை சபையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றத் தவறியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

17 ஆம் திருத்தச் சட்ட மூலத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக அரசு வாக்குறுதி அளித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், இதுவரையில் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

17 ஆம் திருத்தச் சட்டமூலத்தை மேலும் வலுப்படுத்துவதாக அப்போதைய மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் உறுதியளித்திருந்தார் என்றுதெரிவிக்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் கால மீளாய்வு அமர்வுகளின் போதும் இவ்வாறான வாக்குறுதி அளிக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. (ச)

# புத்தளத்தில் திடீர் தீ

கொழும்பு,ஜூலை18

புத்தளம், பாலாவி, கொப்பேகடுவ விகாரைக்குப் பின்புறமாகவுள்ள காட்டில் நேற்றுமுன்தினம் மாலையில் திடீரென தீ பரவியுள்ளது.

இந்தத் தீயால் 40 தென்னம்பிள்ளைகளும் தென்னை மரங்களும் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீயை பொலிஸார் பிரதேச மக்களின் உதவியுடன் அணைத்துள்ளனர்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



புதிய சட்ட மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ள சரத் பாலித பெர்னாண்டோவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவத்தில் நியமனப் பத்திரத்தை வழங்கினார். மத்தியில் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க.

## கிழக்கு மாகாணத் தேர்தல்;

# புரிந்துணர்வு உடன்படிக்கை இல்லை; மு.காவுடன் ஆவணப் பரிமாற்றம் மட்டுமே

**முதலமைச்சர் வேட்பாளர் குறித்து இதுவரை பேசவில்லை என்கிறார் பஸில்**

கொழும்பு, ஜூலை18

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படமாட்டாது; மாறாக ஆவணப் பரிமாற்றமே இடம் பெறும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.



> அரசும் முஸ்லிம் காங்கிரஸும் சில வருடங்களாகவே ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளமை மற்றும் அந்தத் தீர்மானத்தால் எழுந்துள்ள தாக்கங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் முன்வந்தமை மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சி. அரசும் முஸ்லிம் காங்கிரஸும் சில வருடங்களாகவே ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றன.

அரசும் முஸ்லிம் காங்கிரஸும் தொடர்ந்தும் இணைந்தே செயற்படும் என்று எதிர்பார்க்கின்றது. அந்த வகையிலேயே கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இரண்டு கட்சிகளும் இணைந்து போட்டியிட தீர்மானித்தன.

தேர்தல் இல்லாத காலங்களில் அரசுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்திருக்கும் என்றும் தேர்தல் காலங்களில் பிரிந்தே போட்டியிடும் என்றும் கருதி வந்த சிலருக்கு முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானம் சிறந்த பாடத்தை புகட்டியிருக்கும். அவ்வாறு எதிர்பார்த்திருந்தவர்களின் எதிர்பார்ப்புகள் சிதறியிருக்கும். ஆளும் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் சிறந்த புரிந்துணர்வுடனும் ஒற்றுமையாகவும் செயற்பாடுகளை முன்னெடுத்து'வருகின்றன. எனவே தேர்தலிலும் ஒன்றாகப் போட்டியிடுகின்றோம்.

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸுடன் எந்த விடயமும் பேசப்படவில்லை. வேறு சில விடயங்கள் குறித்தே பேசப்பட்டது. ஆளும் கட்சிக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளமை தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்படமாட்டாது. அவ்வாறு புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆனால் கிழக்குத் தேர்தலில் போட்டியிடுகின்றமை தொடர்பில் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்படும் வகையில் ஆவணப் பரிமாற்றம் செய்யப்படும்- என்றார். (ச)

# கல்வி அமைச்சின் முன் 25 இல் ஆர்ப்பாட்டம்

**ஆசிரியர்கள்-அதிபர்கள் அறிவிப்பு**

கொழும்பு, ஜூலை18

நாடளாவிய ரீதியில் கல்வித்துறையில் இடம் பெற்றுவருகின்ற பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு வழங்கவேண்டும் என்று அரசை வலியுறுத்தி எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இசுறுபாயவிலுள்ள கல்வி அமைச்சின் முன்பாக ஆசிரியர்கள் - அதிபர் தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

ஆசிரியர்-அதிபர் தொழிற்சங்கத்தினால் கல்வி அமைச்சிடம் முன்வைக்கப்பட்ட யோசனைத் திட்டத்திற்கு இதுவரை எதுவித பிரதிபலிப்புகளும் கிடைக்காத காரணத்தாலேயே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர்கள்தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாம் முன்வைத்த 13 யோசனைகள் அடங்கிய யோசனைத் திட்டத்துக்கு கல்வி அமைச்சிடமிருந்து இதுவரையில் எதுவித பதில்களும் கிடைக்கவில்லை.

அதனால் கல்வித்துறையில் இடம்பெற்று வருகின்ற பிரச்சினைகள் மற்றும் அதிபர் - ஆசிரியர்களுக்கான சம்பளப் பிரச்சினை ஆகியவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கில் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு இலங்கை ஆசிரியர் சங்கம், ஒன்றிணைந்த அகில இலங்கை ஆசிரியர் சங்கம், சுயாதீன கல்விச் சேவையாளர் சங்கம், பொது ஆசிரியர்கள் தொழிற்சங்கம், இலங்கை ஆசிரியர் மதிப்பீட்டுச் சங்கம், இலங்கை தேசிய அதிபர் சங்கம், முதலாம் தர அதிபர் சங்கம், அகில இலங்கை அதிபர் சங்கம் முதலான ஆசிரியர்கள் அதிபர் தொழிற் சங்கத்தினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# முன்னாள் போராளிகளுக்கு சிங்கள மொழிப் பயிற்சி

கொழும்பு, ஜூலை18

சமூக ஒருமைப்பாட்டு மற்றும் தேசிய மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு சிங்கள மொழி கற்பிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் முன்னாள் போராளிகளுக்கே இவ்வாறு சிங்கள மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

598 முன்னாள் விடுதலைப் புலி போராளிகளுக்குத் தற்போது புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகவும், 11000 இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் சில முன்னாள் போராளிகளுக்கு ஏற்கனவே சிங்கள மொழிப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் முதல் முன்னாள் போரா ளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக அரசு 2.5 பில்லியன் ரூபா பணத்தைச் செலவிட்டுள்ளது. (ச)

# சிறை அதிகாரிகளுக்கும் வீர விபூஷண விருதா?

**சீறிப் பாய்கிறது பாதுகாப்பு அமைச்சு**

கொழும்பு, ஜூலை18

சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வீர விபூஷண விருது வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

சிறைச்சாலைகள் தினத்தை முன்னிட்டு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு வீர விபூஷண பதக்கங்கள் வழங்கிக் கௌரவிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் சிறைச்சாலை திணைக்கள உயர் அதிகாரிகளின் திட்டத்துக்கு அமைய இந்த விருது வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எந்தவொரு போராட்டத்திலும் ஈடுபடாது சீருடை அணிந்து கைதிகளை பராமரித்து வரும் உத்தியோகத்தர்களுக்கு அதி உயர் வீர விபூஷண விருது வழங்கப்படக்கூடாது என்று பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு பதக்கம் வழங்குவதனால் அர்ப்பணிப்புக்களைச் செய்த படையினரை இழிவுபடுத்தும் வகையில் அமையும் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பதக்கம் வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட சில உத்தியோகத்தர்கள் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச)

# விஜய விதானகே ஐ.தே.கவில் இணைவு

கொழும்பு, ஜூலை18

எம்பிலிபிட்டி பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் விஜய விதானகே ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளார். அவருக்கான கட்சி உறுப்புரிமையை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தேசிய சேவை சங்கத் தலைமையகத்தில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை கையளித்தார்.

இவர் இந்த முறை ஐக்கிய தேசியக் கட்சியின் யானை சின்னத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளார். எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கலை நேற்று நிறைவு செய்துள்ளதாக ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தமுறை மாகாண சபைத் தேர்தலில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் போட்டியிடுவதாக அவர் தெரிவித்தார். (ச)

# அசாத் சாலி இராஜினாமா

கொழும்பு,ஜூலை18

கொழும்பு மாநகர சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் உறுப்பினர் அசாத் சாலி நேற்று தனது பதவியிலிருந்து விலகியுள்ளார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அவர் தமிழ் கட்சி ஒன்றுடன் இணைந்து போட்டியிட எதிர்ப்பார்த்துள்ளதாலேயே இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அவர் கூறினார். தற்போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்து வரும் செயற்பாடுகள் முறையற்ற வகையில் இருப்பதாக அவர் குற்றம் சுமத்தினார். கிழக்கு மாகாணத்தில் தமது மக்களின் சார்பில் தேர்தலில் களமிறங்கிச் செயற்படவுள்ளார் என அவர் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜீகன் மீண்டும் அதிரடிச் சதம் யாழ். இந்து அடுத்த சுற்றுக்குள்

இந்த ஆட்டத்தில் சதமடித்து அசத்திய சஜீகன் முதல் சுற்றில் 4 ஆட்டங்களில் விளையாடி 2 சதங்கள், ஒரு அரைச்சதம் அடங்கலாக 388 ஓட்டங்களைக் குவித்துள்ளார்



சதமடித்து சாதித்த யாழ். இந்துவின் சஜீகன்

யாழ்ப்பாணம்,ஜூலை 18

யாழ்.இந்துக் கல்லூரி அணி சஜீகன், மதுசன் ஆகியோரது அதிரடி ஆட்டத்தின் மூலம் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியை 294 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றியைப் பெற்றுக்கொண்டதுடன் அடுத்த சுற்றுக்குள்ளும் நுழைந்தது.

பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கிளிநொச்சி மத்திய கல்லூரியை எதிர்த்தாடியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. அதிரடி வேட்டை ஒருபுறம் நடத்தப்பட்டாலும் மறுபுறம் தொடர்ச்சியாக இலக்குகள் சரிந்ததன் காரணமாக 50 பந்து பரிமாற்றங்கள் வரையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியால் நிலைத்துநிற்க முடியவில்லை.

அந்த அணி 40 பந்துப் பரிமாற்றங்களிலேயே சகல இலக்குகளையும் இழந்து 390 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் யாழ்.இந்து சார்பில் சஜீகன் 88 பந்துகளில் 22 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 136 ஓட்டங்களையும், மதுசன் 19 பந்துகளில் 10 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் அடங்கலாக 52 ஓட்டங்களையும், சிவஜனன் 46,றுக்ஸ்மன் 43 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கிளிநொச்சி மத்திய கல்லூரி சார்பில் ஜெனித்தன் 4 இலக்குகளையும், கபிலன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

391 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத்தொடங்கிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி வேகமாக ஓட்டங்களைக் குவிக்க முனைந்த போதும், யாழ்.இந்துக் கல்லூரியின் பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 17 பந்து பரிமாற்றங்களில் 96 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரி சார்பில் ஜெனுசன் 31, ஜெனித்தன் 23 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் மதுசன் 3 இலக்குகளையும், குகானந் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனால் 294 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கிளிநொச்சி மத்திய கல்லூரியை தோற்கடித்த யாழ். இந்துக் கல்லூரி, அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றது.

இதேவேளை இந்த ஆட்டத்தில் சதமடித்து அசத்திய சஜீகன் முதல் சுற்றில் 4 ஆட்டங்களில் விளையாடி 2 சதங்கள், ஒரு அரைச்சதம் அடங்கலாக 388 ஓட்டங்களைக் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-5)

## நாமகள் வி.க.வின் உதைபந்துத் தொடர் அடுத்த வாரம்



வலி.வடக்கு ,ஜூலை 18

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அடுத்தவாரம் முதல் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் என்பவற்றின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இந்தச் சுற்றுப்போட்டியில் 34 கழக அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

விலகல் முறையில் இடம் பெறவுள்ள குறித்த சுற்றுப் போட்டியில் பல முன்னணிக் கழகங்கள் கலந்து கொள்ளவுள்ளதால் உதைபந்தாட்ட ரசிகர்களால் விருந்தளிக்கும் வண்ணம் அனைத்து ஆட்டங்களும் பரபரப்பானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.(ங-86)

## போராடித் தோற்றது யூனியன் கல்லூரி

வலி.வடக்கு, ஜூலை 18

இறுதிவரை போராடிய தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் முயற்சி தோல்வியில் முடிந்ததால், இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கம் தேசிய மட்டத்தில் நடத்திய வலைப்பந்தாட்ட அணிகளுக்குஇடையேயானவலைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கைப் பாடசாலைகள் வலைப்பந்தாட்டத் தெரிவு அணி தேசிய மட்டச் சம்பியனாகியது.

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கம் 21 வயதுப் பிரிவுப் பெண்களுக்கிடையே நடத்திய வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நாவலப்பிட்டி நகர சபை மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் இலங்கைப் பாடசாலைகள் தெரிவு அணியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சம நிலையில் காணப்பட்டாலும் கூட மைதான ஆதரவு மற்றும் கால நிலை என்பன யூனியன் கல்லூரி அணிக்கு சாதகமாக இருக்கவில்லை. அத்துடன் போக்குவரத்து மற்றும் ஓய்வற்ற தன்மை என்பனவும் யூனியன் கல்லூரி வீராங்கனைகளுக்கு சோதனைகளாக அமைந்தன.

இந்த நிலையில் இரண்டு கால் பாதி ஆட்டங்களைக் கொண்ட இப்போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் தொடக்கத்தில் இரு அணிகளும் சம நிலையில் காணப்பட்டன. எனினும் நேரம் செல்லச்செல்ல மைதானத்தில் தெரிவு அணியின் ஆதிக்கம் மேலோங்கியது.இதனால் 10:5 புள்ளிகள் என்ற நிலையில் தெரிவுஅணி முதல் பாதியில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் தெரிவு அணியின் கைகள்மேலோங்கத் தொடங்கியது. இதனால் 14:6 புள்ளிகள் என்ற நிலையில் இரண்டாம் பாதி ஆட்டமும் தெரிவு அணி வசமானது.

ஆட்ட நிறைவில் இலங்கைப்பாடசாலைகள் தெரிவு அணி 24:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று தேசிய மட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ங-86)

# கரப்பந்தாட்டத்தில் அச்சுவேலி ப.தெ.அ.கூ. சங்க அணி சம்பியன்



பண்டத்தரிப்பு, ஜூலை 18

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து யாழ். மாவட்ட கூட்டுறவாளர்களுக்கிடையே நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சம்பியனாகியது.

சுற்றுத்தொடரின் இறுதியாட்டம் அண்மையில் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் கூட்டுறவுத் திணைக்கள அணியை எதிர்த்து அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அணி மோதிக் கொண்டது. முதல் சுற்றில் கூட்டுறவுத் திணைக்கள அணி தடுமாற அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதனால் முதலாம் சுற்று 25:18 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்க அணி வசமானது.

எனினும் இரண்டாம் சுற்றில் சுதாகரித்துக் கொண்ட கூட்டுறவுத் திணைக்கள அணி மள மள என்று புள்ளிகளை குவித்தது. ஒரு கட்டத்தில் 7:1 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் கூட்டுறவுத் திணைக்கள அணி முன்னிலை பெற்றிருந்தது. எனினும் பின்னர் அச்சுவேலி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அணியினரும் அபாரமாக ஆட இரண்டாம் சுற்று மிகவும் விறு விறுப்பானதாக அமைந்தது. எனினும் இறுதி நேரத்தில் அடுத்தடுத்து புள்ளிகளை பெற்ற அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அணியினர் இரண்டாம் சுற்றையும் 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் தமதாக்கிக்கி, போட்டியில் 2:0 என்ற சுற்றுக்கள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

(ங-130)



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுப் பிரிவு அணிகளுக்கான பூப்பந்தாட்டப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணியினர் அதிபர் மற்றும் பொறுப்பாசிரியர்களுடன் (ங-23)

## எவரெஸ்ற் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்றில் புத்தூர் எவரெட்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்து பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டு கழகம் மோதிக்கொண்டது. இந்தப் போட்டியில் புத்தூர் எவரெட்ஸ் விளையாட்டுக்கழகம் 4:1 என்ற கோல் அடிப்படையில் அன்ரனிஸை வீழ்த்தி வெற்றி பெற்றது.

(ங-23)


## முதலிடம்



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டியில் 21 வயதுப் பிரிவின் கீழ் ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் சென். சாள்ஸ் மகாவித்தியாலய மாணவன் ச. சியானியஸ் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளார். (ங-136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மீண்டும் துளிர்விடும் உறவு

இந்தியா, பாகிஸ்தான் இடையிலான கிரிக்கெட் உறவு 5 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் மலர்கிறது. இவ்விரு அணிகள் 3 ஒரு நாள் ஆட்டங்கள், 2 'ரி-20' ஆட்டங்களில் மோத உள்ளன. ஆட்டங்கள் சென்னை, டில்லி, கொல்கத்தா, அஹமதபாத் மற்றும் பெங்களூரில் நடத்தப்படவுள்ளன.

பாகிஸ்தான் அணி கடைசியாக 2007, டிசெம்பரில் இந்தியா வந்தது. 2008 இல் மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் இரு நாட்டு உறவு பாதிக்கப்பட்டது. இரு நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் தொடர் நடக்கவில்லை. இந்தத் தொடரை பொதுவான இடத்தில் நடத்த, பி.சி.சி.ஐ., சம்மதிக்கவில்லை. ஐ.பி.எல்., மற்றும் சம்பியன்ஸ் லீக் தொடரிலும், இந்தியா வர பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. உலகக் கிண்ணம் உள்ளிட்ட சில பொதுவான தொடரில் மட்டும் இரு அணிகளும் மோதிக் கொண்டன.

இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.,), பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபை (பி.சி.பி.,) நிர்வாகிகள் இடையே, அவ்வப்போது பேச்சுவார்த்தை நடந்தது. இதையடுத்து, தென்னாபிரிக்காவில் நடக்கவுள்ள சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடரில், பாகிஸ்தான் உள்ளூர் அணியான சியால்கோட் ஸ்டாலியன்சிற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### திடீர் முடிவு

தற்போது, மேலும் ஒரு திருப்பமாக இரு நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் தொடர் 5 ஆண்டுகளுக்குப் பின்னர் நடக்கவுள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் இந்தியா வரும் இங்கிலாந்து அணி, நான்கு டெஸ்ட், 2 'ரி-20' தொடரில் பங்கேற்கிறது. பின்னர், டிசெம்பர் 23 இல் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு கொண்டாட நாடு திரும்புகின்றனர்.

மீண்டும் 2013, ஜனவரி 3 இல் இந்தியா வரும் இங்கிலாந்து அணி, 11 ஆம் திகதி முதல் ஒரு நாள் ஆட்டத்தில் பங்கேற்கிறது. இதனால் இந்திய அணி டிசெம்பர் 23 முதல் ஜனவரி 10 (2013) வரை, 19 நாள் ஓய்வில் உள்ளது.

அதேபோல, பாகிஸ்தான் அணிக்கும் டிசெம்பரில் எவ்வித ஆட்டங்களும் கிடையாது. ஜனவரி 2013 இல் தான் சிம்பாப்வே செல்லும். இருப்பினும், இந்தியாவுக்கு எதிரான தொடருக்காக இதில் மாற்றங்கள் செய்யவுள்ளது.

இதையடுத்து, எதிர்வரும் டிசெம்பர் மாதம், இந்தியா-பாகிஸ்தான் அணிகள் பங்கேற்கும், மூன்று ஒரு நாள் மற்றும் 2 'ரி-20' ஆட்டங்கள் கொண்ட தொடர் நடக்கவுள்ளது. இதுகுறித்து பி.சி.சி.ஐ., வெளியிட்ட அறிக்கை:

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் இடையே, மீண்டும் கிரிக்கெட் உறவை தொடங்க முடிவு செய்துள்ளோம். இதன் ஒரு பகுதியாக, எதிர்வரும் டிசெம்பர்-ஜனவரி மாதம், இந்தியாவுக்கு எதிரான தொடரில் பங்கேற்க வருமாறு பாகிஸ்தானுக்கு அழைப்பு விடுக்கப்படும். இது தொடர்பான பணிகள் விரைவில் தொடங்கும். இந்தத் தொடரை நடத்த, மத்திய அரசு கொள்கை அளவில் சம்மதித்துள்ளது, இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### கவாஸ்கர் எதிர்ப்பு

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடருக்கு, முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது:

மும்பை பயங்கரவாதத் தாக்குதல் விசாரணைக்கு, பாகிஸ்தான் போதிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை. இந்த நிலையில், இரு அணிகள் மோதும் தொடருக்கு என்ன அவசரம் வந்தது. மும்பைக்காரர் என்ற முறையில் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறேன்.

இதைத் தவிர, நவம்பர்-டிசெம்பரில் இங்கிலாந்துக்கு எதிரான தொடர் நடக்கின்றது. இதற்கு இடையில் பாகிஸ்தான் தொடரை நடத்துவதால், வீரர்கள் மூச்சுவிடக் கூட நேரமிருக்காது. காயங்களில் இருந்து மீள இந்த ஓய்வை பயன்படுத்தலாம் - என்றார். (5)



# நண்பரின் ஓய்வால் வருத்தப்படுகிறேன்

ஆஸ்திரேலியா வேகப் பந்து வீச்சாளர் பிரட் லீ கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றது வருத்தமளிக்கிறது என்று இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங் கூறியுள்ளார்.

இது குறித்து டுவிட்டர் இணையத்தளத்தில் எழுதியுள்ள அவர், பிரட் லீயின் பந்து வீச்சு எப்பொழுதும் எனக்கு பிடித்தமானதாகும். அவர் உலகத் தரம் வாய்ந்த வீரர் மட்டுமன்றி, நல்ல நண்பரும் ஆவார். ஒரு நல்ல மனிதர் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றது வருத்தமளிக்கிறது. 2004 ஆம் ஆண்டில் நடந்த முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் பிரட் லீ மணிக்கு 155 கிலோ மீட்டர் வேகத்தில் வீசிய பந்து வீச்சு மறக்க முடியாததாகும் என்று கூறியுள்ளார்.

டெண்டுல்கர் டுவிட்டர் இணையத்தளத்தில் எழுதியிருக்கும் பாராட்டில், உங்களது வெற்றிகரமான கிரிக்கெட் வாழ்க்கைக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பதுடன், உங்கள் வருங்காலம் வளமாக அமையவும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். பிரெட்லீ வீசிய பந்துகளை எதிர்கொண்டு ஆடியது சந்தோஷமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். டெண்டுல்கரின் பாராட்டுக்கு பிரட் லீ பதிலளிக்கையில், உங்களுக்கு எதிராகப் பந்து வீசியது எனக்கும் மகிழ்ச்சியை தந்தது. களத்தில் கடும் போட்டியை ஏற்படுத்தி கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். நிச்சயமாக என்னுடைய முழு திறமையும் வெளிக் கொண்டு வர வைத்தீர்கள் என்று தெரிவித்துள்ளார்.



(5)

# எஸ்.எல்.பி.எல்லின் காலை வாரும் இலங்கை வீரர்கள்



இலங்கை வீரர்களுடனான வருடாந்த ஒப்பந்தத்தில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் கையெழுத்திட்டால் மட்டுமே ஸ்ரீலங்கா பிரிமியர் லீக் (எஸ்.எல்.பி.எல்.) தொடரில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பங்குபற்றுவார்கள். அவ்வாறு கையெழுத்திட மறுக்கும் பட்சத்தில் இலங்கை அணியின் எந்தவொரு வீரரும் எஸ்.எல்.பி.எல்லில் பங்குபற்ற மாட்டார்கள் என்று இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன கூறியுள்ளார்.

'இலங்கை வீரர்களுடன் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டால் மாத்திரமே நாம் எஸ்.எல்.பி.எல். தொடரில் பங்குபற்றுவோம் என்று இந்தத் தொடர் தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மஹேல ஜெயவர்தன கூறினார்.

**இலங்கை வீரர்களுடன் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டால் மாத்திரமே நாம் எஸ்.எல்.பி.எல். தொடரில் பங்குபற்றுவோம் என்று இந்தத் தொடர் தொடர்பாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மஹேல ஜெயவர்தன கூறினார்.**

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் 2012 ஆம் வருடத்துக்காக வீரர்களுடன் இன்னும் ஒப்பந்தம் செய்யவில்லை. அந்த வீரர்களுக்கு இந்த வருடத்தின் முதல் காலாண்டுக்கான சம்பளம் வழங்கப்படவுமில்லை. கடனில் மூழ்கியுள்ள ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் கடந்த வருடம் உலகக்கிண்ண தொடருக்காக மூன்று அரங்குகளை நிர்மாணித்ததிலிருந்து பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. மேற்படி அரங்குகளுக்காக சுமார் 700 கோடி ரூபா செலவிடப்பட்டதாக கூறப்படுகிறது.

எஸ்.எல்.பி.எல். தொடர் எதிர்வரும் ஒகஸ்ட் 10 ஆம் திகதியிலிருந்து ஒகஸ்ட் 31 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகை பெறுவதற்காக மன்னிப்புக் கேட்பார் கபில்



கபில்தேவின் பிடிவாதம் தளர்கிறது. இவர், பி.சி.சி.ஐ.யிடம் பொது மன்னிப்பு கேட்க தயாராக உள்ளார். மன்னிப்பு அளிக்கப்படும் பட்சத்தில் ரூ. 1 கோடி சிறப்பு நிதி உதவி, ஓய்வூதியம் உட்பட அனைத்து சலுகைகளையும் உடனடியாகப் பெறலாம்.

இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் கபில்தேவ். கடந்த 1983 இல் உலகக் கிண்ணத்தை இந்தியாவுக்குப் பெற்றுக் கொடுத்தார். ஓய்வுக்குப் பின்னர் இந்திய கிரிக்கெட் சபையை (பி.சி.சி.ஐ.) பகைத்துக் கொண்டார். 2007 இல் பி.சி.சி.ஐ.க்கு போட்டியாக தொடங்கப்பட்ட இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) அமைப்பின் தலைவராக செயல்பட்டார். இதையடுத்து கபில் தேவ், கிரண் மோரே உள்ளிட்டோருக்கு பி.சி.சி.ஐ., தடை விதித்தது. பின்னர் பொது மன்னிப்பு கேட்பவர்களுக்கு தடை நீக்கப்படும் என்று அறிவித்தது. இதனை ஏற்க மறுத்தார் கபில் தேவ்.

இந்த நிலையில் பி.சி.சி.ஐ. தலைவர் சீனிவாசன் தனிப்பட்ட முறையில் முயற்சி மேற்கொண்டார். கபில் தேவுடன் விரிவாக விவாதித்தார். அப்போது பொது மன்னிப்பு கேட்க ஒத்துக் கொண்டதாக தெரிகிறது. இது குறித்து பி.சி.சி.ஐ. செயற்குழு உறுப்பினர் ஒருவர் கூறுகையில், கபில்தேவை மீண்டும் பி.சி.சி.ஐ. அமைப்பில் சேர்ப்பதற்கான விவாதம் பயனுள்ளதாக இருந்ததாக சீனிவாசன் தெரிவித்தார். பொது மன்னிப்பு தொடர்பான கடிதம், கபில்தேவின் கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இருக்கும் - என்றார்.

கபில்தேவ் பொது மன்னிப்பு கேட்கும் பட்சத்தில் அவருக்கு ரூ. 1 கோடி சிறப்பு நிதி, ஓய்வூதிய நிலுவை தொகை உட்பட அனைத்து சலுகைகளும் அளிக்கப்படும். பி.சி.சி.ஐ. நிர்வாகத்திலும் உயர் பதவி அளிக்கப்படலாம்.

மோரேவுக்கு கருணை

ஐ.சி.எல். அமைப்பில் இருந்து விலகிய முன்னாள் இலக்குக் காப்பாளர் கிரண் மோரே, பி.சி.சி.ஐ.க்கு எழுதிய பொது மன்னிப்பு கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதையடுத்து, ஐ.பி.எல். வருமானத்தில் இருந்து, முன்னாள் இந்திய வீரர்களுக்கு வழங்கப்பட்ட, சிறப்பு நிதி ரூ. 60 லட்சம் மற்றும் பென்ஷன் இவருக்கும் கிடைக்கவுள்ளது. (5)


**பணிநிலை வெற்றிடங்கள்**

கணக்காளர்கள் தேவை.

நிறுவனம் ஒன்றின் முடிவுக்கணக்குகளை செய்து அறிக்கை சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

அரச/ அரச சார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களும் விரும்பத்தக்கது.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தகுதியுடைய மாற்றுத்திறனாளிகளும் விரும்பப்படுவர்.

தகுதியுடையோர் உடன் நேரில் வரவும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/1538) (சி/1540) (15-14)

**ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா**

அரைவாசி ஆலோசனைக் கட்டணத்துடன்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
37, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
0212219016
(20566) (15-6)

**தேவை**

கணினி ரைப்செற்றிங் செய்வதில் நல்ல அனுபவம், திறமை உள்ளவர்கள் தேவை.
(யாழ் நகரம்)
T.P : 077 2174751
(20591)(6-14)

**பௌதிகவியல்**
2013 A/L HEAT
செவ்வாய், வியாழன் 6.15 A.M.
2014 A/L வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
By Kajan
முத்தட்டுமடலேன், கோண்டாவில் மேற்கு T.P: 0213734114
(20585)(14-6)

**Free ! Free ! Free !**
Web Designing, Photoshop & Networking
Before 20.07.2012
SMS your Name & Course to 0772395895
MCS Supported By UNDP/JRRP
324,Palaly Road, Parameswara Junction Jaffna.
T.P 0772395895
021 222 6373

அரசாங்க விருது பெற்ற நிறுவனத்தின் நேரடி கொள்முதலின் கீழ் பழைய பட்டுப்புடவை பணமாகிறது
ஓம் ஸ்ரீ காஞ்சிபுரம் பட்டுச் சொசைட்டி சென்டர்
அருந்ததி மண்டபம், அந்தோனியார் ஆலயம் முன்பாக
361, ஹொறவபொத்தான வீதி,
இறம்பைக்குளம். வவுனியா.
T.P:- 0712342341
5 தினங்கள் மட்டுமே
18.07.2012 முதல் 22.07.2012 வரை
பழைய (கிழிந்த) பட்டுப்புடவைகள்
பட்டு வேஷ்டிகள், பட்டுப்பாவாடைகள்
பழைய கிழிந்த கூறைப்புடவைகளும் எந்த நிலையில் இருந்தாலும் காஞ்சிபுரம் மில் விலைக்கே வாங்கிக்கொண்டு உடனே பணம் தரப்படும்.
★பழைய டிஸ்யூ புடைவைகள் ரூபா 10,000/= க்கு மேல் ரூபா 75,000 /= வரை வழங்கப்படும்
★ இந்த விளம்பரத்தை கொண்டு வந்து பட்டுபுடவை கொடுத்தாலும் Hydrabad Iam Gold கவரிங் வளையல் செட் இலவசம்.
★ஞாயிற்றுக்கிழமை கடை உண்டு.
(16918) (15-14)

**Jenny Cabs**
TAXI
Dropping Charge 1km - 45/=
Up & Down Charge 1km - 35/=
CALL TAXI
077 4949555
No.15, Sirampiyadi lane,(above cosy Hotel ) Jaffna.
Hotline: 077 4949555 Land Phone: 021 222 8250
(சி/1462)(6-7-8)

**மணல் விற்பனைக்குண்டு**
கட்டட வேலைக்கும், பூச்சுவேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர்-19, 500/=
தொடர்புகளுக்கு: ரமேஸ்
072 2694462
(20570)

**8 Course fee Free***
(எதாவது ஒரு கற்கைநெறியை கற்பவர்களுக்கு)
Admission Open for Next Intake
*Ms office *Hardware *Networking *DTP, Accounting *Internet & email *Web Design *English *Singalam
Qualified Lectures panel, 12 Years Experience
SMS Your name & Course to 775520940 & Get Schol.
கல்வியங்காட்டில் மட்டும்
மேலதிக விபரங்களுக்கு நேரில் 243,Adiyapatham Road
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society

**நியூசிலாந்து Student Visa**
இலகுவான நிபந்தனைகள் மட்டுமே
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
37, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.
0212219016
(20565) (15-6)

**கம்பியூட்டர் ருடே**
கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை
சி/1544)

**ஷாம்சன் இங்கிலீஷ் 3 மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி**
தொழில் புரிவோர், தொழில் தேடுவோர், பட்டதாரிகள், இளைஞர், யுவதிகள், பாடசாலை, உயர்கல்வி மாணவர்கள் வெளிநாடு செல்வோருக்கான புதிய பயிற்சிப்பட்டறைகள் ஆரம்பம்.
காலம்- 21.07.2012 (சனி)
பிரிவுகள்
I) 8-10 III) 01-03
II) 10-12 IV) 03-05
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்
ஷாம்சன் 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம். TEL:- 0776214567
(சி/1520) (15)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
✳ Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Batch - 1: 21.07.2012 9.00 - 12.00
Batch - 2: 22.07.2012 3.00 - 5.00
Batch - 3: 23.07.2012 9.00 - 12.00
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அற்பன்
துவேஷிக்கிறான்
மேலோன்
அனுதாபப்படுகிறான்.
-சிங்சொ-

# புதன் பொய்கை A

உதயன் | 18 ஜூலை 2012 புதன்கிழமை | பக்கங்கள்: நான்கு




# திருந்தாத ஜென்மங்கள்

துன்னாலைச் செல்வம்

ஈழ மண் வீரம் மிக்க கலாசார பண்பாடுகளை உடைய மண். இந்த மண் விடுதலையின் பால் மூன்று சகாப்த போரில் ஈடுபட்டு களைப்படைந்து இருக்கிறது. இதற்கு இந்த மண்ணில் பிறந்து வளர்ந்த இளைஞர்கள் பெண்கள் காரணமாக அமைந்தார்கள் என்பது வரலாறு. ஈழத் தமிழ் இளைஞர்கள் தமது கலாசாரத்தை பாதுகாத்து அடக்குமுறைக்குள் இருக்கும் தமிழ் மக்களை விடுவிக்க அயராது உழைத்துக் கொண்டிருக்கும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் இந்த மண்ணில் இப்பொழுது கட்டுக்கடங்காமல் தமிழ் சமூகத்தையே சீரழிக்கும் செயல்பாட்டில் தமிழர் இளைஞர்களே இறங்கி இருப்பது தமிழ்ச் சமூகத்திற்கு அவமானத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

கடந்த கால அனுபவங்கள் எமது மண்ணில் தொடர்ந்து வாழ்வதற்கான பாடமாக இருக்கிறது. ஆகையால் கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை மனதில் நிறுத்தி எமது சமூகத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் இளைஞர்களிடம் இருக்கிறது.

கோமாளிகளாக வலம் வரும் இளைஞர்கள் தமிழ்ச் சமூகத்தைச் சீரழிக்கும் நிகழ்வுகளில் பங்குபற்றி, எமது மண்ணின் தமிழ் கலாசாரத்தை சீரழித்து விடுவதற்குக் காரணியாக அமைந்து விடுகின்றனர். அந்த வகையில் தமிழ்ச் சினிமா மோகம் இன்று இளைஞர்களைக் கெடுத்து வருகிறது.

சினிமா மோகம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரை எல்லை கடந்து சென்று விட்டது. நல்ல தளமாக சினிமாவைக் கொண்டு செல்லக் கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தும் நல்ல சினிமாவாக வெளிக் கொண்டுவர முடியாமைக்கு அங்குள்ள புத்தி ஜீவிகளே இதற்கு காரணமாக அமைகின்றனர். புத்திஜீவிகளும் வியாபார உலகில் மூழ்கிப் போய் எழுந்திருக்க முடியாமல் இருப்பதால்தான் எந்தக் கருத்துக்கும் அது சரிதான் என்று வாதாடும் சூழ்நிலையில் உள்ளனர்.

இந்த வணிக உலகில் எது சரி எது பிழை என்று பார்க்க முடியாமல் அதைப் பற்றி சிந்திக்க முடியாமல் புத்திஜீவிகள் இருப்பதுதான் வேதனை தரும் விடயம். அந்த வணிக உலகில் சினிமாவும் பெரிய அளவில் அங்கம் வகித்துள்ளதால் இன்றைய உலகம் சினிமாவில் மூழ்கிப் போய் இருக்கிறது. இதனால் இளைய தலைமுறையினரின் எதிர்காலம் இப்போதைய தமிழ்ச் சினிமாவை ஒத்ததாக இருக்கப் போகின்றது.

தமிழகத்தில் இந்தச் சினிமா மோகத்தில் உள்ளீர்க்கப்பட்டவர்கள் கூடுதலாக நாளாந்த வேலை செய்யும் ஏழை வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். அதாவது அன்றாட கூலி வேலை செய்துவிட்டு தியேட்டரில் படம் பார்க்காமல் அவர்களின் அன்றாட நாள் கழியாது. அந்த ஏழைகளின் பணத்தில் கோடீஸ்வரராக வந்தவர்கள்தான் சினிமாக்காரர்கள். அதனால்தான் தமிழ் நாட்டில் கோடீஸ்வரனும் பிச்சைக்காரனும் நிறையப்பேர் இருக்கிறார்கள்.

வியாபாரத்தில் முன்னணியில் இருக்கும் தமிழ்ச் சினிமா கொடி கட்டிப் பறக்கிறது. இப்படிப்பட்ட சினிமாவில் பெயர் சொல்லும்படி புகழ்பெற்ற நடிகர்களின் கட்டவுட்டுக்கு திரைப்படம் வெளியாகும் போது, குடம் குடமாக பால் ஊற்றி அபிஷேகம் செய்வார்கள். அப்படிப் பட்ட சினிமா ஏமாளிகள் உலகிலேயே கூடுதலாக உள்ள நாடு தமிழ் நாடு. தியேட்டரில் படம் வெளி வந்த முதல் நாள் படம் பார்க்க ரிக்கெட் கிடைக்காததால் தற்கொலை செய்து கொள்பவர்களும், தியேட்டரில் ரிக்கெட் எடுப்பதற்காக யன்னலூடே கையை உள்ளே விட்டு எடுக்க முடியாமல் கையை இழந்தவர்களும், தனது கை விரலினை துண்டாக்கி நடிகைக்கு அனுப்பி வைத்தவர்களும், இரத்தத்தினாலே கடிதம் எழுதி தனக்குப் பிடித்த நடிகர், நடிகைகளுக்கு அனுப்பி வைத்தவர்களுமாக கூடுதலாக சினிமா ரசிகர்கள் உள்ள தமிழ் நாட்டின் மாதிரியை இன்று எமது இளைஞர்களும் பின்பற்றி அலைகின்றார்கள்.

இப்படியாக சினிமா மோகத்தில் அலைகின்றவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக இருக்கப் போவதை அந்த சினிமாப் படத்தை எடுப்பவர்களும் , அதில் நடிப்பவர்களும், இயக்குநர்களும் ஒரு சிறு துளியளவுகூட சிந்திப்பது இல்லை என்பது இந்த சினிமா மோகமுள்ள அப்பாவி ரசிகர்களுக்குத் தெரியவில்லை. அதனால் தான் சினிமா ரசிகர்கள் இப்படியாக நடந்து கொள்கிறார்கள்.

தமிழ் நாட்டில் வெளிவரும் வியாபார நோக்கிலான பெரும்பாலான சினிமாப் படங்கள் மக்களுக்கு நல்ல கருத்துக்களை வெளிப்படுத்தி அவர்களிடம் சிறந்த சிந்தனைகளை போதிக்காமல் அவர்களை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் மோசமான காட்சிகளை வெளிப்படுத்தி வருகின்றன.

இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்க்கின்ற இளைஞர், யுவதிகளின் வாழ்வில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணி விடுகிறது. அவர்களது வாழ்வை சீரழிப்பதற்கான சினிமாவாக இருந்தும் அதில் தாங்களாகவே வீழ்ந்து கொள்ளும் ஈர்ப்புசக்தி இதற்கு இருப்பது அபூர்வமானதாகும்.

நவீன தொழில் நுட்பத்தில் கவர்ச்சியுடன் காட்சிகள் ரசிகர்களை மயங்க வைக்கும் தமிழ் சினிமா மேனியில் உடையில்லாமல் நடைப்பயணம் செய்கிறது. அதிசயக்க வைக்கும் சண்டைக் காட்சிகளும், பெண்களை அழகுப் பொருளாக காட்சிப்படுத்தும் பாங்கும் சினிமாவை திரையரங்குகளில் ஓட விட்டு 100 நாள் விழா கொண்டாடுகிறது.

இந்த வியாதி ஈழத்திலும் தொற்ற ஆரம்பித்திருப்பது வேதனை தரும் விடயமாகும். யாழ். நகரில் உள்ள சினிமா தியேட்டர் ஒன்றில் நடிகர் அஜித்தின் கட்டவுட்டுக்கு இளைஞர்கள் பால் ஊற்றி அபிஷேகம் செய்துள்ளனர். ஈழத்தில் உள்ள ஒரு சில அஜித்தின் ரசிகர்கள். 5 லீற்றர் கொள்கலன் இரண்டில் அதாவது 10 லீற்றர் பாலை அஜித்தின் கட்டவுட்டுக்கு ஊற்றியுள்ளனர். அந்த திரையரங்கில் பட ஆரம்ப நாளான கடந்த 13 ஆம் திகதி காலை 9 மணிக்கு அங்கு கூடி நின்ற இளைஞர் வட்டம் வெடி கொளுத்தி மேளதாளம் முழங்க தேங்காய் உடைத்து இந்த பால் அபிஷேகம் நடைபெற்றது.

இறுதிப் போரில் இலட்சக்கணக்கானோர் இறந்தும், காணாமல் போயும், அங்கவீனர்களாகவும் உள்ளனர். தப்பிப் பிழைத்தவர்கள் வாழ்வும் இன்னும் முழுமையடையவில்லை. நாளாந்தம் அவர்கள் வாழ்வை நகர்த்தவே கஷ்ரப்படுகின்றனர். இவ்வளவு லீற்றர் பாலை போரினால் பாதிக்கப்பட்ட நமது உறவுகளின் வாயில் ஊற்றி இருந்தால் ஒரு கோடி புண்ணியம் கிடைத்திருக்கும். இதை விட்டு விட்டு அஜித்தின் கட்டவுட்டுக்கு பாலை ஊற்றி தங்களை தாங்களே கேவலப்படுத்தியுள்ளனர்.

வீரப் பண்பாடு நிறைந்த இளைஞர்கள் வாழ்ந்த மண் இது. அவர்களைப் பார்த்து நாமும் வாழவேண்டும். அவர்கள் போல் வாழமுடியாமல் போனால் பறவாயில்லை, ஆனால் இப்படிப்பட்ட நிகழ்வுகளில் இறங்கி எதிர்காலத்தையும் வீணாக்கி சமூகத்தையும் கொச்சைப் படுத்தாமலாவது இருக்க வேண்டும். ஈழ மண்ணில் மூன்று தசாப்த போர் இடம்பெற்றுள்ளது. அந்தக் காலம் சமூகத்துக்கு உதவக் கூடிய பல நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. அத்தனை நிகழ்வுகளும் வரலாறாகப் பதிவாகியுள்ளன. இன்று போர் மௌனிக்கப்பட்ட நிலையில் ஈழ மண்ணில் தமிழர்களை கொச்சைப்படுத்தும் நிகழ்வுகள்தான் கூடுதலாக இடம்பெறுகின்றன.

அதாவது தமிழர் கலாசார பண்பாட்டை இல்லாமல் செய்து அவர்களின் பூர்வீக நிலத்தில் பாதுகாப்பாக வாழக் கூடிய சூழலை இல்லாமல் செய்து தமிழ் சமூகத்தையே விழிப்படையாது தடுக்கும் எதிரிகளுக்குப் போரைவிடப் பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. முடியாத இப்படிப்பட்ட நிகழ்வுகளை ஏற்படுத்தி இருப்பதில் இளைஞர்கள் சிந்திக்கக் கூடியவாறு அவர்களின் எதிர் காலம் சிறந்து விளங்க அவர்களுக்கு அறிவுறை கூறுவது எமது சமூகத்தில் உள்ள அனைவரதும் கடமையாகும். இப்படியாக இளைஞர்களை அவர்கள் போக்கில் விட்டு விட்டால் அவர்களுடைய எதிர்காலம் கேள்விக்குறியாக மாறி விடும்.

விடுதலைப்புலிகளின் போராட்ட காலங்களில் தமிழ் இளைஞர்கள் ஒரு கட்டுக் கோப்புக்குள் வைக்கப்பட்டிருந்தார்கள். அந்தக் காலப் பகுதியில் ஈழத் தமிழ் இளைஞர்கள் நல்ல விடயங்களை பின்பற்றி தமது மண் மீதான அக்கறையும் கொண்டவர்களாக இருந்தனர்.

இன்றுள்ள இளைஞர்களுக்கு சிறந்த வழியைக் காட்டுவதற்கு ஒரு தலைமை இல்லாததால் தமிழ் இளைஞர்கள் தங்கள் போக்கில் உலாவருகின்றனர். கேட்பதற்கு எவரும் இல்லாத சூழ்நிலையில் சமூகத்திற்கு தீங்கிளைக்கும் செயற்பாடுகளிலும் இறங்கி விட்டனர்.

எனவே இன்றைய இளைஞர்களின் இப்படிப்பட்ட கோமாளி நிகழ்வுகளை தடுத்து அவர்களுக்கு நல்ல வழியைக் காட்ட வேண்டிய பொறுப்பு எமது சமூகத்திலுள்ள அனைவரினதும் கடமையாகும். மாவீரர்கள் பிறந்த மண்ணில் அவர்கள் வாழ்ந்த வாழ்வை எண்ணிப் பார்ப்போம். அப்பொழுதுதான் எமது சமூகத்தின் மீதான பொறுப்பு இளைஞர்கள் கையில் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆல மரத்தில் காட்சியளிக்கும் உணவகம்





பொதுவாக உணவகங்கள் ஆடம்பரமாகவும், அழகாகவும் காணப்படும். ஜப்பானில் ஒரு ஆலமரத்தின் மேல் அழகான உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

# வித்தியாசமான நண்பர்கள்



# விமானப் பயணத்தில் செல்லப்பிராணிகள்





செல்லப்பிராணிகளை இமைப்பொழுதும் பிரிய முடியாமல் தவிக்கிறவர்கள் இருக்கிறார்கள். மேலைநாடுகளில் செல்லப்பிராணிகளுடன் சாப்பிட்டு தூங்குபவர்களும் கூட இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்களது பயணத்தின்போது செல்லப்பிராணிகளை அழைத்துச் செல்வதும் உண்டு. ஆனால் விமானப்பயணத்தின் போது செல்லப்பிராணிகளை அழைத்துச் செல்ல பல நாடுகள் தடை விதித்து இருக்கின்றன.

இந்தநிலையில் பிரிட்டன் நாட்டில் இனி விமானப் பயணத்தின்போது செல்லப்பிராணிகளையும் அழைத்துச்செல்லலாம். இதற்கான அனுமதி அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் பயணிகளுக்கு இந்தச் செல்லப்பிராணிகள் மனதளவில் ஊக்கம் ஏற்படுத்தக்கூடிய நிலையில் இருக்க வேண்டுமாம். பிரிட்டன் விமானங்களில் நாய், பன்றி, பூனை, குரங்கு என செல்லப்பிராணிகள் இனிப் பறப்பதை பார்க்கலாம்.

# மனித எலும்பில் கலைப் படைப்பு





நாளுக்கு நாள் மனிதர்களின் சிந்தனைகளும், படைப்புகளும் வித்தியாசமாகிக்கொண்டே போகின்றன. மனி தர்களின் எலும்பில் காணப்படும் ஓர் வினோத கலைப் படைப்பை இங்கு காணலாம்.

# வியக்கவைக்கும் விமான சாகசங்கள்



உலகின் பல்வேறு நாடுகளிலும் காணப்படும் விமானப்படையினரின் விமான சாகசங்கள் விசேட நாள்களில் மேற்கொள்ளப்படுவதுண்டு அதேபோலவே இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேச விமானச் சாகசங்களும் நிகழ்த்தப்படுவதுண்டு. இதில் பல்வேறு நாடுகளின் விமானப்படைகளைச் சேர்ந்த வீரர்களும், விமானங்களும் பங்குபற்றி தமது சாகசங்களை பிரிட்டனில் தெற்குப் பகுதியிலுள்ள 40 மைல் சுற்றளவு கொண்ட பிரதேசத்தில் வருடாந்தம் மேற்கொள்வது வழமை.

# வீட்டுத் தோட்டத்தில் ரயில் பயணம்



பொதுவாக ஓய்வு பெற்ற பெரியவர்கள் வீட்டில் செய்தித்தாள், தொலைக் காட்சி பார்ப்பார்கள். முடிந்தவரை நடைபயிற்சி மேற் கொள்வார்கள். ஆனால் பிரிட்டனில் பெரியவர் ஒருவர் பொழுது போகாமல் தன் வீட்டை சுற்றியுள்ள தோட்டத்தில் தண்டவாளம் அமைத்து, ரயிலில் தினமும் பயணிக்கின்றார். பிரிட்டனில் ஷார்ப்ஷயர் பகுதியில் பிரிட்ஜ்நார்த் என்ற இடத்தை சேர்ந்த தாத்தா பல் பெரிட், பணியிலிருந்து ஓய்வு பெற்ற இவருக்கு ரயிலில் பயணம் செய்வது மிகவும் பிடித்த விடயம்.

தற்போது தனது வீட்டைச் சுற்றியுள்ள 13 ஏக்கர் தோட்டத்தில் 2 கிலோ மீற்றர் நீளத்தில் தண்டவாளம் அமைத்து, சுமார் 25 அடி நீளமுள்ள ரயிலை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்து ஓடவிட்டுள்ளார். தற்போது தனது தோட்டத்தை சுற்றிப்பார்க்க ரயிலிலே பயணம் செய்கிறார் இந்த முதியவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விதிரேகையின் அமைப்பு மேலும் தொடர்கிறது




# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

21




3. விதி ரேகை கையின் மத்தியிலிருந்து உற்பத்தியாகி சனி மேட்டுக்குச் சென்றிருக்கிறது. இது தன் முயற்சி கொண்டு வாழ்வில் முன்னேற்றமடைவதைக் குறிக்கிறது.

4. விதி ரேகை சந்திரமேட்டிலிருந்து உற்பத்தியாகியிருந்தால் ஆதரவு ஸ்திரிகளால் ஏற்படுவதைக் குறிக்கிறது. இந்த ஆதரவு கல்வி அபிவிருத்தியையாவது, பொருளையாவது அறிவிப்பதாகும். தாயின் சிரத்தையால் மூடப்பிள்ளை கல்வியில் தேறும். மனைவி மிக்க பொருளுதவி செய்வதால் விசேஷ லாபமுண்டாகும். சந்திரமேட்டில் விதி ரேகை உற்பத்தியாவதால் பெற்றோரைப் பின்பற்றாமல் தனக்குத் தானே முயற்சி செய்து தொழிலில் ஈடுபடுவதைக் குறிப்பதாகும்.



5. விதி ரேகை எல்லையைவிட்டு உற்பத்தியாயிருப்பதைப் படத்தில் காண்க. ரேகை உற்பத்தியாகின்ற கால அளவில்தான் நன்மை உண்டாகிறது. ரேகையில்லாத காலத்தில் அடுத்து முயல்வதாலும் செல்வாக்காலும் ஒருக்கால் நன்மை உண்டாகலாம். இதைக் கிரக மேட்டைக் கொண்டு தீர்மானித்தல் வேண்டும். செல்வாக்கு மிகுந்துள்ளபோது ரேகை புலப்படாதிருப்பதுண்டு.

விதி ரேகையில் குற்றங்கண்டவிடத்து இதர ரேகையின் அமைப்பையும் கவனித்துக் கொள்வது நலம். விதி ரேகை உற்பத்தியாகும் வரை எல்லாவிதமான தடைகளும் ஏற்படும். பிறகு படிப்படியாய் வழியுண்டாகும். ரேகை ஆரம்பத்தில் தடித்திருந்தால் மூளைத் தொந்தரவைக் குறிக்கும். விதி ரேகையோடு புத்தி ரேகையையும் இருதய ரேகையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். விதி ரேகை ஆரம்பத்தில் மெல்லியதாய் ஆரம்பித்துப் பிறகு சற்றே தடித்திருக்குமாயின் நன்மை படிப்படியாய் ஓங்குவதைக் குறிக்கும்.

6. இந்த விதி ரேகை எவ்வளவுக்கு மெல்லியதாய் அமைந்திருக்கிறதோ அவ்வளவுக்கு மகத்தான பலனிருந்து வருகிறது. மெல்லிய ரேகையிருந்தால் இயற்கையாகவே எல்லாக்காரியமும் கைகூடி வரும். எந்தக்காரியத்தையும் சுலபமாய் சாதித்துக் கொள்வர். வாழ்க்கையில் கஷ்டம் அல்லது தடையேதும் இராது.

விதி ரேகை தடித்திருந்தால், அதற்குத் தக்கவாறு சிரமம் அதிகமென்பது அறியத்



தக்கது. விதி ரேகை துண்டுபட்டு, புள்ளி, புள்ளடி, சங்கிலி முதலியவை காணப்படில் வாழ்க்கை வெகுவாய் பாதிக்கப்படும். நிரந்தரமான வருமானமும் இராது.

சங்கிலிபோல விதி ரேகை அமைந்திருந்தால், வாழ்நாள் முழுவதும் மிக்க கஷ்டத்தைக் குறிக்கும். சங்கிலிபோல இருப்பது சொற்பமாயிருந்தால், அந்தக் கால அளவுக்குப் பிறகு நன்மையுண்டாகும்.

7. விதி ரேகையில் காணப்படும் குற்றங்குறைகளுக்கேற்றபடி கஷ்டங்கள் பலவிதமாயிருக்கும். அதி பாலியத்தில் காணப்படும் குறைகளுக்கு ஏற்றபடி அனுபவிப்பதற்கில்லையென்றாலும் அவைகள் நோயாக மாறிவிடும். இன்னும் பெற்றோர்களின் நிலைமையையும் குறிக்கும். விதி ரேகையின் ஆரம்பத்தில் எவ்விதக் குற்றமிருந்தாலும், தொடர்ந்த விதி ரேகை செம்மையாயிருந்துவிடின் கஷ்டம் தோன்றியும் தோன்றாததுபோல் மறையும்.

8.விதி ரேகையில் தீவுக்குறி காணப்படில் நன்மை தடைப்படும். தீவுக்குறி யோக்கியத் தன்மையின் சீர்கேட்டைக் குறிக்கும். பெண்களின் கையில் விதி ரேகையில் தீவுக்குறி காணப்படில் நெறி தவறியதைக் குறிக்குமெனச் சொல்லுகின்றனர். இன்னும் சிலர் பொருளாதாரத்தின் சீர்குலைவேயன்றி வேறன்று என்கின்றனர். மேல்நாட்டு ஆராய்ச்சிக்காரர் பொருள் நஷ்டத்தைத்தான் குறிக்கிறதென்று சொல்லுகின்றனர். ஒரு குழந்தையின் கையில் விதி ரேகையின் ஆரம்பத்தில் தீவுக்குறி காணப்படில் அது பெற்றோரின் செல்வ நிலைமையைப் பாதிக்கும்.


9. விதி ரேகையின் ஆரம்பத்தில் தீவும், ஆயுள் ரேகை ஆரம்பத்தில் அகன்று விரிந்து, சங்கிலி, வெட்டு, கிளை அல்லது தீவு ஏதேனும் இருந்தால் தேகாரோக்கியத்தைப் பாதிப்பதன்றிப் பொருள் வருவாயும் குறைந்து போவதைக் குறிக்கும்.

(தொடரும்)

## எப்பதான் திருந்துவினமோ?

பாராட்டுக்கள் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மனித இயல்பு. ஆனால் அந்தப் பாராட்டுக்கள் எம்மைத் தேடி வரவேண்டும். அதனை நாம் தேடிப்போகக் கூடாது. சிலர் தமக்குத் தாமே பொ(ப)ன்னாடைகள் போர்த்துவதும், தங்கப் பதக்கங்கள் போடுவதும் வாடிக்கையாகிச் செல்கின்றது.

அண்மையில் யாழ். நகரில் ஒரு விழா. போட்டிக்கு ஓடும் வாகனக் காரர்களின் திருவிழா. அந்த விழா அந்த நிறுவனத்தின் ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் கொண்டாடப்பட வேண்டியதொன்று. ஆனாலும் அதற்குள் ஒருவருக்கான பாராட்டு விழாவும் சேர்க்கப்பட்டது. பொன்னாடை போர்த்தல், தங்கப் பதக்கம் வழங்கல் போன்றன நடைபெற்றன. இத்தனைக்கும் பாராட்டப்பட்டவர் இன்னமும் பதவியிலிருந்து ஓய்வு பெறவில்லை.




மக்கள் பணத்தை அரசு - அமைச்சர்கள் - தான் வீணாக செலவு செய்து கொள்ளையடிக்கின்றனர் என்றால், இவ்வாறான சங்கங்களும் இப்போது வீணடிக்கத் தொடங்கிவிட்டன. சங்கத்துக்கு ஒவ்வொரு உறுப்பினரும் செலுத்தும் பணத்தில் சங்கத்தை உருப்படியாக செயற்படுத்துவதுதானே முக்கிய தேவை!

இதனைவிட குறித்த நபர் தியேட்டர்காரருக்கு வெகு நெருக்கமானவர். கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலில் அரச கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர். தியேட்டர்காரருக்கு விசுவாசத்தைக்காட்ட அவரையே விழாவுக்கு பிரதம விருந்தினராகவும் அழைத்திருந்தார்.

பி.ப. 2.30 மணிக்குத் தொடங்க வேண்டிய விழாவுக்கு, 4 மணிக்குத்தான் தியேட்டர்காரர் வந்து சேர்ந்தார். மற்றவையின்ர நேரத்தை வீணடிக்கிறதில இவர் கெட்டிக்காரர்தான். ஐயர் வரும் வரையில் அமாவாசை காத்திருக்காது, ஆனால் தியேட்டர்காரர் வரும் வரையில் இவை காத்திருந்தன.

எப்பத்தான் திருந்துவினமோ ?

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் சென்று அகதி அந்தஸ்துக் கோருபவர்களைக் கடலில் வைத்துத் திருப்பி அனுப்புவது மனிதக் கடத்தலைத் தடுப்பதற்கு வினைத்திறனான நடவடிக்கையாக அமையும் என ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் திசேர சமரசிங்க கோரியுள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக ஆஸ்திரேலியாவில் தஞ்சம்கோரிப் படகுகள் மூலம் வரும் அகதிகள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என அந்த நாட்டின் குடிவரவு அமைச்சர் கிறிஸ் பிறவுண் தெரிவித்துள்ளார். படகில் ஆஸ்திரேலியா போகும் ஈழத் தமிழர்களின் உயிர் கடலில் போனாலும் அதனைப் பொருட்படுத்தாது ஈழத்தமிழர்கள் தொடர்ந்தும் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் இறங்கிக் கொண்டிருக்கின்றனர். அந்தச் செய்தியை உதயன் வெளியிட்டு வருவது படகு மூலம் வெளிநாடு செல்வோரை தடுப்பதற்கான ஒரு முயற்சி என்றே தோன்றுகிறது..

எனவே கடல் வழியாக உயிருக்கு ஆபத்தானநிலையில் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கு உதயன் முழுமையான விளக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் ஆபத்தான கடல்வழிப் பயணத்தினை தடுக்க முடியும். இவ்வாறு போயின் எத்தனை பேர் கடலில் மாண்டு போவார்களோ தெரியாது. [illegible]ரும் பார்க்கும் ஒரு [illegible]யால் கடல் வழியால் வெளிநாடு செல்பவர்களுக்குத் தொடர்ந்து அறிவுரை கூறவேண்டும்.

நிமல், கரவெட்டி.

★ ★ ★

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழக முன்னாள் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி பல முகங்களைக் காட்டிக் கொண்டிருக்கிறார் என்பது அவர் தெரிவிக்கும் கருத்துக்களில் இருந்து தெரிகிறது. தான் ஆட்சியில் இருக்கிறபோது ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக ஒரு கருத்தையும் தான் ஆட்சியில் இல்லாதபோது மறு கருத்தையும் வெளியிட்டு வருகிறார்.

அதாவது தமிழீழம்தான் ஈழத்தமிழர்களுக்கு ஒரு தீர்வாக அமைய முடியும் என்றுதான் ஆட்சியில் இல்லாத போது சொல்லும் கருணாநிதி, தான் ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் ஈழத்தமிழர் பிரச்சினையைக் கண்டுங் காணாமல் இருந்துள்ளார் என்பது கருணாநிதியின் உண்மை வெளிப்பாடு.

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக மேலும் இவர் பல கருத்துக்களை தனது அரசியல் இலாப நோக்கில் வெளியிடுவார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே தமிழர்களுடைய ஒரே பத்திரிகை உதயன் கருணாநிதி பற்றிய முழுமையான செய்திகளை வெளியிட வேண்டும். அப்பொழுதுதான் இவருடைய போலி முகம் வெளிப்படுத்தப்படும். கருணாநிதி பற்றிய செய்திகளை வெளியிடும் உதயன் மேலும் தமிழீழ பொய்க் கனவில் இருக்கும் கருணாநிதியின் கபட நாடகத்தையும் வெளியிட முன்வரவேண்டும்.

கிருபன்,வ[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நுகர்வோர் கல்வியின் தேவை



யோ.அ.ஜெறோஷன்
புனித கென்றியரசர் கல்லூரி, இளவாலை.

தமது சொந்தத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்குடன் பொருள்கள் சேவைகளை கொள்வனவு செய்கின்ற அனைவரையும் நுகர்வோர் என அழைப்பர். மக்கள் அனைவரும் தமது தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக பொருள்கள், சேவைகளை கொள்வனவு செய்வதில் ஈடுபடுவதனால் மக்களே நுகர்வோர் ஆவர். இன்னும் கூறுவோமானால் நாட்டினுடைய அல்லது உலகினுடைய மக்கள் தொகையே நாட்டின் நுகர்வோராக அல்லது உலகின் நுகர்வோராக கருதப்படும். நாம் பொருள்கள், சேவைகளை கொள்வனவு செய்வதற்கு காரணம் பயனைப் பெறுவதற்கு ஆகும். பயன் என்பது மனத் திருப்தியைக் குறிக்கும்.

நுகர்வோர் செலவு செய்கின்ற பணத்திற்கு சமனான திருப்தியினை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கியதே நுகர்வோர் பாதுகாப்பாகும். அதாவது பொருள்கள், சேவைகளை கொள்வனவு செய்தல், அவற்றைப் பயன்படுத்தல், பாதுகாத்தல் தொடர்பாக பாதிப்புகள் ஏற்படா வண்ணம் பாதுகாப்பதற்கான செயற்பாடு ஆகும். நுகர்வோரை பாதிப்புக்கு உள்ளாக்கும் தரப்பினர்களாக உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் போன்றோரைக் குறிப்பிட முடியும்.

உற்பத்தியாளரால் நுகர்வோருக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகளாக:- தரம் குறைந்த மூலப்பொருள்களைப் பயன்படுத்தி தரக் குறைவான பொருள்களை உற்பத்தி செய்தல், நிறை அளவுகளைக் குறைத்து பொதி செய்தல், தமது பொருள்களின் விலையினை உயர்வாக நிர்ணயித்தல், பொருள் பற்றி பொய்யான போலியான தகவல்களை வழங்குதல் போன்றவை ஆகும். வியாபாரிகளால் நுகர்வோருக்கு ஏற்படும் பாதிப்புகளாக :- பொருள்களின் நிறை அளவுகளில் மோசடி செய்தல், கட்டுப்பாட்டு விலைகளை மீறி உயர்வான விலைக்கு பண்டங்களை விற்பனை செய்தல், பொருள்களின் பாவனைக் காலத்தை மாற்றுதல், பொய்யான தகவல்கள் வழங்குதல் உண்மைகளை மறைத்தல், கலப்படம் செய்தல், கள்ளக்கணக்கு வைத்தல் போன்றவை ஆகும்.

இலங்கையில் நுகர்வோரை பாதுகாப்பதற்கு அரசினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளாக:-

✱ சட்டங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்தல்

(உ+ம்) நிறுத்தல் கட்டளைச் சட்டம்

இலங்கை தரப்படுத்தல் நிறுவனச் சட்டம்

நுகர்வோர் அலுவல்கள் பற்றிய அதிகாரச் சட்டம்

✱ நிறுவனங்களை உருவாக்கி செயற்படுத்தல் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகளவில் தேவைப்படுவதற்கான காரணங்களாக:-

இலங்கை திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிப்பதனால் பல வகையான பொருள்களும் இறக்குமதி செய்யப்படுதல், பொருத்தமற்ற உற்பத்திகள் மேற்கொள்ளப்படுதல், வணிகர்களிற்கிடையே வணிக ஒழுக்கம் காணப்படாமை, இலங்கை மக்களிற்கு நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான அறிவு குறைவாக இருத்தல் போன்றவை ஆகும்.

தரமான பொருள்கள் சேவைகளை இனங்கண்டு கொள்வனவு செய்தல், பேரம் பேசி கொள்வனவு செய்தல், கொள்வனவு செய்கின்ற பண்டங்களுக்கு பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுதல், நுகர்வோர் பாதுகாப்பு விடயங்களை ஓரளவேனும் அறிந்திருத்தல் போன்றன நுகர்வோரது கடமைகள் ஆகும். நுகர்வோர்களது உரிமைகள் பற்றி அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப் கெனடியால் முன் வைக்கப்பட்டவை:-

✱ பாதுகாப்பை பெறுவதற்கான உரிமை

✱ தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை

✱ தெரிவு செய்வதற்கான உரிமை

✱ செவிமடுப்பதற்கான அல்லது கவனத்தை ஈர்ப்பதற்கான உரிமை போன்றவையாகும்.

இன்னும் சர்வதேச நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சினால் முன் வைக்கப்பட்டவை.

✱ அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உரிமை

✱ நுகர்வோர் கல்விக்கான உரிமை

✱ இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமை

✱ ஆரோக்கியமான, சுகாதாரமான சூழலில் வாழ்வதற்கான உரிமை போன்றவை ஆகும்.

நுகர்வோர் தாம் கொள்வனவு செய்கின்ற பொருள்கள் சேவைகள் தொடர்பாக விலை, தரம், அளவு போன்ற விடயங்களில் விழிப்புணர்வுடன் செயற்படுதல் வேண்டும்.

பொருள்கள், சேவைகளின் பாவனையாளர்களுக்கு போதுமான பாதுகாப்பை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து நடைமுறைக்கு கொண்டு வந்த சட்டமே 2003 ஆம் ஆண்டின் 9ம் இலக்க பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை சட்டமாகும். இந்தச் சட்டத்தை நிர்வகிக்கும் அமைச்சராக வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சு காணப்படுகின்றது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் பாவனையாளர்களை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள அமைப்பு பாவனையாளர் பாதுகாப்பு அலுவல்கள் அதிகார சபை ஆகும். இந்த அதிகார சபையின் கட்டமைப்பாக வர்த்தகம், நிர்வாகம், சட்டம், பொருளாதாரம், போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் என கருதப்படுகின்ற பத்து பேருக்கு குறையாத உறுப்பினர்களையும், தலைவர் ஒருவரையும் இவ் அதிகார சபைக்கு அமைச்சர் நியமனம் செய்வார். இவர்களுடைய பதவிக்காலம் மூன்று ஆண்டுகளாக வரையறுக்கப்பட்டிருக்கும்.

இந்த அமைச்சு வியாபாரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக கொண்டுள்ள அதிகாரங்களாக

✱ விலை குறித்தல், சுற்றுறை இடுதல், பொதி கட்டுதல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், போன்ற செயற்பாடுகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்

✱ நுகர்வோரை பாதிக்கக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடும் வணிகர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

✱ நுகர்வோரைப் பாதிக்கக்கூடிய உற்பத்தி, விற்பனை, களஞ்சியப்படுத்தல், இறக்குமதி தொடர்பாக விசேட கட்டளைகளைப் பிறப்பித்தல்

✱ நுகர்வோர் பாதுகாப்பிற்கு பொருள், சேவைகளின் தரம் தொடர்பாக கட்டளைகள் பிறப்பித்தல்

✱ அதிகார சபையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பொருள்கள் சேவைகளை வழங்காத வணிகர்கள் பற்றி முறைப்பாடுகள் கிடைக்கின்றபோது அவர்களுக்கு எதிராக விசாரணை செய்தல் போன்றவை ஆகும்.

(இவை அடிப்படையே)

# அனுமன் வாயும் ரம்புட்டானும்

மல்வானையை விடவும் இப்போது யாழ்ப்பாணத்தில்தான் றம்புட்டான் பழங்கள் அதிகம். எந்தவீதிக்குப் போனாலும், நாலைந்து பேர் சிவப்பு வர்ண றம்புட்டான் பழங்களை மலைபோல குவித்து வைத்து ''நூறு ரூபாவுக்கு 20 பழம்'' என்று கூவிக்கொண்டிருப்பதைக் காண முடியும். சில இடங்களில் றம்புட்டானுக்குத் துணையாக மங்குஸ்தானும் விற்பனைக்குப் பரப்பப்பட்டிருக்கும். அதைவிட இப்போது யாழ். நகரப்பகுதியில் உள்ள தார் வீதிகளின் கறுப்புநிறம் தொலைந்து, சிவப்பு புள்ளி வைத்ததைப் போன்று றம்புட்டான் தோல் அல்லது கோதுகள் நீக்கமற நிறைந்துள்ளன.

வழமையை விடவும் இம்முறை றம்புட்டான் பழங்களின் விளைச்சல் -மல்வானை போன்ற றம்புட்டானுக்கு பிரசித்தமான பகுதிகளில்- அமோகம் என்பதால் , முன்னைய காலங்களைக் காட்டிலும் அதன் விலை ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளதுடன், றம்புட்டான் பழங்களின் வருகையும் அதிகரித்துள்ளது. இந்த சீசன் கால வியாபாரத்தில் குறைந்த காலத்தில், லாபமீட்ட முடிவதால் பலரும் களத்தில் குதித்துள்ளனர்.

இப்போது சிக்கல் என்னவென்றால், ஏற்கனவே பழவியாபாரங்களில் -கடைகளில்- ஈடுபட்டவர்களை விடவும் அதிகளவு புதுமுகங்கள் றம்புட்டான் வியாபாரத்தில் இறங்கியுள்ளதால், போட்டி கூடியுள்ளது. எனவே புதிய விற்பனைத் தளங்களைக் கண்டுபிடிக்கவேண்டியது தேவை. எனவே மக்கள் அதிகமாக நடமாடுகின்ற, அதேசமயத்தில் இதுவரை வேறெந்த றம்புட்டான் வியாபாரியும் கால்பதிக்காத இடங்களை இவர்கள் தேடி, தமது தற்காலிக கடைகளை அமைத்துக் கொள்கின்றனர்.

## கோணல் கோலங்கள்

இப்படித் திடீரென முளைத்த றம்புட்டான் விற்பனைத்தளமொன்றில் போவோர், வருவோரையெல்லாம் ''வா! வா!!'' என்று சுண்டியிழுத்துக் கொண்டிருந்தன சிவப்பு வர்ணப்பழங்கள். வீதியால் பயணிப்போர் ஒருமுறை அதனைப்பார்க்காமல் செல்வதே அரிது. அப்போது திடீரென உறுமிக்கொண்டு ஒரு 'படி' ரக வாகனமொன்று அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தது. ஓரமாக இருந்த மரநிழல் பக்கமாக நிலையெடுத்துக் கொண்ட அந்த வாகனத்தின் பின்பக்கம் திறந்து பச்சைத் தென்னோலையால் செய்யப்பட்ட குட்டான்களில் நிரம்பி வழியும் றம்புட்டான்கள், ஏற்கனவே வீதியோரமாக விற்பனையாகிக் கொண்டிருந்த றம்புட்டான் பழங்களைப் பார்த்துச் சிரித்தன. முன்னவர் 100 ரூபாவுக்கு 20 பழங்களையே விற்றுக் கொண்டிருக்க, 'படி' வாகன விற்பனையாளர்கள் ''100 ரூபாவுக்கு 25 பழம்'' என்று கூவிக்கொண்டு 'மலிவு' என்ற ஆயுதத்தைக் கையிலெடுக்க, வாகனத்தைச் சனக்கூட்டம் மொய்க்கத்தொடங்கியது.

ஏதாவது பொருள் மலிவாகக் கிடைப்பதாக இருந்தால் அது தேவையா, இல்லையா?, எவ்வளவு அளவில் தேவை? என்றெல்லாம் எம்மவர்கள் யோசிப்பதே இல்லையே!. அடித்துப் பிடித்து அதனை வாங்கிவிட்டுத்தான் 'ஏன் வாங்கினோம்?' என்று யோசிப்பவர்கள் அநேகர்.

கூட்டம் கூடிக்கொண்டே போனதால், வாகன விற்பனைக்காரர் தமது கிளை நிலையத்தை உடனே திறக்கவேண்டிய நிலை. செல்போனில் ஒரு தகவல் பறக்க, சில நிமிடங்களில் இன்னொரு 'படி' வாகனம் றம்புட்டான்களோடு வந்தது. உடனடியாக அதிலிருந்த பழங்கள் வீதியோரமாக ஒரு பிளாஸ்ரிக் விரிப்பில் கொட்டப்பட, அடுத்தநொடியே அங்கு றம்புட்டான் குன்று ஒன்று எழுந்தது. அந்தக்குன்றும் மணித்தியாலங்களிலேயே, கரைந்து போனது.

**ஓடுகாலி**

''பாத்தியே, மற்றவங்கள் எண்டால் நூறு ரூவாக்கு 20 பழத்தை வாங்கி காசைக்கரியாக்குவாங்கள். நானெண்டபடியால இப்படி மலிவாக என்ர கெட்டித்தனத்தால வாங்க முடிஞ்சது'' என்று தம் வீரப்பிரதாபங்களை அளப்பதற்காக , சொப்பிங் பைகளில் பிதுங்கும் பழங்களோடு வீடுகளுக்குப் பலரும் புறப்பட, சனக்கூட்டமும் குறையத்தொடங்கியது. இந்த மலிவுவிலை றம்புட்டானைப் பெற்ற பயனாளிகளில் ஒருவர் வீட்டுக்கு கொண்டு சென்று பிள்ளைகளிடம் சொப்பிங் பையை நீட்டினார். அவர்கள் ஒவ்வொருவரும் கை நிறையப் பழங்களை அள்ளிக் கொண்டு ஓடினார்கள். பின்னர் படபடவென்று, உரோமம் போன்ற மைப்புடன் இருக்கும் தோலை கைகளால் அகற்ற முயன்று, தோற்றுப்போய், கடைசியில் 'பல்லே துணை' என்ற முடிவுடன், வாயால் கடித்து, வெளிப்புறத்தோலை அகற்றிவிட்டு, வெண்ணிற உருளையான சதைத்துண்டங்களை உமியத்தொடங்கினார்கள். கைகளில் எடுத்துச் சென்ற பழங்கள் அத்தனையையும் கபளீகரம் செய்த பின்னர்தான் அவர்கள் ஓய்ந்தார்கள்.

அடுத்தநாள் காலை அந்த வீட்டில் இருந்த பிள்ளைகள் 'அனுமரின் அவதாரங்கள்' போல வீங்கிய வாய்களோடுதான் நித்திரைப்பாயிலிருந்து எழுந்தார்கள். குழந்தைகளின் உதடுகள் தடித்து வலிக்கத் தொடங்கியிருந்தன. கூடவே ஒரு விதமான கடியும் ஏற்பட்டிருந்தது. உடனடியாக அருகில் இருந்த வைத்திய சாலைக்கு கொண்டு சென்றார்கள். உதட்டுக்கு ஒவ்வாத ஏதோ ஒரு பொருள் வாயில் பட்டதாலேயே இவ்வாறு வீக்கம் ஏற்பட்டிருப்பதாக மருத்துவர் தெரிவித்தார்.

அநேகமாக முதல்நாள் மாலை குறித்த சிறுவர்கள் றம்புட்டான் பழத்தை உண்பதற்காக அதன் தோலை வாயால் கடித்தபோதே, உதட்டுக்கு ஒவ்வாத பொருள் பட்டிருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

போட்டி அதிகரித்துள்ள காரணத்தால் வியாபாரிகள், விற்பனை அதிகமுள்ள இடத்தைத்தான் தேடுகிறார்களே தவிர அவை சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ற இடங்களா என்பதைக் கருத்திற்கொள்வதில்லை. யாழ். நகரில் பெரும்பாலும் கழிவுநீர் வழிந்தோடும் வடிகால் கரையோரமாகவே தரைகளில் றம்புட்டான் பழங்கள் பரப்பப்பட்டு, விற்கப்படுகின்றன. ஏனைய இடங்களிலும் பிளாஸ்ரிக் விரிப்புகளில் கொட்டப்பட்டிருக்கும் றம்புட்டான் பழங்களில், ஓயாமல் வீசுகின்ற காற்று புழுதியை வாரியிறைக்கத் தயங்குவதேயில்லை. இதன்போதும் உடலுக்கு ஒவ்வாத, நோய்களை ஏற்படும் பொருள்கள் புழுதியோடு கலந்து, றம்புட்டான் முதலான பழவகைகளில் கலக்கக்கூடும். ஆகவே சிறுபிள்ளைகளுக்கு நன்றாகக் கழுவிய பின்னரே இத்தகைய றம்புட்டான் பழங்களை உண்ணக்கொடுக்க வேண்டும். அத்தோடு சுகாதாரப்பிரிவினரும் இத்தகைய றம்புட்டான் விற்பனைத்தளங்களில் தங்கள் கடைக்கண் பார்வையைச் செலுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 30 ★ 10 ★ 1953

உதிர்வு 18 ★ 07 ★ 2000

அமரர் கந்தசாமி தர்மேசன்

(திட்டமிடல் உதவியாளர், வலிகாமம் கல்வி வலயம்.
மாவட்ட உதவிச்சாரண ஆணையாளர், காங்கேசன்துறை).

தர்மேசன் என்றதோர் தகவுடைய பேர்தாங்கி
சர்வமும் போற்றிடவே ஆசானாய் மிளிர்ந்திருந்து
அர்ப்பணிப்போடு எம்மை ஆளாக்கி வைத்த தந்தை
சொர்க்கத்தை அடைந்தாண்டு பன்னிரண்டை
நினைவுகூர்வோம்

"தரன் இல்லம்"
தேவாலய வீதி,
மூளாய், சுழிபுரம்.

பிரிவால் துயருறும்
மனைவி, முத்தரன்கள்.

((20888) (18-6-7)

## 4 வயது பாலகன் விபத்தில் காயம்

ஒழுங்கையில் இருந்து சைக்கிளில் வந்த பெண் பிரதான வீதியில் தீடிரென ஏறியபோது ஏற்பட்ட விபத்தில் நான்கு வயது பாலகன் காயங்களுக்கு உள்ளகிய சம்பவம் நேற்றுக் காலையில் சுன்னாகம் கந்தரோடை வீதியில் இடம் பெற்றது.

கந்தரோடை, பருத்தியோலை ஒழுங்கையால் வந்த பெண் பிரதான வீதியைக் கவனியாது சையிக்கிளில் கண் மூடித்தனமாக வந்து ஏறிய நிலையில் கந்தரோடை வீதியில் பாடசாலை மாணவன் மற்றும் சிறு பிள்ளையையும் எற்றி வந்த மோட்டர் சைக்கிள் சைக்கிளுடன் மோதியது. இதனால் நிலத்தில்விழுந்த மோட்டார் சைக்கிளில் இருந்த பாலகன் காயங்களுக்கு உள்ளாகியதுடன் பாடசாலை மாணவனும் சிறு காயங்களுக்கு உள்ளாகினார்.

(வ-86)


## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட "A" தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர்<br>#19, முருகேசர் ஒழுங்கை,<br>நல்லூர், யாழ்ப்பாணம்<br>தொ.பே : 021 2226944 | நல்லூர் பாம் சென்ரர்<br>கனகபுரம் வீதி,<br>கிளிநொச்சி<br>தொ.பே : 077 6225944 | சுட்டி பாம் சென்ரர்<br>வட்டுக்கோட்டை<br>தொ.பே : 077 8996085 |

(20259)(6-7-8)






LG Life's Good

புதிய LG 'ஒப்டிமஸ் L' வரிசை ஸ்மார்ட்போன்

ஸ்மார்ட்போனுக்கு இன்றே மாறுங்கள்

குறைந்த விலையில் உயர் தொழில்நுட்பத்துடனான ஸ்மார்ட்போன்

optimus L3

android

கொரியாவின் தொழில்நுட்பம்

ஈடிணையற்ற இதன் சிறப்பியல்புகள்

- 1500mAh நீடித்துழைக்கும் பற்றறி
- உயர் தொழில்நுட்பத்திலான அழகிய வடிவமைப்பு
- 800 MHz ப்ரொஸஸர்
- மைக்ரோ மெமரி காட் இன்றி களஞ்சியப்படுத்தும் வசதி (1GB வரையான உள்ளக மெமரி)
- 3MP கெமரா



ரூ. 24,990/-

இலவசம் 8 அழகிய வர்ண கவர்கள்

கிளிநொச்சி: 0212285411 • யாழ்ப்பாணம்: 0773279992
அங்கீகரிக்கப்பட்ட விநியோகத்தர்கள் விபரங்களுக்கு: 0772654598

Abans






# உங்களுக்கு சௌபாக்கியமான எதிர்காலம்

# 16.5%

| கால எல்லை | மாதாந்தம் | | வருடாந்தம் | | முதிர்ச்சியில் | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | வட்டி வீதம் | வ.வி.வீ | வட்டி வீதம் | வ.வி.வீ | வட்டி வீதம் | வ.வி.வீ |
| 1 | 15.75% | 16.94% | | | 15.75% | 16.94% |
| 3 | 15.85% | 17.05% | | | 16.00% | 16.99% |
| 6 | 16.00% | 17.23% | | | 16.25% | 16.91% |
| **12** | **16.25%** | **17.52%** | **16.50%** | **16.50%** | **16.50%** | **16.50%** |
| 24 | 16.50% | 17.81% | 16.75% | 16.75% | 17.00% | 15.76% |
| 36 | 16.75% | 18.10% | 17.00% | 17.00% | 17.25% | 14.91% |
| 48 | 17.00% | 18.39% | 17.25% | 17.25% | 17.35% | 14.08% |
| 60 | 17.25% | 18.68% | 17.35% | 17.35% | 17.50% | 13.40% |

சிரேஷ்ட பிரஜைகளுக்கு (55 வயதிற்கு மேல்) 1% மேலதிக வட்டி

ஒரு வருடகால நிலையான வைப்புகளுக்கு

நிலையான வைப்பு

CLC
கொமர்ஷல் லீசிங் & பினான்ஸ்

மேலதிக விபரங்களைப் பெற உங்களுக்கு சமீபமாகவுள்ள எமது காரியாலயத்திற்கு
அல்லது அழையுங்கள் - (011) 3 526526, (011) 4 526526, 0773-093093, 0777-558576

இல. 68, ... பம்பலப்பிட்டி
கொழும்பு - 04 பெக்ஸ் (011) 4526517, வெப் : www.clc.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரப் பிரசித்தி பெற்ற திவ்விய ஷேத்திரமான
# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோயில்



## தீர்த்தத் திருவிழா சிறப்பு மலர் - 18.07.2012

### ஆனந்தக் கோலம் காண வாரீர்



ஈழமணித் திருநாட்டின் மகுடம் போல் விளங்கும் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தில் முருக வழிபாட்டின் மேன்மையும் தொன்மையும் நிலைநாட்டப் பல முருகன் ஆலயங்கள் இருப்பினும் வரலாற்றுப் பெருமையும் தெய்வீகச் சிறப்பும் கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையே அமையப்பெற்றது மாவிட்டபுரம் கந்தசுவாமி திருக்கோயிலாகும். இந்தக் கோயிலில் வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா இன்று மிகவும் கோலாகலமாகவும் பக்தி சிரத்தையோடும் கீரிமலையில் நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். எனவே சைவ அன்பர்கள் அனைவரினதும் வாழ்வும் சிறக்க முருக்கப்பெருமானின் தீர்த்த உற்சவத்தை வரவேற்று வாழ்த்துகின்றோம்.

ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக்குருக்கள்

### பழைய பசுமை

பூவையரிருவரோடும், புடைசூழத்
தேவர்கள் அமரர்களுடனும் - புகழ்
மாவையில் கோயில் கொண்டு - மகிழ்
வரங்களருளும் முருகப்பெருமானைக் கவிக்
கோர்வையால் பல பாடல்கள் பாடிப்
பசுமையான பல நினைவுகளை மீட்டேன்
தேவைகளறிந்து தேடி வருமடியவர்க்கு
நிறைந்தவருள் புரிபவனே - உந்தன்
கோடியில் குடியிருந்த எந்தன் வேண்டுதல்
இந்தக்கிராமமும் பழைய பசுமை பெறவேண்டும்
ஆடியமாவாசையில் கீரிமலையில் தீர்த்த
மாடி அருள்பாலிக்கும் ஆறுமுகப் பெருமானே!

- இ.ஜெ.பாலன், விமங்காமம் (மயிலிட்டை)

### மாவை முருகப் பெருமானின் தீர்த்த விழாவைத் தரிசிக்க வாரீர்

மாவை முருகப் பெருமானுக்கு இன்று தீர்த்தத் திருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. முரு கப் பெருமானின் திருவருள் பெருமை அனந்த மானது. அருணகிரி நாதரை "வாக்கிற் கருண கிரி" என்று போற்றப்படுகின்றதை அடியார்கள் யாவரும் அறிவர். முருகன் பெரும்புகழைப் பதினாறாயிரம் 'திருப்புகழ்' என்ற சந்தக்கவிமூலம் பாடிப் புகழ்ந்தவர், தற்பலங்காரம், கந்தரனு பூதி, திருவகுப்பு, கந்தரந்தாதி, வேல் விருத்தம் முதலிய பாடற் தொகுதிகள் பாடிப்போற்றியவர். இவர் தமது கந்தரலங்காரப் பாடலினால் பின்வருமாறு முருகனை வாழ்த்துகிறார்.

சருமான் மருகனைச் செம்மான் மகனைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற் கைக் கோளனை வானமுய்யப்
பெருமா வினைச் செற்ற போர் வேலசாக் கன்னிப்பூகமுடன்
தருமா மருவு செங் கோடனை வாழ்துகை சால நன்றே எனத் துதிக்கிறார்.

மாவை முருகன் தேர் உற்சவத்தை அடுத்து கீரிமலைக்கு தீர்த்த உற்சவத்தன்று சுவாமிகள் வலம் வருதல் ஒருகாலத்தில் நடைபெற்றது. வாழ்வு பெற்ற வல்லி மாருதப்புரவீகவல்லியின் மாவிட் டபுரம் கந்தசுவாமி கோயில் காலம் ஏழாம் நூற்றாண்டு என்பது வரலாறு.

வரலாற்றுப் பெருமையுடைய மாவைக் கந்தன் திருத்தலம் புதுமைக்கும் புதுமையாக பல திருப் பணி வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. எனவே இன்று நடைபெறும் தீர்த்த விழாவில் மாவை முருகப் பெருமானைத் தரிசித்து வழிபாடு செய்து உய்தியடைய திருவருளைப் பிரார்த்திப்போமாக.

- மாவை ஆதீன முதல்வர்

### இயற்கையை உடலாகக் கொண்டு உயிர்களைப் பேணுபவன் முருகன்

அழியா அழகினை முருகு என்று அழைத்தனர் நம்முன்னோர்கள். "இயற்கை மணமும் மாறா இளமையும் கடவுள் தன்மையும் அழியா அழகும், எல்லாப் பொருளையும் கடந்தொளிரும் தன்மையும்" இறைவனின் இயல்புகள். இவ்வியல்புகள் அமைந்த ஒருவனாக முருகனையே தமிழ் மக்கள் கண்டு வணங்கி வருகிறார்கள். முருகை உடையவனே முருகன். அழகின் உடல் இயற்கை. இயற்கை அன்னையின் அழகே அழியா அழகு, அதுவே முருகு என்னும் பேரழகு ஆகும். இவ்வழகே பழந்தமிழர் போற்றிய கைபுனைந்தியற்றாக் கவின்பெரு வனப்பாம் முருகன்.



அழகு இல்லையேல் வாழ்வு எது? ஒருவனது வாழ்வு அவனது அழகையே பொறுத்து நிற்கிறது. உலகிலுள்ள உயிர்கள் எல்லாம் உடல் நலமுற்று இன்பம் துய்த்து வாழ்தல்வேண்டும் என்னும் பேரருளால் முருகன் இயற்கை வாயிலாக அழகை உதவுகிறான். திங்களாக அமுதம்பொழிந்து உலகுக்கு இன்பம் ஊட்டுகிறான். மலையாக நின்றும், ஆறாக ஓடியும் காடாக விளங்கியும் கடலாக ஒலித்தும், உடலாக உடனிருந்தும் உயிர்களைப் பேணி வருகிறான் முருகன். குமரனை மனமொழி மெய்களால் தொழுவோர் என்றும் குமரனாயிருப்பது இயல்பே. பண்டைத் தமிழ் நாட்டவர் இயற்கையோடு முரண்படாத வாழ்வு நடத்தி இயற்கை அழகாம் முருகனை வழிபட்டமையால் அவர்கள் இளமை இன்பம் நுகர்ந்து வந்தனர்.

பழந்தமிழர் தாம் தொழுத கடவுளை அழகுப்பொருளாகவே கொண்டனர். சிவனைச் சொக்கன் (அழகன்) எனப் போற்றினர். "அழகனே! ஆலவாயில் அப்பனே அருள் செய்வாயே" என்பது அப்பர் அமுதவாக்கு. "அலவலமை தவிர்ந்த அழகன்" என்பது பெரியழ்வார் பைந்தமிழ்.

இயற்கையை உடலாகக்கொண்ட உயிராக முருகன் திகழ்கிறான். முருகு என்ற சொல்லில் மூன்று உகரங்கள் உள்ளன. அகர உகர மகரம் எனவரும் மூன்றில் அகரம் படைத்தல் (சிருஷ்டி), உகரம் காத்தல் (ஸ்திதி), மகரம் அழித்தல் (சம்காரம்) என்பவற்றைக் குறிக்கும், ஆகவே உகரம் உயிர்களைக் காக்கிறது. உயிர்களுக்கு மூன்று சுகங்கள் வேண்டும். அவை முறையே இகம், பரம், வீடுபேறு என்பன, மூன்று நலன்களையும் மூன்று உகரங்கள் அளிக்கும் பெற்றியை முருக என்னும் சொல்லில் காண்கிறோம்.

சங்க நூல்களில் முருகனின் தொன்மையைக் காண்கிறோம். தொல்காப்பியத்தில் முருக வழிபாடு குறிப்பிடப்பெறுகிறது. சேயோனின் செவ்விய வழிபாடு அன்றுமுதல் இன்றுவரை தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது. ஒவ்வொரு காலத்தும் முருகன் அடியார்கள் அவதரித்து முருக வழிபாட்டை முறைப்படுத்தி மக்களுக்கு வழிகாட்டி வந்துள்ளனர். பல்வேறு நூல்களில் முருகன் தொன்மையும் வழிபாடும் விளக்கப்பட்டுள்ளன. வடமொழியிலே "சுவாமி" என்ற சொல் முருகனுக்கே உரியது ஆகும்.

இவ்வுலகுக்கு எந்நாளும் அருள் புரிவதற்காக வெளிப்பட்ட ஒரு மின்னல் சக்தியே முருகன் "ஸ்கந்த" என்ற வடமொழிச் சொல்லுக்கு "வெளிப்படுதல்" என்று பொருள் மேகத்திலிருந்து மின்னல் வெளிப்படுவது போன்று சிவஜோதியிலிருந்து வெளிப்பட்ட ஆறு பொறிகள் ஆறுமுக சுவாமியாகி ஸ்கந்தன் எனப் பெயர் கொண்டது. ஆகவே சிவசக்தி ஜோதியில் ஜனித்தபேரொளிப் பிழம்பாக முருகன் திகழ்கிறான். அவன் பரம பராக்கிரமசாலி, பேரருட் சக்தி வடிவினன். ஞானபலமும் முருகனுக்கே அதிகம் என்று காட்டவே சிவபெருமானும் முருகவேளிடம் உபதேசம் பெற்றுக் கொண்டார்.

தீப்பொறியாகத் தோன்றி வானிலிருந்து வாயுவால் சுமந்துவரப்பெற்று கங்கையில் விடப்பெற்று, சரவணப்பொய்கையில் வளர்ந்த முருகன் தீ, வான், வாயு, நீர், பூமி என்னும் ஐம்பூதத் தொடர்புடையவனாகத் திகழ்கிறான். நான்கு திசைகள் மற்றும் மேலுலகம், கீழுலகம் என்னும் ஆறு பக்கங்களும் அவன் கருணைபொழிகின்றதால் அவன் ஆறுமுகன் என்று போற்றப்படுகிறான்.

"நமசிவாய" என்னும் திருவைந்தெழுத்துடன் பிரணவமும் சேர்ந்து ஆறு திருமுகமாகக் கொண்டு திகழ்கிறான் முருகன்.

ஓம் எனப்படும் குடிலையே ஒப்பிலா முருகன்
மாமுகத்துள்ள ஒன்றாகும் என்பது கந்தபுராணம்.

வேல் அருள் உருவம் கொண்டது என்பதை அங்கியின் வடிவம் நீக்கி அருள் உருக்கொண்டு" என்று கந்தபுராணத்தில் கச்சியப்பர் கூறுவார். திருவருள் சக்தி வடிவான வேல், முருகன் திருக்கரத்தில் ஒளிர்கின்றது. அது தங்கவேல், மாணிக்கவேல், மரகதவேல், குழந்தைவேல், சிங்காரவேல், இரத்தினவேல், வெற்றிவேல், சண்முகவேல், கதிர்வேல், முத்துவேல், அருள்வேல், முருகவேல்,சந்தரவேல், இராஜவேல், வீரவேல் என்றெல்லாம் போற்றப்படுகிறது. வேல்வகுப்பு, வேல்விருத்தம் வேல் அழங்காலம் முதலிய நூல்கள் வேலின் பெருமையைச் சாற்றுவன. 'மாமயிலோன் வேல்பட்டழிந்தது வேலையும் சூரனும் வேற்பும்' என்று கந்தரலங்காரத்தில் அருணகிரியார் பாடுவார். முருகன் வேல்பட்டவுடன் சூரபத்மன் சூழொணாதது ஆயினும் அடியவர்க்கு எளியவன் என்பதை வள்ளி தத்துவத்தில் காட்டுகிறான் முருகன்.

முருகன் என்றவுடன் அவனது மயிலும் வேலும் நம்கண்முன் நிற்கின்றன. முருகனுக்கு மூன்று மயில்கள் உண்டு. சூரபதுமனை அழிக்கும் முன்னரே முருகனுக்கு மயில் வாகனம் இருந்தது. இந்திரனும் மயிலாக முருகனை தாங்கினான். சூரன் அழித்தபின் அவனது ஒருபாதி மயிலாகியது. மயில் தன் அழகால் யாவரையும் மயக்கவல்லது. எனவே அதனை மாயை என்பர். சேவல் ஊர்த்துவமாயை, மயில் அதோ மாயை, சேவல் நாதத்துவம் எனில் மயில் விந்துதத்துவம், நாதம் ஒலி வடிவினது, விந்து ஒளிவடிவினது, விந்துதத்துவம் ஆகிய மயில் கண்கவரும் ஒளியுடையதாய்ப் பலவகை திறன்களைக்கொண்ட மயிலைப் பிரணவமந்திரம் எனக் கொள்ளலாம். தோகையை விரித்து ஆடும் மயிலின் தோற்றம் ஓங்காரம் போல ஒளித்தல் பற்றியே "ஓங்காரத்துள்ளே முருகன் உருவங்கண்டு தூங்குதல் வேண்டும்" என்று கந்தலரங்காரம் கூறுகிறது. மயிலின் வடிவம் மந்திரரூபமாக விளங்குவதை

"ஆன தன் மந்த்ர ரூபநிலை கொண்டது
ஆடும் மயில் என்ப தறியேனே" (வாதினை) என்று அருணகிரியார் திருப்புகழிலே உணர்கிறார்.

முருகனின் சேவற்கொடியின் மாண்பினை யாரால் விளக்க முடியும்? சேவல், நம் உயிர்க்குக்காவல் "ஆடும் பரிவேல் அணிசேவல் எனப்பாடும் பணியாய் அருள்வாய்" என்று வேண்டியே கந்தரனுபூதியைத் தொடங்குகிறார் அருனை வள்ளல், முட்பதத்தையும், காளவாயுதத்தையும், நாகாயுதத்தையும் கொண்ட சேவல் தனது சிறகு அடித்துக் கொள்ள சலதி கிழிந்து உடைப்பட்டது. அண்டகடாகம் உதிர்ந்தது. உருபடலம் குன்றமும் மாமேரு வெற்பும் இடிபட்டன என்கிறார் அருணகிரிநாதர், ஏழு உலகமும் அதிரும்படி ஒலிசெய்யும் சேவல் ஏழு உலகமும் வாழ்வதற்குத் துணைபுரிகின்றது. சிவஞானவடிவாகவே சேவல் விளங்குகின்றது. முருகன் சேவற் கொடி ஏந்தி நம்மையெல்லாம் சிவஞானப் பேரொளியில் துய்க்கச்செய்தருளுகின்றார்.

- மஹாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசாமிக் குருக்கள், ஆதீனகர்த்தாவும் பிரதம குருவும்

★★★★★★★★★★★★★★★★★★ விளம்பர அனுசரணை ★★★★★★★★★★★★★★★★★★

24 மணி நேர எரிபொருள் நிரப்பு சேவை
சுப்படீசல், சுப்ப பெற்றோல் N.2
வாகனங்களுக்கான காற்றடிக்கும் சேவை.
ராஜன் உமையாள் எரிபொருள் நிரப்பும் நிலையம் 21, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
லிவபூல் நேவிக்கேசன் எரிபொருள் நிரப்பும் நிலையம் 128, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
கதிரேசம்பிள்ளை எரிபொருள் நிரப்பும் நிலையம், 207, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

நளின் Information Technology

கணினி, கணினி உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நம்பகமான ஸ்தாபனம்
021 2221166, 077 7667 974
195/4, Parameswara Junction, Jaffna, www.nit.Lk

கிருபா லேணர்ஸ்
(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை). தற்போது எழுத்துப் பரீட்சைக்கு உங்களைத் தயார்ப் படுத்துவதற்காக முற்றிலும் வித்தியாச மான முறையில் பயிற்சி வகுப்புகள்.
021 224 2022, 071 454 6956, 077 722 5292

பாண், பனிஸ் வகைகள், கேக் வகைகள், பிஸ்கற் வகைகள், பிறந்தநாள் நிகழ்வு விழாக்களுக்கான கேக் வகைகள், மிக்ஷர், குளிர்பான வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்
குமார் பேக் ஹவுஸ்

ஐஸ்கிறீம் வகைகள், குளிர்பானங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள
அம்பிகா கிறீம் ஹவுஸ்
மலைவேம்படி, அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

கந்தன் ஸ்ரோர்ஸ்
மெயின்வீதி, பண்டத்தரிப்பு.
021 300 2770
கே.கே.எஸ்.வீதி, மாவிட்டபுரம்.
0772658030

Seelan
Aluminium Fitting
DOHA, DUBAI இல்
10 வருட அனுபவமுள்ளவர்
No: 54, K.K.S Road,
Kokuvil Junction.
Tel: 021 4902561, 077 8050918

தீர்த்தமாடி கீரிமலை
வீற்றிருக்கும் மாவை
கந்தப்பெருமானே
நீரேறும் விழிகளுடன் இன்று
ஆடும் எங்களுக்கு சீரான
வாழ்வுதனைத் தருவாயே
க.கு. கந்தையாப்பிள்ளை அன்சன்ஸ்
318, மருத்துவனை வீதி, யாழ்ப்பாணம்.

சாரங்கா நகைமாடம்
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 6972,
Fax : 021 222 8869
சாரங்கா நாணயமாற்று சேவை
15/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 6972

HOTEL ROLEX
ஹொட்டல் றொலெக்ஸ்

(J/1273) (2-6-4)

### மாவை முருகன் பதம் தொழுவோம்



தேவரின் துயர்கள் தீர்த்த
தேவனை அடியார் போற்றும்
மாவையம் பதியில் வாழும்
மாப்பெரும் கடவுள் தன்னை
நாவெல்லாம் இனிக்கப்போற்றி
நயந்துமே பாடுவோர்க்கு
நோய்கள் போம் பிணிகள் மாறும்
கிடைதிடும் இனிய வாழ்வே!

அந்தணர்ச் சிறப்பும் கொண்டு
அருங்கலைச் சிறப்பும்கொண்டு
செந்தமிழ் சிறப்பும்கொண்டு
திகழ்ந்திடும் மாவைதன்னில்
நொந்தவர் நோதல் நீங்கி
நுவலரும் நன்மை காண்பர்.
வந்தனை செய்தோர் எல்லாம்
வரம் பெற்றார் உயர்வுபெற்றார்!



கார்த்திகைச் சிறப்பும் என்னே
கருணையே வடிவம் ஆனோன்
தேர்த்திருச் சிறப்பும் என்னே
சிறந்த நல் அடியார் சூழும்
தீர்த்தத்தின் சிறப்பும் என்னே
சிந்திப்போர் உயர்வு காண்பார்
வார்த்தைகள் கடந்த தெய்வ
வடிவினைப் போற்றுவோமே!

- புலவர்:ம.பார்வதிநாதசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org